658

குண்டூசி

அக்டோபர் 54. எட்டு அணா



Distributors: **A. V. R. A. & Co., Madras, Bombay.**

ராலிண்ட்

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

ஸென்-ராலே சைகிள்களுக்குப் பொருத்தப்படும் அசல் ராலே உறுப்புகளில் ராலிண்ட் என்ற இந்தப் பெயர் இருக்கின்றதா என்று கவனியுங்கள்.

இவ்வுறுப்புகள் எல்லாம் ஸென்-ராலே தொழிற்சாலையில் ராலே விவரணத் திட்டத்திற்கு சற்றும் வழுவாமல் தயாரிக்கப்பட்டு ராலே, ராபின்ஹூட், ரட்ஜ், மற்றும் ஹம்பர் சைகிள்களுக்கு பொருத்தமான அசல் உறுப்புகளாக இணைக்கப்படுகின்றன, எல்லா உறுப்புகளிலும் **RALIND**(ராலிண்ட்) என்ற பெயர் காணப்படும்.

ஸென்-ராலே

இண்டஸ்ட்ரீஸ்
ஆப்-இந்தியா
லிமிடெட்

SRX-22 TM.

ஸ்நானத்திற்கு
உகந்தது
அருணகிரி
விலாஸ்
சீயக்காய் பவுடர்

உணவிற்கு
ருசியும் சுசியும்
தருவது
எஸ்.
ஆர்
மிஸ்கி
பெருங்காயம்
EXTRA SUPERIOR
MISKY
S.R
ASAFOETIDA
எஸ்.ஆர்
S.R
CAMPHOR
ஜவ்வாது வத்தி
கற்பூரம்
பூஜைக்கு உகந்தது
BALAKRISHNA INDUSTRIAL WORKS.
MADRAS-13.
Sole Distributors :
M. P. S. R. & Bros
MADRAS—1.

குண்டூசி

ஆசிரியர்:
பி.ஆர்.எஸ்.கோபால்

எட்டாம் ஆண்டு

சென்ற செப்டம்பர் மாதத்துடன் நம் "குண்டூசி"க்கு ஏழு ஆண்டுகள் பூர்த்தியாகி, இந்த ஊசியில் இருந்து எட்டாம் ஆண்டு ஆரம்பமாகிறது.

நாம் கடந்து வந்துள்ள ஏழு ஆண்டுகளையும் திரும்பிப் பார்க்க—ஏன் நினைக்கக் கூடவே—பயமாயிருக்கிறது. அடேயப்பா, எவ்வளவு மேடு பள்ளங்கள்! எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள்! எவ்வளவு எதிர்ப்புகள்; பயமுறுத்தல்கள்! எவ்வளவு மனக் கசப்புகள்; ஒத்துழையாமை!

ஆனால், சரியான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து, நியாயத்தை நிலைநாட்ட முயலும் ஒருவனுக்கோ, அல்லது ஒரு ஸ்தாபனத்துக்கோ சினிமா உலகில் மட்டுமன்றி, வெளி உலகிலும் இதே போல் எதிர்பாராத சோதனைகளும், கஷ்ட நிஷ்டூரங்களும் ஏற்பட்டு வருவது சகஜந்தானே. இந்த எண்ணம்தான் எங்களுக்கு ஆறுதலை அளிக்கிறது. "பத்திரிகையின் ஆரம்ப வருஷங்களிலேயே இவ்வளவு பிரமாதமான கஷ்ட நஷ்டங்களைச் சமாளித்து நாம் தலை தூக்கி நிற்பதால் இனி எதிர்காலத்தில் இவ்வித சங்கடங்களையெல்லாம் சமாளிப்பதொன்றும் சிரமமாயிராது" என்ற தைரியம் எமக்கு ஏற்படுகிறது.

சென்ற ஏழு வருஷங்களில் சினிமா உலகம் பல துறைகளில் முன்னேறியிருக்கிறது. படங்களின் எண்ணிக்கையும், தரமும் எவ்வளவோ உயர்ந்திருக்கின்றன. நம்மவர்கள் அகில இந்திய மார்க்கெட்டில்கூட இடம் பெற்று விட்டனர் என்பதும் உண்மையே.

"வாழ்க்கை", "சந்திரலேகா", "சம்சாரம்", "வேலைக்காரி", "பாதாள பைரவி", "பராசக்தி", "ஔவையார்" போன்ற சில படங்கள் பிரமாதமான வசூலைப் பெற்றிருக்கின்றன. அதே சமயத்தில் அநேக படங்கள் படுதோல்வியையும் அடைந்துள்ளன. பொதுவாக, தயாரான மொத்தப் படங்களுள் வெற்றி பெற்ற படங்களின் சத விகிதத்தைக் கவனித்தால், வர வர வெற்றி விகிதாசாரம் குறைந்து கொண்டே வருவதை நாம் அறியலாம்.

பட உலகில் நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்தமாதிரி புதுப் பட முதலாளிகளாகக் குவிந்துள்ளனர். இவர்களில் அநேகர் படங்களை முடிக்க முடியாமல் தவிக்கின்றனர்; பலர் படத்தை முடித்து விட்டுத் தவிக்கின்றனர்; ஒரு சிலர் படம் முடிந்து விடாமலிருக்க வேண்டுமே என்றும் தவிக்கின்றனர்!

சென்ற ஏழு வருஷங்களில் எவ்வளவோ சினிமாப் பத்திரிகைகள் தோன்றி மறைந்திருக்கின்றன. நிலைத்து நிற்கும் பத்திரிகைகளோ ஆதரவின்றித் தவிக்கின்றன. சில பட முதலாளிகள் மட்டுமே படக



பட்டை–8 ஊசி–1 பிரதி–85
அக்டோபர் – 1954

கலை வளர்ச்சிக்கு சினிமாப் பத்திரிகைகள் அவசியம் என்பதை உணர்ந்து, அதற்கேற்றபடி கண்யமாக நடந்து வருகின்றனர்.

மற்றவர்களோ, தம்மையும் தம் படத்தைப் பற்றியும் பத்திரிகைகள் மனச்சாட்சிக்கு விரோதமாகப் புகழ்ந்து எழுத வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். நாம சில சந்தர்ப்பங்களில் படங்களைப் பற்றி பாதகமான விமர்சனம் எழுதியதற்காக, விளம்பரத்திற்கான பணத்தை மறுத்திருக்கிறார்கள் அதன் முதலாளிகள். ஆனால், நாம் பணத்திற்காகக் கொள்கையை விற்றதுமில்லை; விற்கப் போவதுமில்லை— என்று உறுதி கூறுகிறோம்.

முன்பெல்லாம் "விளம்பரம் கொடுக்க வில்லை" என்ற புகார் இருந்து வந்தது. ஆனால், தற்போதோ "பணம் கொடுக்கவில்லை" என்ற புகார்தான் சர்வ சகஜமாக இருந்து வருகிறது.

இந்தக் கஷ்டமான நிலைமைகளுக்கிடையேயும் "குண்டூசி" சென்ற ஏழு ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி பெற்று தலைசிறந்த சினிமாப் பத்திரிகையாக விளங்குகிறது என்றால் அதற்கு வாசகர்களும், ஏஜண்டுகளும், இதர பொருள் விளம்பரதாரர்களும் காட்டி வந்திருக்கும் பேராதரவு தான் முக்கிய காரணமாகும். ஆகவே, அவர்கள் எல்லோருக்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா	8 அணா
இலங்கை	50 சதம்
வெளி நாடு	12 அணா

கட்டுரையாளர்களுக்கு

'குண்டூசி'யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப் படுகின்றன. வெளியிடப்படுபவைகளுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்.

அங்கீகரிக்கப்படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர்களை முன்னதாகவே வைத்து அனுப்பவேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவைகள் நிஜ நபர் எவரையும் குறிப்பிடுபவை அல்ல. —ஆசிரியர்.

பரஸ்பரம்

சென்ற மாத ஊசியில் "குண்டூசி" தீபாவளி மலரைப் பற்றி ஒரு துண்டு விளம்பரம் வெளியிட்டிருந்தே னல்லவா? அச் சிறு விளம்பரமே நம் நேயர்களில் பலருக்கு மலரைப் பார்த்தது போன்ற உத்ஸாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. "இதோ எங்கள் ஊர் ஏஜண்டிடம் பதிவு செய்து கொண்டு விட்டோம்", "மலரைப் பற்றிக் கூறிவிட்டு இரண்டு மாதம் காக்க வைக்கிறீர்களே", "மலரைப்பற்றி ஏன் வேறு ஒன்றுமே எழுதவில்லை?" — இப்படி யெல்லாம் நேயர்கள் எழுதி யிருக்கின்றனர்.

நம் நேயர்கள் காட்டும் உத்ஸாகம் அத்தனைக்கும் நாம் செய்யக்கூடிய ஒரே கைமாறு—மலரை அவர்கள் எதிர்பார்ப்பதை விட உன்னத முறையில் தயாரித்து அளிப்பது தான்—என்று தீர்மானித்திருக்கிறேன்.

எந்த வருஷத்திலும் "குண்டூசி" தீபாவளி மலர் நேயர்கள் எதிர் பார்க்கும் அளவுக்கு ஒருபடி அதிகமாகவே இருந்து வந்துள்ளது. இந்த வருஷமோ நம் எட்டாவது ஆண்டு ஆரம்பமும், தீபாவளி சுபதினமும் அக்டோபர் மாதத்திலேயே சேர்ந்து வருவதால், இவ்வருஷ மலரைப் பற்றி அவர்கள் மேலும் ஒரு படி அதிகமாகவே எதிர்பார்க்கலாம். எம் வாக்குறுதியில் நேயர்களுக்குப் பூரண நம்பிக்கை உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம்.

அழகிய ஆர்ட் பேப்பரில் அற்புத வர்ண ஜாலங்களுடன் அச்சாகிக் கொண்டிருக்கிறது நம் தீபாவளி மலர். சுமார் 220 பக்கங்கள் கொண்ட இம் மலரின் விலையை நாம் இவ் வருஷமும் அதிகரிக்கப் போவதில்லை; மூன்று ரூபாய்க்கே அளிப்பது என்று தீர்மானித்திருக்கிறோம். தபாலில் பெற விரும்புவோர் 10 அணா சேர்த்து அனுப்பவும்.

மலர் நிச்சயமாகக் கிடைக்க வேண்டுமானால் இப்பொழுதே ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். "இது நீங்கள் வருஷா வருஷம் பாடும் பல்லவி ஆயிற்றே?" என்று நீங்கள் கேட்கலாம். உண்மை தான். ஆனால், வருஷா வருஷம் ஆயிரக் கணக்கான நேயர்கள் மலர் கிடைக்காமல் ஏமாறுவது வழக்கமாய் இருப்பதனால் இந்த வழக்கமான பல்லவியையும் பாடவேண்டி யிருக்கிறது.

நவம்பர் மாதம் 1-ந்தேதி வெளிவர வேண்டிய சாதாரண ஊசியே இவ் வருஷம் மலராக மலர்ந்து அக்டோபர் மாதம் 25ம் தேதிக்குள் எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

அநேக நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்க தீபாவளி மலரில் "சங்கமம்" தொடர் கதைப் பகுதியை வெளியிடப் போவதில்லை. அதற்கு அடுத்த—டிஸம்பர்—மாதம் முதல் இக் கதை தொடர்ந்து வெளிவரும்.

வழக்கம் போல் நான் உங்களிடம் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்று உண்டு. அது மலர் பற்றிய உங்கள் மதிப்புரை தான். அதை மறக்காமல் எழுதி அனுப்பி எனக்கு உத்ஸாகம் அளியுங்கள்.

நறுமண உலகின் மூவேந்தர்கள்

சேரன் சோழன் பாண்டியன் K.T.R ஜவ்வாஜி பத்திகள்

K.T.R வாசனுதி திரவிய சாலை விஜயபுரம், தஞ்சை ஜில்லா.

புதுப் படங்கள்

மதுரை, பரணி பிக்சர்ஸார் "புருஷன்-பெண்டாட்டி" என்ற சமூகப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். இப் பட ஆரம்ப பூஜையை நடத்தியிருக்கிறார்கள். அய்யம்பேட்டை எஸ். பி. ஆர். சாரங்கன் என்பவர் எழுதிய கதை இது.

ஆர். ஆர். பிக்சர்ஸார் தங்களது மூன்றாவது தயாரிப்பாக "குலே பகாவலி" கதையைப் படமாக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். ராமண்ணா டைரெக்ஷனில் தயாராகும் இப்படம் அடுத்த பொங்கல் நன்னாளில் திரையிடப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படத்தின் வசனங்களையும் பாட்டுகளையும் தஞ்சை ராமய்யாதாஸ் எழுதுகிறார். எம். ஜி. ராமச்சந்திரன், அஞ்சலி தேவி, தங்கவேலு ஆகியோர் படத்தில் நடிப்பார்களாம்.

ஹாஸ்ய நடிகர் டி. ஆர். ராமச்சந்திரன், தமது சொந்தத்தில் டி. ஆர். ஆர். பிக்சர்ஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். "ஆனந்த விகடன்" பத்திரிகையின் பொறுப்பாசிரியர் "தேவன்" எழுதியுள்ள "கோமதியின் காதலன்" என்ற நாவலை இவர் முதலில் படமாக்கப் போகிறார். ஆயிரக் கணக்கான வாசகர்களை மகிழ்வித்துள்ள இந்த நாவல், தமிழ்நாட்டில் மட்டுமன்றி, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலும் பலமுறை நாடகமாக நடிக்கப்பட்டுள்ளது. கே. சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன், கே. ஏ. தங்கவேலு மூவரும் இப் படத்தில் நடிப்பது நிச்சயமாகிவிட்டது. கோமதியாக நடிக்க ஒரு பிரபல நடிகையை ஏற்பாடு செய்ய முயற்சி நடந்து வருகிறது. படத்தை ப. நீலகண்டன் டைரெக்ட் செய்வாராம்.

மாடர்ன் தியேட்டர்ஸார் அடுத்தபடி "மஹேஸ்வரி" என்ற சரித்திர சம்பந்தமான கதையை படமாக்கப் போகிறார்கள். இப்படத்தின் கதை, வசனங்களை ஏ. பி. நாகராஜன் எழுதியிருக்கிறார். எம். ஜி. ராமச்சந்திரன் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ள இப் படத்தில் கதாநாயகியாக ஜி. வரலக்ஷ்மி நடிக்கலாமெனத் தெரிகிறது. இப்படம் கே. ராம்னாத் டைரெக்ஷனில் தயாராகும். இது தவிர, எஸ். டி. சுந்தரம் எழுதி நாடகமாக நடிக்கப்பட்டு வரும் "டாக்டர்" கூட "மிஸ்டர் மேதாவி" என்ற பெயரில் இவர்களால் படமாக்கப்படுமாம்.

ஸிடாடல் ஸ்டுடியோவில் சென்ற மாதம் 9ம் தேதி அதிக ஆடம்பரமின்றி ஒரு படத்தின் ஆரம்ப வேலை நடைபெற்றுள்ளது. டி. ஆர். ரகுநாத் டைரெக்ஷனில் தயாராகப் போகும் இப் படத்தில் மனோஹர், டி. எஸ். பாலய்யா, பண்டரிபாய் ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கவிருக்கின்றனர். இப்படம் பொங்கல் வெளியீடாக இருக்குமாம். திருநெல்வேலியைச் சேர்ந்த ஒரு பிரபல பிரமுகர் இப் படத்தின் வளர்ச்சியில் அக்கரை காட்டுகிறாரென்று தெரிகிறது.

ஜூபிடர் பிக்சர்ஸார் "வேலைக்காரி" யைத் தெலுங்கிலும் ஹிந்தியிலும் படமாக்கப் போகிறார்கள். அதற்கான பூஜையை சென்ற மாதம் நடத்தியிருக்கிறார்கள். தெலுங்குப் படத்தில் நடிக்க அஞ்சலி தேவி நாகேந்திர ராவ் ஆகியோர் ஒப்பந்தமாகியுள்ளனர். ஹிந்திப் படத்தில் நடிக்க யாகூப் ஒப்பந்தமாகியுள்ளதாகவும் தெரிகிறது. இப் படங்களை பிரஸாத் டைரெக்ட் செய்யக் கூடும் எனத் தெரிகிறது.

டைரெக்டர் ஆர். எஸ். மணி தமது சொந்தத்தில் ஒரு படத் தயாரிப்புக் கம்பெனியை ஆரம்பித்துள்ளார். அவர் தாம் எழுதியுள்ள ஒரு சமுகக் கதையை முதலில் படமாக்கப் போகிறார்.

தென்னிந்திய திரைப்பட உலகத்தில் நீண்ட கால அனுபவம் உள்ள மேக்-அப் நிபுணர் டி. கே. முகுந்தகுமார் ஸ்ரீ ஸௌபாக்யா பிலிம்ஸ் என்ற பெயரில் புதுக் கம்பெனி ஒன்றை ஆரம்பித்திருக்கிறார். இக் கம்பெனியார் முதன் முதலாகத் தயாரிக்கப் போகும் படம் "பைரவ தந்திரம்" என்ற கிராமியக் கதை. இக்கதையில் உணர்ச்சி மிகுந்த கட்டங்கள் நிரம்ப இருக்குமாம். தியாகராயநகர் பர்கிட் ரோடில் உள்ள மேற்படி கம்பெனியின் காரியாலயத்தில் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற படத் துவக்க விழாவுக்கு சினிமா தொழிலைச் சேர்ந்த பிரபலஸ்தர்களும், நக்ஷத்திரங்களும் விஜயம் செய்திருந்தார்கள். இப் படத்தில் பல பிரபல நக்ஷத்திரங்கள் நடிப்பார்கள் என்று தெரிகிறது.

என்.டி.ராமராவ்

வாழ்க்கை வர்ணனை

"உத்தியோகம் புருஷ லக்ஷணம்" என்று ஒரு பழமொழி உண்டு. இது முக்கியமாக சர்க்கார் உத்தியோகத்தைக் குறித்துத் தான் சொல்லப் பட்டிருக்க வேண்டும். ஏனென்ருல், சர்க்கார் உத்தியோகம் தான் உண்மையில் உத்தியோகம் என்று அந்நாள் முதலே கருதப்பட்டு வருகிறது. ஏன், இந்தக் காலத்தில் கூட சர்க்கார் உத்தியோகத்திற்கு மதிப்புக் குறைந்துவிடவில்லையே. இதைப் பெறுவதற்காக எவ்வளவு போட்டிகள? பரீக்ஷைகள், அடடா! இதைப் பெற்றவுடன் அந்த நபர் அடையும் ஆனந்தமும், அமைதியும் கொஞ்ச நஞ்சமா? அலை கடல் வாழ்க்கையில் அவதியுற்று வந்த தன் எதிர்காலக் கப்பலுக்கு உறுதியான நங்கூரம் பாய்ச்சப்பட்டது போன்ற மனச்சாந்தி!

ஆனல், உண்மையில் இது எதிர்கால வாழ்க்கை பற்றிய ஆவல், கற்பனை, முயற்சி இவற்றிற்கெல்லாம் ஒரேயடியாய் முடிவு கட்டும் அடிமைத்தளையல்லவா? வயிற்றுப் பிழைப்பிற்கு ஊர்ஜிதமான ஒரு ஏற்பாடு ஆகிவிட்டது வாஸ்தவந் தான். ஆனல், இந்த உழவு மாட்டு உத்தியோகத்தில் நிமிர்ந்து பார்க்க நேரமோ, கற்பனை செய்ய சுதந்திரமோ ஏது? மேலதிகாரியின் சவுக்கிற்குச் சதா பயந்தபடி "வணக்கம் மிக்க ஊழியனுக" வாழ்நாளைக் கழிக்க வேண்டியவன் தானே இவன்? கற்பனையும், கலைத் திறனும், வற்ருத முற்போக்கு எண்ணமும், விடா

"மலைக்கள்ளன்"
(தெலுங்கு)

முயர்சியும் கூடிய லக்ஷியவாதிகள் சிலரும் இந்த அடிமைப் படையில் தெரியாத்தனமாய் சேருவதுண்டு. ஆனால், சிறிது காலத்திற்குள்ளாகவே அவர் தம் தவறை உணருவார்; ஒவ்வொரு நாளைக் கழிப்பதும் ஒரு யுகம் போல் ஆகிவிடும் அவருக்கு. கடைசியில் தம் மனப் போராட்டங்களுக்கு ஒரு முடிவு கட்டிக்கொண்டு தம் அடிமை உத்தியோகத்திலிருந்து விடுபடுவார்.

உதாரணமாக, தமிழ் தெலுங்குப் படங்களின் மூலம் பிரபலம் அடைந்துள்ள என். டி. ராமராவை எடுத்துக் கொள்ளுங்கள். மிகுந்த அக்கறையுடன் படித்து பி. ஏ. பட்டம் பெற்ற அவருக்கு உடனடியாக சப்—ரிஜிஸ்திரார் உத்தியோகமும் கிடைத்தது. ஆனால் மூன்றே வாரங்களில் அவருக்கு இந்த உத்தியோகத்தில் சலிப்பேற்பட்டுவிட்டது. யாரோ, யாருக்கோ பணம் கொடுப்பதற்கெல்லாம்—தமக்குத் தம்பிடி வருமானம் இல்லாமல்—வெறுமனே கையெழுத்துப் போட்டுக் கொண்டிருப்பது சலிப்பாக இருந்தது. அதனால் தாம் கையெழுத்துப் போடுவதற்குத் தமக்கே பணம் கிடைப்பதான—கற்பனைக்கும் புகழுக்கும் பிரமாதமான வசதிகளுள்ள—சினிமாத் தொழிலில் (சப்—ரிஜிஸ்திரார் உத்தியோகத்தை ராஜினாமா செய்துவிட்டு) —ஒரு நடிகராக ஈடுபட்டார். சப்—ரிஜிஸ்திரார் உத்தியோகத்தோடு அவர் திருப்தியடைந்திருந்தாரானால் இன்று இவ்வளவு புகழும் பணமும் பெற்று நக்ஷத்திரமாக விளங்க முடியுமா?

கிருஷ்ணா ஜில்லாவிலுள்ள **நெம்மக்கூர்** என்ற கிராமமே நம் ராமராவின் சொந்த ஊராகும். அந்த ஊரில் ஒரு மிராசுதாரராய் இருந்த லக்ஷமய்யாவுக்கும் வெங்கட ராவம்மாவுக்கும் முதல் புத்திரராய் பிறந்தவர் ராமராவ். 1923-ம் வருஷம் ஜூன் மாதம் 15-ந் தேதி பிறந்தவரான ராமராவுக்கு ஒரே ஒரு தம்பி மட்டும் தான் உண்டு; அவரது பெயர் திருவிக்கிரம ராவ். அவ

"மாயா ரம்பா" படத்தில்

ரும் தற்போது ராமராவுடனேயே சென்னையில் வசித்து வருகிறார். ராமராவைப் பெற்றோர் மிகச் செல்வமாக வளர்த்து வந்தார்கள் என்று நான் கூறவேண்டியதில்லை. செல்வமாக வளர்க்கப்படும் பிள்ளைகள் அநேகமாக படிப்பில் மட்டமாகப் போய்விடுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இந்த விதிக்கு ராமராவ் ஒரு விலக்காவார். அவர் படிட்பில் சிறு வயது முதலே மிக அக்கறை காட்டி வந்தார். அதோடு அவரிடம் நல்ல வழக்கங்களும் படிந்து வந்தன. படிப்பு, குணம் இரண்டும் ஒருங்கே பொருந்திய ராமராவிடம் ஆசிரியர்கள் தனி அபிமானம் காட்டியதுடன், மற்ற பிள்ளைகளுக்கு ராமராவை உதாரணமாகவும் கூறுவார்களாம். இதனால் வகுப்பு மாணவர்களுக்கு இவர் மீது பொறுமை ஏற்பட்டது உண்டாம். கிராமப் பள்ளியில் ராமராவ் ஐந்து வகுப்புகளில் தேறிய பின்னர், அவரது மேற்படிப்பு காரண

''மருமகள்'' தெலுங்கு.

''பணம் படுத்தும் பாடு'' தெலுங்கு.



மாகவே பெற்றோர் விஜயவாடாவுக்கு வாசஸ்தலத்தை மாறறிக் கொண்டனர். விஜயவாடா பள்ளியில் சேர்ந்த பின் ராமராவ் படிப்பில் மேலும் அதிக சிரத்தை காட்டலானார். படிபபில் மட்டுமன்றி இதர விஷயங்களிலும் அவரது ஊக்கம் செல்லலாயிற்று. பள்ளிக்கூட விளையாட்டுகளிலும், நாடகங்களிலும் அவர் "நான்" என்று முன் வந்து உற்சாகமுடன் கலந்து கொள்ளுவார். அந்த சமயத்தில் விஜயவாடாவில் "நவஜோதி அமெச்சூர் ஆர்ட்ஸ்" என்றெரு கலைக் கழகம் நடந்து வந்தது. அதில் அந்த நகரப் பிரமுகர்களும் பல பள்ளி மாணவர்களும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து, அடிக்கடி

''சௌகார்'' தெலுங்கு.

''சங்கம்'' தெலுங்கு

நாடகங்களை நடத்தி வந்தனர். பள்ளி நாடகங்கள் மூலம் நடிப்பில் ஏற்பட்ட ஆசை காரணமாக ராமராவ் அச் சங்கத்தில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்தார். அவர் படிப்பில் குன்றுத அக்கறை காட்டி வந்த

ததால், அவர் நாடகங்களில் நடிக்க விரும்பியதை பெற்றோர் ஆட்சேபிக்க வில்லை.

பள்ளிப் பாடங்களைத் தலைகீழாக மன னம் செய்வதில் மிகத் தேர்ந்திருந்த ராமராவுக்கு நாடக வசனங்களை மன னம் செய்வது கொஞ்சம்கூட சிரமமாக இருக்கவில்லை. அதோடு அவர் நல்ல



உடற் தோற்றத்தையும் பெற்றிருந்தத ஞல் கழகத்தினர் அவருக்கு முக்கிய மான பாத்திரங்களைக் கொடுத்து நடிக் கச் செய்தனர். இதன் மூலம் ராமராவுக் கும் அக் கழகத்தினருக்கும் நிறையப் புகழ் ஏற்படலாயிற்று.

இதுமாதிரி ஒருவருக்கு நடிப்பு மூலம் புகழ் ஏற்படும்போது படிப்பு மீது அசி ரத்தை ஏற்பட்டு, படிப்பை நிறுத்தி விட்டு நாடகத்தில் ஈடுபட்டு விடுவதே சகஜம். ஆனல் ராமராவ் "பி. ஏ." பட் டம் பெறுவதைத் தம் லக்ஷியமாகவும் நடிப்பதைத் தம் பொழுதுபோக்காக வும் கருதி அதற்கேற்றபடி நடந்து வந் தார். அவரது லக்ஷியம் 1947ல் ஈடேறி யது; அவரது பெற்ருேர் பரமானந்தம் அடையும் வண்ணம் பி. ஏ. பட்டத் துடன் கல்லூரியிலிருந்து விலகினர்.

கல்லூரியிலிருந்து விலகிய பின்னர் கூட அவர் நடிப்பைத் தம் தொழிலா கக் கொள்ள வேண்டுமென்று முயற்சிக்கவில்லை. பெற்ருேர் விருப்பப்படி அவர் அரசாங்க உத்தியோகம் பெறுவதற்கு விண்ணப்பம் அனுப்பினர்.

இதற்கிடையில் தற்போது பிரபல டைரெக்டராக விளங்

கும் பிரசாத் சாரதி பில்ம்ஸார் தயாரிக்க விருந்த "ஸ்ரீமதி" படத்திற்கு நடிகர்களைத் தேர்ந் தெடுப்பதற்காக விஜயவாடா வுக்கு வந்தார். நவஜோதி அமெச்சூர் கழகத்தின் வளர்ச் சியில் மிக அக்கரை கொண்டி ருந்த மணியம் என்பவர் பிர சாத்தின் ஆப்த நண்பராவார். பிரசாத் தம் விஜயத்தின் நோக்கத்தை மணியத்திடம் கூறி, படங்களில் நடிப் பதற்குத் தகுதியான வாலிபர்கள் இரு ந்தால் தெரிவிக்கும்படிக் கேட்டார். அதன் பேரில் மணியம் ராமராவை வர வழைத்து பிரசாத்திடம் அறிமுகப்படு த்தி வைத்தார். "ஸ்ரீமதி" படத்தில் ராமர் வேஷத்திற்கு ராமராவை எடுத் துக்கொள்ளுவதாகக் கூறிவிட்டு ஊர் திரும்பினர்.

[தொடர்ச்சி 70-ம் பக்கம்]

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகப் பதில் அளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.

எஸ். பி. நாதன் (மதுரை)

தமிழ்ப் பின்னணிப் பாடகர்களில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

“பிரமாதம்” என்று புகழக் கூடிய வகையில் நம் பின்னணிப் பாடகர்கள் யாருமே பாடவில்லை. உள்ளவர்களுக்குள் ஏ. எம். ராஜா, டி. எம். சௌந்தரராஜன் இவர்கள் இனிமையாகப் பாடுகின்றனர்.

த. வை. லிங்கம் (காத்தான்குடி)

தற்போதைய நடிகைகளுள் “கிருஷ்ண குமாரிதான் அதிக அழகுள்ளவர்” என்று என் நண்பர் கூறுகிறார். இன்னொரு நண்பர், “பத்மினிதான் மிக அழகுடையவர்” என்கிறார். ஆனால் நானே “சாவித்திரியே சிறந்த அழகி” என்று கருதுகிறேன். எங்கள் மூவரில் யார் நினைப்பது சரி?

அழகானது கண்ணுக்குக் கண் வித்தியாசப்படுவதும்; மனத்திற்கு மனம் மாறுதலாய் தோன்றுவதும் சகஜமே. உங்களிடையே மட்டுமென்ன; நீங்கள் குறிப்பிட்டிருக்கும் மூன்று அழகிகளுக் கிடையே கூட இந்த மாதிரியான அபிப்பிராய பேதங்கள் இருக்கத்தான் செய்யும்! ஆதலால் அழகு விஷயத்தில்மாத்திரம் அவரவர்கள் நினைப்பதே சரி.

“பெண்ணரசி”யில் ஏ. பி. நாகராஜனும், சூர்யகலாவும்.

அசோகா பிக்சர்ஸின் ''என் மகள்'' தமிழ்ப் படத்தில் எஸ். வரலக்ஷ்மியின் ஒரு தோற்றம்

பி. ஆர், மாலா (சர்புரா, பீஹார்)

எனது சிநேகிதர் கிருஷ்ணன் அவர்கள் சாவித்திரியை கல்யாணம் செய்து கொள்ளுவதாக கனவு கண்டாராம். இக் கனவு பலிக்குமா ?

கனவு காண்பது—நம் அரசியல் நிர்ணய சட்டத்தில் கூறப்படாத—ஒரு தனி நபர் சுதந்தரமாகும். கனவில் தோன்றுபவை அநேகமாகப் பலிக்காமலிருக்கும் போதே இப்படி அநேகர் கனவு காண்பதை ரஸிக்கிறார்கள். கனவு பெரும்பாலும் பலிப்பதாயிருந்தாலோ? இது ஒருபுற மிருக்கட்டும்; நம் நக்ஷத்திரங்களுக்கு சர்க்கார் விதிக்கும் ஏராளமான வருமான வரியைக் கொஞ்சம் குறைத்து, இதுபோல் கனவு காண்போரிடம் அதை வசூலிக்கலாம் என்று தோன்றுகிறது.

டி. ஜி. வெங்கடேசன் (ஆரணி)

நான் ஜெமினி கணேசனுக்கு கடிதம் எழுதினேன் பதில் கிடைக்கவில்லை. சிவாஜி கணேசனுக்கு எழுதினால் அவராவது பதில் போடுவாரா ?

உங்கள் ஊர்க் கோயிலில் கொம்பை முறித்துக் கையில் வைத்துக்கொண்டு பதில் எழுதத் தயாராகக் காத்திருக்கும் கணேசனைப் புறக்கணித்து விட்டு இந்த கணேசர்களை நாடினீரே நீர்! இவர்கள் மூச்சுவிடக் கூட அவகாசம் இல்லாதவர்களாயிற்றே!

எஸ். என். பழநியப்பன் (கெச்சிகட்டி)

பி. எஸ். சரோஜாவுக்கு பாடத் தெரியுமா ?

ஏன், அவர் பேசும்போது தொண்டை கட்டிக் கொண்டமாதிரி இருககிறதோ? அவருக்குப் பாடத் தெரியாது; ஆனால் ஆடத் தெரியும்.

பி. சுப்பய்யா (இந்துக்கொல்லை)

சாவித்திரியின் சொந்த ஊர் எது ? அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதா ? அவருடைய கணவர் பெயர் என்ன ? குழந்தைகள் உண்டா ?

சாவித்திரியின் சொந்த ஊர் பெஜவாடா, அவருக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லை. அவருடைய சினிமா வாழ்க்கையின் இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தலாவது இவ்விஷயம்



அலுப்பு மனிதனை வெல்கிறது

தேநீர்

அலுப்பை
வெல்கிறது

PSTB 126

தேயிலை போர்டு வெளியிட்டது

சென்ற மாதம் 19ந் தேதி தஞ்சை ஜில்லா உக்கடை ஸ்ரீ. அப்பாவு தேவர் தமக்குச் சொந்தமான 60 ஏகர் நிலத்தை பூதானம் செய்தார். ஸ்ரீ. காமராஜ நாடார் இந்த நிலத்தை 60 பேர்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் விநியோகித்தார். ஸ்ரீ. சங்கரராவ் தேவ் ஸ்ரீ. தேவருக்கு ஆசி கூறினர். பிரடல சாருபாலா சகோதரிகள் கடவுள் வணக்கம் பாடினர்.

சேர்க்கப்படுமா என்பது எனக்குத் தெரியாது.

எஸ். ஆர். என். ரபாய்
(பேராதனி, இலங்கை)

எம். ஜி. ராமச்சந்திரனின் விலாசத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

"160 லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14"—என்பது அவருடைய விலாஸம்.

பி. மணி (பூனா)

பண்டரி பாயும், மைனாவதியும் உடன் பிறந்த சகோதரிகளா?

இல்லை. இவர்கள் சிவ வருஷ வித்தியாசத்தில் முன் பின்னாக ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் ஆவர்.

"சினிமா ரஸிகை" (திண்டுக்கல்)

புஷ்பவல்லி, சூர்யபிரபா, லக்ஷ்மி பிரபா, எம். சரோஜா இவர்கள் நால்வரும் ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதரிகளா?

இல்லை, முதலிருவரும் கடைசியிருவரும் சகோதரிகள்.

எஸ். வெங்கடாசலம் (காளஹஸ்தி)

ஈ. வே. ரா. சமீபத்தில் பிள்ளையாரை உடைத்தாரே. அவருக்கு சிதம்பரம் கோயிலில் கட்டளை இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

தெரியாது. அனால் ஒருவேளை அவர்—"அப்பனைத் துதிக்கும் மனத்தால் அவனது கரிதலைப் பிள்ளையைத் துதிக்காத" கோஷ்டியைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்! குழந்தைகளும் கிழவர்களும் பல விஷயங்களில் ஒன்றென்பது உமக்குத் தெரியாதா? குழந்தைகள் விளையாட்டுப் பொம்மைகளை உடைப்பதுபோல் இக்கிழவனர் கடவுள் பொம்மைகளை உடைப்பதில் பொழுது போக்குகிறார்! இதற்காக நீர் ஏன், பாவம், உம் மண்டையை உடைத்துக் கொள்ளுகிறீர்?

ஆர். நாச்சியப்பன்

என். எஸ். கிருஷ்ணன், கே. சாரங்கபாணி—இவ் விருவரில் மிக மிக ஹாஸ்யமாக நடிப்பவர் யார்?

என். எஸ். கே. முன்பெல்லாம் ஹாஸ்யமாக நடித்து வந்தது உண்மையே. அனால், தற்போது சாரங்கபாணியே சிறந்த



சென்னை அபிராமபுரம் மாதர் சங்கத்தின் சார்பில் சென்ற மாதம் 5ந் தேதி வனமாலா, மாலதி இருவரும் அழகாக நடனம் ஆடினார்கள்.

ஹாஸ்ய நடிகராய் கொண்டாடப் பட்டு வருகிறார்.

க. ராமலிங்கம் (மதுரை)

ஒரு படத்தில் கடவுள் வேஷம் தாங்கி நடிக்கும்படிக் கூறியதனால் சிவாஜி கணேசன் அந்தப் படத்திலேயே நடிக்க மறுத்து விட்டாராமே ?

இருக்கலாம். ஆனால், "கடவுள் வேஷங்களை தாங்கி நடிப்பதற்குத் தமக்குத் துளிக்கூட அருகதையில்லை" என்று அவர் கருதுவதில் தவறென்ன இருக்கிறது?

வி. குமாரசாமி (மணச்சநல்லூர்)

பண்டரிபாயின் வீட்டு விலாஸத்தை நான் அறிய விரும்புகிறேன்.

"நெ. 7 சரவண முதலிதெரு, தியாகராய நகர், சென்னை-17" என்பது அவரது இல்லத்தைக் குறிக்கும் விலாஸமாகும்.

கே. சுப்பய்யா (ரிஷபம்)

"இளங்கோவன்" வசனம் எழுதிய படங்களுள் சிறந்தது எது ? அவரது விலாஸத்தையும் தெரிவிக்கவும்.

"இளங்கோவனி"ன் வசனம் மிகச் சிறந்து விளங்கியது "கண்ணகி" "மஹாமாயா" ஆகிய படங்களில் ஆகும். அவரது விலாஸம்: "இளங்கோவன், கீழ்ப்பாக்கம், சென்னை" என்பது.

* * *

நம் நடிகர்கள் செய்யும் சில நல்ல காரியங்களைக் கூறவும்.

அநேகமாக எல்லோரும் ரஸிகர்களின் தபால்களுக்கு பதில் எழுதமாட்டார்கள்! "வெளியே சென்றால் அபிமானிகள் சூழ்ந்துகொண்டு விடுவார்கள்" என்று கற்பனை செய்துகொண்டு வீட்டிலேயே அடைபட்டுக் கிடப்பார்கள்! பிறர் நடிக்கும் படங்களை மட்டுமன்றி தாம் நடிக்கும் படங்களையே சிலர் பார்ப்பது கிடையாது! தமக்கு கிராக்கி குறையும் போலிருந்தால் நாடகக் கம்பெனியோ சினிமாக் கம்பெனியோ ஆரம்பித்து விடுவார்கள்!

எஸ். ஷண்முக சுந்தரம் (கோவை)

டி. கே. சம்பங்கி டி. கே. எஸ். சகோதரர்களுள் ஒருவரா ?

ஸ்ரீ முருகன் நவகலா பில்ம்ஸாரின் ''அஹங்கார ஸ்திரீ'' என்ற சிங்களப் படம் சென்ற மாதம் 17ந் தேதி முதல் இலங்கையில் காட்டப்பட்டு வருகிறது. அந்தப் படத்தில் இது ஒரு காட்சி.



இல்லை; அவர்கள் மாதிரி இவரும் ஒரு பழுத்த நடிகர். அடுத்தாற்போல் நீர் கேட்காமலே கூறிவிடுகிறேன்: டி. கே. ராமச்சந்திரனும் டி. கே. எஸ். சகோதரர்களுள் ஒருவரல்ல.

வி. பி. வேலு (திருச்சி)

வைஜயந்திமாலா, லலிதா, பத்மினி இவர்களுள் சாஸ்திரிய நடனத்தில் திறமை மிக்கவர் யார்?

வைஜயந்தி பரத நாட்டியத்தில் விசேஷப் பயிற்சி உடையவர். ஆனால் லலிதா—பத்மினி சகோதரிகள் ஓரியன்டல் நடனத்தை சோபிதமாய் ஆடுவதில் இணையற்றவர்கள்.

பி. என். கிருஷ்ணமூர்த்தி (கோபிசெட்டிபாளையம்)

''சொர்க்க வாசல்'' படம் வெற்றிபெறுவது எதனால்?

வைகுண்ட ஏகாதசியன்று திறக்கப் படாதது காரணமா யிருக்கலாம்!

கிருஷ்ணமூர்த்தி (திருச்சி)

வைஜயந்தி, அஞ்சலி, பத்மினி, ராகினி—இந்நால்வரில் நடிப்பில் சிறந்தவர் யார்?

அஞ்சலியைத்தான் கூறுவேன்.

''பரணி'' (யாழ்ப்பாணம்)

உறவுமில்லை; பகையுமில்லை; ஒன்றுமில்லை. உள்ள தெல்லாம் சாவித்திரியே அல்லால் வேறில்லை......

நல்ல மனிதரய்யா, நீர். சாவித்திரியை மணந்து கொண்டபின் உயிரை விடும் சத்தியவான் ஆவதற்குப் பதில் அவளை நினைத்தே உயிரை விடத் தொடங்கி விட்டீரே!

வி. எஸ். காளிஸ்வாமி (துடியலூர்)

நீங்கள் வெளியிட்டு வரும் ''சங்கமம்'' கதையை அப்படியே படம் பிடிக்கலாம் போல் அவ்வளவு நன்றாக இருக்கிறது. ஆனால், இதைப் பத்திரிகையில் தொடர்ச்சி போடாமல் வெளியிட்டால் மிக நலம்.

தொடர்ச்சி பார்த்துப் படிப்பதில் கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும், நடுக் கம்பிகளைப் பிரித்துவிட்டு, பைண்ட் செய்ய எடுத்துக் கொள்ளுவதற்கு சௌகரியமா யிருக்கும் என்றே இப்படி வெளியிடுகிறோம்.

கே. முருகேசன் (சிதம்பரம்)

''நால்வர்'' புகழ் ஏ. பி. நாகராஜனின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

ஏ. பி. நாகராஜன், C/o எம். ஏ. வி. பிக்சர்ஸ், ஸென்ட்ரல் ஸ்டுடியோ, கோயமுத்தூர்—என்று எழுதும்.

கே. சங்கர் (ஈராகுட்டம்)

''வனமோஹினி'' படத்தில் நடித்துள்ளவர் எம். கே. ராதாவா, எம். ஆர். ராதாவா?

எம். கே. ராதாதான் அப்படத்தில் நடித்திருக்கிறார்.

எம். எஸ். போடி (இலங்கை)

கிருஷ்ண குமாரியின் வாழ்க்கை வர்ணனையை நீங்கள் எத்தனைதரம் பிரசுரித்திருக்கிறீர்கள்?

ஒரே ஒரு முறைதான். எந்த நடிகரானாலும், நடிகையானாலும் சரி; நாம் ஒரே ஒரு முறைதான் வாழ்க்கை வர்ணனை வெளியிடுவோம். நீர் மனதில் வேறு ஏதோ ஒரு பத்திரிகையை நினைத்துக் கொண்டு, தவறான இடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டீர்!

ஜி. எம். கே. ஸ்வாமி (பொள்ளாச்சி)

''போனமச்சான் திரும்பிவந்தான்'' படத்தைத் தயாரிப்பவர் யார்?

முன்பு பல வருஷங்கள் ஜூபிடர் பிக்சர்ஸில் மானேஜராயிருந்தவரும், பு. ஆர். ஜீவரத்தினத்தின் கணவருமான டி. எஸ். வெங்கடஸ்வாமிதான்.

காந்தீயப் பாதை

அலெக்ஸாண்டர் மார்க்கி என்பவர் "காந்தியப் பாதை" ("காந்தி பாத்") என்ற படத்தைத் தயாரித்திருக்கிறார். பிரபல ஹாலிவுட் தயாரிப்பாளரும், டைரெக்டருமான அலெக்ஸாண்டர் மார்க்கி ஒரு காந்தி பக்தர். எழுத்தாளராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கி, தமது முயற்சியினாலும், திறமையினாலும உயர்ந்தவர் அவர். நியூ யார்க் நகரில் பல நாடகங்களைத் தாமே எழுதி தாமே நடத்தியிருக்கிறார். யுனிவர்ஸல் பிலிம்ஸ், பாக்ஸ், யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ், ஆர். கே. ஓ., போன்ற படத் தயாரிப்பு ஸ்தாபனங்களில் பொறுப்பான வேலைகளைச் செய்து கொடுத்திருக்கிறார். பல சிறந்த ரேடியோ நாடகங்களைத் தயாரித்து நடத்தியிருக்கிறார். அகில உலகப் புகழ் பெற்ற "விசில்" என்ற படத்தைத் தயாரித்தவர் இவர் தான். ஹாலிவுட்டின் பிரபல பத்திரிகையான 'ஸ்பெக்டேட்டர்', "படத் துறையிலே மிகச் சிறந்த பிரமுகர்" எனப் புகழ்ந்து போற்றி எழுதியிருக்கிறது இவரை.



அலெக்ஸாண்டர் மார்க்கி

"காந்தீயப் பாதை" என்ற இப்படம் ஹிந்தி-ஆங்கிலம் ஆகிய இரு பாஷைகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. நம் புராதன சிறந்த புத்திமதிகளான காந்தியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்படி படத்தைத் தயாரித்திருக்கிறார். (1) பயம் வெறுப்புக்கு ஆளாக்குகிறது. வெறுப்பு ஹிம்ஸையில் முடிகிறது. (2) ஹிம்ஸை முறையில் உலகில் எந்தப் பிரச்னையும் தீர்ந்ததில்லை. (3) ஒருவரையும் புண்படுத்தாமல் இருப்பதே சிறந்த மார்க்கம். (4) மனிதத் தன்மை போன்ற மாறும் தன்மை வேறு எதற்கும் கிடையாது. (5) நல்லதையே நினைக்கும்போது நாம் தீமையை வெற்றி கொள்கிறோம்—என்ற இந்த ஐந்து பொன் மொழிகளையும் அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கும் கதை. ராஜ் கமல் கலா மந்திர் ஸ்டுடியோவில்

காந்தீயப் பாதை படத்தில் நீங்கள் இந்தக் காட்சியைக் காணலாம்.

தயாராகியுள்ள இப் படத்தில் தாகூரின் பேத்தியான நான்திதாவும் நடித்திருக்கிருர்.

ஆகஸ்ட் மாத இறுதியில் ஒரு நாள், இப் படத்தைத் தயாரித்துள்ள அலெக்ஸாண்டர் மார்க்கி சென்னை, கனிமரா ஹோட்டலில் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துத் தமது இப்படத்தைப் பற்றி விளக்கிக் கூறினர். இப்படம், காந்திஜி பிறந்த அக்டோபரில் திரையிடப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

"பம்போஷ்"

ஏ. ஜே. படேல் கோவா கலரில் அழகிய வர்ணப் படமாகத் தயாரித்துள்ள "பம்போஷ்" ஆங்கிலப் படம் இப்பொழுது சென்னை மினர்வாவில் காட்டப்பட்டு வருசிறது. காஷ்மீர் பள்ளத்தாக்கு இந்தப் படம் தயாரிப்பதற்காகவே அழகாக சிருஷ்டிக்கப் பட்டிருந்ததோ என்று சந்தேகிக்கும்படி அற்புத வண்ணச் சித்திரமாகத் தயாரிக்கப்பட்டுளளது. தாழ் ஏரியில் வசிக்கும் காஷ்மீரிகளைப் பற்றிய கதை இது. பூராவும் அழகிய இயற்கைக் காட்சிகளே நிறைந்த இப்படம் பிரபல கார்லோ மார்க்கோனியால் பிடிக்கப்பட்டது. எஸரா. மீர் டைரெக்ட் செய்தது. இது கேன்ஸ் நகரில் சர்வதேச பிலம் விழாவில் பரிசு பெற்ற படம் என்பது குறிப்பிடத் தக்கது.

பத்திரிகைக் காட்சிகள்

நேஷனல் புரொடக்ஷன்ஸும், பாண்டியன் பிக்சர்ஸாரும் சேர்ந்து தயாரித்த "அம்மையப்பன்" தமிழ்ப் படம் இப்பொழுது தமிழ் நாடெங்கும் காட்டப்பட்டு வருகிறது.

வைத்தியா பிலிம்ஸாரின் "வைரமாலை" செப்டம்பர் 25ந் தேதி முதல் பல ஊர்களில் காட்டப்பட்டு வருகிறது.

"அம்மையப்பனி"ன் பத்திரிகைக் காட்சி சென்றமாதம் 24ந் தேதியன்று பாரகன் டாக்கிஸிலும், "வைரமாலை" பத்திரிகைக் காட்சி சென்றமாதம் 25ந் தேதியன்று சித்ரா டாக்கீஸிலும் பத்திரிகாசிரியர்களுக்குப் பிரத்யேகமாகக் காட்டப்பட்டது.

ஸ்ரீ அம்பாள் & கோ,
201, தங்கசாலை தெரு, மதராஸ்.

"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின்
நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது ..."

என்று கூறுகிறார்

குமாரி கமலா

இந்தியாவில்
தயாரித்தது

லக்ஸ் டாய்லட் சோப் இவ்வளவு வெண்மையாயிருப்பதின் காரணம் என்ன? அதை தயாரிக்க மிகவும் சுத்தமான எண்ணெய்களையே உபயோகிக்கப்படுகிறது என்பதுதான். குமாரி கமலா கூறுவதாவது: "எனது பூரண அழகு பராமரிப்பும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிப்பதுதான். அதன் சுறுசுறுப்பான, மென்மையான நுரை ஆழப்புகுந்து சுத்தம்செய்து சருமத்தைப் பட்டுப்போல் மென்மையாகவும், தெளிவாகவும் வைத்திருக்கிறது. நீங்களும் அதை தினமும் உபயோகித்து உங்கள் வதனத்தையும் அழகாக வைத்துக்கொள்ளுங்கள். அதன் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்!"

"... அதனால்தான் என் வதனத்தை தெளிவாகவும் மலர்ச்சியோடும் வைத்திருக்க லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்!"

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை
கவர்ச்சி அளிக்க
புதிய பெரிய சைஸிலும்
இப்பொழுது கிடைக்கிறது!
இன்றே வாங்கி உபயோகியுங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப்

LTS. 428-50 TM

துணிப்புல்

வெட்டுக்கிளி

எதிலுமே நல்லது கெட்டது என்று எப்படி இரண்டு பாகுபாடுகள் இருக்கின்றனவோ, அப்படியேதான் தெய்வங்களிலும் இருவகை உள்ளன. அதாவது, யாவரும் வழிபடும் தெய்வம்; குறிப்பிட்ட சிலர் மட்டும் உபாஸனை செய்யும் தெய்வம்: இப்படியாக இரண்டு பிரிவுகள் உண்டு. பின்னால் குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த தெய்வங்களை துர்த் தேவதைகள் என்று குறிப்பிடுவார்கள். அதற்கு, 'கெடுதலை விளைவிக்கும் தெய்வம்' என்பது பொருளல்ல. இந்த தெய்வங்களை வழிபடுகிறவர்கள் அதிக ஆசாரமும் தளராத மனக்கட்டும் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். அப்படியில்லையெனில் அவர்களை அழித்துவிடும் அத் தெய்வம். ஆகவே, அநேகமாக அதன் வழிக்கே போவதில்லை பலர். இதை நான் ஏன் சொல்ல வந்தேன் என்றால், அப்படிப்பட்ட சில தெய்வங்களின் கதைகளைப் படமாக்க நினைத்த பலரும் பட்ட பாட்டை விளக்கத்தான்.

* * *

இப்படிப்பட்ட தெய்வங்களின் கதைகளைப் படமாகத் தயாரித்த யாருமே முன்னுக்கு வந்தது கிடையாது. அந்த மாதிரி தேவதைகளின் கதைகளைப் படமாக்க யாராவது ஒருவர் முன் வந்தால் அதற்குப் பல இடையூறுகளும் நேரிடும். அநேகமாகப் படம் தயாராகி வெளிவருவதே கஷ்டம்; அப்படியே தப்பித் தவறி படம் தயாராகி வெளிவந்தாலும் அது படுதோல்வியாகத்தான் முடிவடையும். இந்தக் கூற்றுக்கு ஆதாரங்களாக ஒன்றிரண்டு உதாரணங்கள் மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

* * *

பல வருஷங்களுக்கு முன் (1937ம் வருஷம் என நினைக்கிறேன்) "மானஸா தேவி" என்ற ஒரு படத்தை, கல்கத்தா தேவதத்தா ஸ்டுடியோவில் போய் படமாகத் தயாரித்தார் ஒருவர். "அப்படி ஒரு படம் தயாராகி வெளி வந்ததா?" என்று பலரும் வியப்படையக்கூடும். ஒன்றிரண்டு தியேட்டர்களுக்கு மட்டுமே அந்தப் படத்தைத் திரையிடும் "பாக்கியம்" கிட்டிற்று. பாவம், அந்தப் படத்தைத் தயாரித்தவர் அதைத் தயாரித்து முடிப்பதற்குள் பட்ட கஷ்டமும், நஷ்டமும் எழுதி முடியாதவை. அந்த துரதிருஷ்டம், படம் தயாரித்தவரோடு நின்றுவிடவில்லை. அந்தப் படத்தின் தயாரிப்பில் சம்பந்தப்பட்ட அனைவரையும் ஒரு ஆட்டு ஆட்டி வைத்துவிட்டது.

* * *

மற்றொரு உதாரணம் "ஐயனாரப்பன்" விஷயமாகும். அருணா பிக்சர்ஸ் என்ற ஒரு படக் கம்பெனியார் 1946ம் வருஷம் இதைப் படமாக்க முனைந்து சில அடிகள் தயாரிப்பதற்குள் 'உடும்பு வேண்டாம் கையைவிட்டால் போதும்' என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். பாவம், அந்தப் படத் தயாரிப்புக்கு சில ஆயிரம் ரூபாய்கள் பணம் உதவிய, அப்பொழுதைய பிரபல ஹாஸ்ய நடிகை, இப்பொழுதுகூட அதை நினைத்தால் நடுங்குகிறார். இந்தக் கம்பெனியாவது சில அடிகளாவது படம் பண்ணியது. மற்றொரு கம்பெனி "ஐயனாரப்பன்" படம் தயாரிக்கப் போவதாக அறிவிப்பு வெளியிட்டதுமே கம்பெனியின் பாகஸ்தர்களுக்குள் அடிதடி சண்டையே வந்துவிட்டது. இப்பொழுது கூட ஒருவர் இக்கதையைப் படமாக்க யோசித்து வருவதாக ஒரு செய்தி அடிபடுகிறது.

* * *

ஏன், தயாராகி வெளிவந்த "சாமுண்டீஸ்வரி", "மாரியம்மன்" ஆகிய இரண்டு படங்களையும்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். புராணப் படங்களுக்கு மக்களிடை அமோகமான ஆதரவு இருந்த காலத்தில்—1937ம் வரு

ஷம்—லக்ஷ்மி பிக்சர்ஸார் தயாரித்துத் திரையிட்ட "சாமுண்டீஸ்வரி"க்கு லக்ஷ்மியின் அருள் கிட்டவில்லை. 1948ம் வருஷம் திரைக்கு வந்த "மாரியம்மன்" தமிழ்ப் படத்திற்கும் இந்த துரதிருஷ்ட நிலைதான் ஏற்பட்டது. படத்தைத் தயாரித்த செல்வம் பிலிம்ஸாருக்கு செல்வம் சேராமையால், அவர்களும் "செல்வோம்!" என்று படத் துறையைவிட்டே அப்படத்துடன் ஒதுங்கி விட்டனர். சந்திரலேகா பிலிம்ஸார் தயாரிக்க முற்பட்ட "அம்பிகா தேவி" அந்தரத்தில் நின்றுபோன விஷயம்தான் பிரசித்தமானதாயிற்றே!

* * *

தேவதைகளில் இவைகளைப் போல் கிரஹங்களில் சனியைக் குறிப்பிடலாம். இந்த சனியின் பார்வையினுல் சகிக்க முடியாத கஷ்டங்கள் அனுபவித்தவர்கள் இத்துறையில் அனந்தம். "நள தமயந்தி" கதையை கெம்ப்ராஜ் படமாக ஆக்கத் தீர்மானித்திருப்பது தான் எனக்கு சனியின் ஞாபகத்தை ஏற்படுத்தியது. "நள தமயந்தி" கதை ஏற்கெனவே ஒரு தடவை படமாக வெளி வந்திருக்கிறது. இன்று சங்கீத டைரெக்டராக உள்ள எஸ்.வி. வெங்கட்ராமன் சம்பந்தப்பட்ட அப்படம் தயாராகி வெளிவருவதற்குள், பட சம்பந்தப்பட்டவர்கள் பகீரத முயற்சியில் ஈடுபட வேண்டியிருந்தது ஒரு பக்கமிருக்க, புராணப் பட மோக சூழ் நிலையில்கூட அப்படம் படுதோல்வியாகத்தான் முடிந்தது. சில வருஷங்களுக்கு முன் வர லக்ஷ்மி பிலிம்ஸ் என்ற ஒரு படக் கம்பெனி "தமயந்தி" என்ற படம் தயாரிக்கப் போவதாக செய்திகள் வெளிவந்தன. ஆனுல் அக்கம்பெனியே பிறகு உருப்பெற்றதாகத் தெரியவில்லை.

* * *

கெம்ப்ராஜைப் பொருத்தவரை அவர் சனி பகவானிடம் ஏற்கெனவே ஒரு முறை குட்டுப்பட்டவர். தமது முதல் படத்திற்கே ஆரம்பத்தில் "சனிப் பிரபாவம்" என்றுதான் பெயர் கொடுப்பதாக இருந்தார். பிறகுதான் அது "ராஜவிக்ரமா" என்ற நாமகரணத்துடன் திரைக்கு வந்தது. சனி பகவான் நல்லதையும் செய்வதுண்டு என்று சொல்வார்கள். அது கெம்ப்ராஜ் விஷயத்தில் உண்மையாகி, அவரது "நள தமயந்தி" மூலம்

நீண்டு பெருகும் கூந்தல்
வேண்டுமானுல்

கேசவர்த்தினி தடவுங்கள். தலை அரிப்பைப் போக்குங்கள். மயிர் கொட்டுவதை நிறுத்துங்கள். அகால நரையைத் தடுங்கள். நரையைத் தாமதிக்கச் செய்யுங்கள். பளபளப்பான கேசத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

மறைந்துள்ள கூந்த லழகை எடுத்துக் காட்டுங்கள் கேசவர்த்தினியின் உதவியால்.

ஷாம்புவின் உதவியால் தலையை சுத்தமாகவும், பரிமளமுள்ளதாகவும் ஆக்குங்கள்.

கேசவர்த்தினி அணு 14; ஷாம்பு அணு 14; தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், கோயமுத்தூர்.

போர்க் கோலத்திலுள்ள சிவாஜி கணேசன் தற்போது ஈடுபட்டிருப்பது (பத்மினியுடன்) காதல் போரில்! கிருஷ்ணா பிக்சர்ஸ் உன்னத முறையில் தயாரித்துவரும் ''காவேரி'' தமிழ் படத்தில் இக் காட்சியைக் காணலாம்.

அவருக்குப் பொருளும் புகழும் ஏற்பட வேண்டும் என்பது தான் எமது அவா. "காதம்பரி" கதைக்கும் இப்படி ஒரு சாபம் உண்டு. இக் கதையைப் படமாக்க நினைத்து, அவஸ்தைப்பட்டவர்கள் பலரை எனக்குத் தெரியும்.

* * *

சென்ற மாத ஊசியில், ஒரே கதைக்கு ஒன்றுக்கு, மேற்பட்ட பலர், பல வருஷங்களுக்கு முன் போட்டி போட்டதாக எழுதியிருந்தேன். ஆனால், இப்பொழுது அதைவிட ஆச்சரியமான செய்தி ஒன்றை நேயர்களுக்குக் கூறப் போகிறேன். சமீபத்தில் தயாராகி வெளியிடப்பட்ட ஒரு கதையைப்பற்றி காரசாரமான விவாதம் ஒன்று நடைபெற்றது. ஒரு குறிப்பிட்ட கட்சியை சேர்ந்த இரு வசனகர்த்தாக்கள் — இருவரும் நெருங்கிய நண்பர்கள் தான்—அக்கதை பற்றி பத்திரிகை மூலம் போர் நடத்தி, வாசகர்கள், கட்சித் தோழர்கள் அனைவரையும் 'போர்' அடித்தார்கள். 'யானை மீது வீற்றிருப்பவரே நீர் திருடர்' என்று முரசொலித்தார் ஒருவர். அதற்குப் பதிலாக அந்த ஆசாமி, " இமயத்தின் உச்சியீது ஏறியிருக்கும் சித்திரக்காரரே, திரும்பிப் பாரும். நீர்தான் பக்காத் திருடர்" என்று தென்றலில் காரசாரமாக தூது அனுப்பினர். அதன் மூலம் முதலில் சண்டைக்குக் கிளம்பிய அந்தப் பிரபல வசனகர்த்தா அவரது முந்திய படங்களுக்கு எங்கெங்கே கை வைத்திருந்தார் என்பதையெல்லாம் அம்பலப் படுத்தியிருந்தார்.

* * *

ஒரே கட்சியைச் சேர்ந்த இருவர் இப்படி ஒருவர் மீது ஒருவர் வசை புராணம் பாடிக்கொண்டது கழகத் தலைவருக்குப் பிடிக்கவில்லை. மற்றவர்கள் நகைக்க இடம் ஏற்பட்டுவிட்டது அல்லவா? ஆகவே, தனது சிஷ்யர்களான அந்த இருவருக்கும், மத்தியில் "தம்பிகளா! நீங்கள் இருவரும் சண்டையை நிறுத்தி சமரஸத்திற்கு வரப்போகிறீர்களா, அல்லது நான் பேசாமல் கண்காணாது எங்கேயாவது வெளிநாட்டிற்குப் போய் உட்கார்ந்து விடட்டுமா?" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அண்ணாவின் இந்தக் கண்டிப்பான உத்தரவுக்குப் பலன் கிட்டாமல் போகுமா? ராஜாமாதிரி ஒரு தம்பி கிளம்பினார். சிண்டைப் பிடித்துக்கொண்ட இருவரையும் மீண்டும் தோழர்களாக்கி வைத்தார். அதற்கு அடையாளமாக அன்றே அண்ணாவும், தம்பிகளும் ஒன்றாகப் போய் "மலைக் கள்ளனை"ப் பார்த்துவிட்டுத் திரும்பினார்கள். நடுவில் அவ்விருவரும் சண்டை போட்டுக் கொண்டதில் 'சுகம் எங்கே' கண்டார்கள் என்று கட்சித் தோழர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

* * *

இந்த வசனகர்த்தாப் போர் பற்றி எழுதும்போது சமீபத்தில் ஒரு வசனகர்த்தா நடந்துகொண்ட தவறான முறை குறித்தும் வருத்தம் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. நாடகமாக நடிக்கப்பட்டு, பிரபலமான ஒரு கதை படமாகியுள்ளது. இப்படத்திற்கு ஒரு சில பாட்டுகள் மட்டும் போட்டுத்தரும்படி அழைக்கப்பட்டார் மற்றொரு வசனகர்த்தா. அவர் தமக்கு அளிக்கப்பட்ட வேலையை கவனிப்பதுடன் நிற்காமல் ஏற்கெனவே படமாக்கப்பட்டுள்ள பல பகுதிகளிலுமுள்ள வசனம்பற்றிய விமரிசனத்தில் இறங்கிவிட்டார். படத் தயாரிப்பாளர்களும் அவரது விமர்சனத்திற்கு மதிப்புக் கொடுத்தது, படத் துறையில் காலடி வைத்திருக்கும் புதிய வசனகர்த்தாவுக்கு மன வருத்தத்தை அளித்திருப்பதில் வியப்பில்லை. சக தொழிலாளிகள் விஷயத்தில் இப்படி நடந்துகொள்வது மனக்கசப்பை வளர்க்கவே வழி செய்வதாக முடியும்.

நல்ல ஐடியா.!

'கா ஸ்மா பார்க்' கின் மூலையிலே போடப்பட்டிருந்த ஒரு சிமெண்ட் பெஞ்சியில் நன்ருகச் சாய ந்தவாறு உட்கார்ந்து கொண்டிருந் தான் சுந்தரம்.

அவன் மனம் அடுத்த வாரம் வெளி வரும் "கார்ட்டூன்" என்ற தமிழ் வாரப் பத்திரிகையில் போட வேண் டிய கார்ட்டூனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

அடிக்கடி பென்சிலில் அந்த சிமென்ட பெஞ்சியில் கிறுக்கிக்கொண் டிருந்தான். அவன் அந்த இடத்தில் வழக்கமாக உட்காருபவன் என்பதற்கு அடையாளமாக அந்த பெஞ்சு பூரா வும் கார்ட்டூன் படங்களாக அமைந் திருந்தன.

அப்பொழுது அங்கே வந்து சேர்ந் தார் கார்ட்டூன் பத்திரிகையின் ஆசிரி யர் சிவஞானம்.

"என்ன சுந்தரம், அடுத்த வாரத் திற்கு 'ஐடியா' தோன்றி விட்டதா?" என்று கேட டார் தமாஷாக.

"வாங்க ஸார். அதைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஏன், நீங்களே ஏதாவது யோசனை சொ ல்லக் கூடாதா?" என்று கேட்டான் சுந்தரம்.

"அதற்காகத்தானே முக்கியமாக இங்கே வந்தேன். நம் ஈ. ரா. கழகத் தைப்பற்றிப் போடலாம் என நினைக் கிறேன்."

"எப்படி ஸார்."

"அதாவது, நாயுடுகாரு தலைவர் என் ருலும் தம்பித்துரை சொல்வதுபோல் தான் நடக்கிருர். அதற்குத் தம்பித் துரை போடும் தாளத்திற்கு நாயுடுகாரு ஆடுவதுபோல் இருக்க வேண்டும் படம். எப்படி "ஐடியா"?

"ஏ ஒன் ஸார். நம் நாட்டிய நடிகை லீலாவை ஆடுவது போன்று ஒரு படம் போட்டு, அவளுக்கு நாயுடுகாரு என்று எழுதி, தம்பித்துரையை நாட்டிய ஆசி ரியராகப் போட்டுவிட்டால் கார்ட்டூன் கனகச்சிதமாக இருக்கும். என்ன ஸார் சொல்லுகிறீர்கள்?"

'பலே பேஷாக இருக்கும். உனக்கு எப்படி இஷ்டமோ அப்படிப் போடு. எனக்கு அவசரமாக கடைக்குப் போக வேண்டும். நாளை ஆபீஸில் பார்க்க லாம்" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார் ஆசிரியர்.

ஆசிரியர் போய் இரண்டு விநாடிகூட ஆகவில்லை; அதற்குள் "ஏன் ஸார் நீங்கள்தான் 'கார்ட்டூன்' பத்திரிகை கார்ட்டூனிஸ்ட்டோ?" என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தாள் நாட்டிய நடிகை லீலா.

அவளை ஏற இறங்க ஒரு முறை பார்த்தான் சுந்தரம். "ஆமாம்" என்ருன்.

"நீங்கள் இருவரும் பேசிக் கொண்டி ருந்ததைக் கேட்டேன்....ஏன் ஸார் உதாரணத்திற்கு என் படத்தைத்தான் போட்டுக் காண்பிக்க வேண்டுமா?" எனக் கோபத்துடன் கேட்டாள் நாட்டிய நடிகை லீலா.

கோவை கோபிநாத்

"ஒட்டுக் கேட்பது பெரிய மனிதர் களுக்கு உரியதல்ல. அதுவும் உன்னைப் போன்ற நாட்டிய நடிகைக்கு....நான் சொல்லக் கூடாதுதான், இருந்தாலும் சொல்லுகிறேன்....ம்....ஆமாம் பத்திரி கையில் உன் படம் வந்தால் கோர்ட் டிலே கேஸ் போட்டு மான நஷ்ட ஈடு கேட்பதுதானே?"

"உங்களிடம் நான் யோசனை கேட்க வரவில்லை. என் படத்தைத் தாறுமாருக கார்ட்டூனில் உபயோகித்து என்னை வம் புக்கு இழுக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போக வந்தேன்."

"அப்படியானல் உன் படத்தை கார்ட்டூனாக உபயோகப் படுத்தக் கூடாது என்றுதானே சொல்லுகிருய்?"

"ஆமாம்."

"மீறி உபயோகித்துவிட்டால்....?"



நீங்கள்

இன்று

உங்கள் பற்களை

மக்ளீன்

செய்தீர்களா?

ஆம், அதன் இரகசியம் இதுதான் . . .

பற்களைத் தவருமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இரு வேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும், நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீன்ஸிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.



ஃப்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-37-TAM.

"உபயோகித்தாலா? உபயோகித்தால்....ம்....ஸார்....தயவு செய்து வேறு யார் படத்தை யாவதுபோட்டு விடுங்களேன்."

"ம....அப்படிக் கேட்டால் எவ்வளவு 'பியூட்டி'யாக இருக்கிறது. அது சரி, நான் இதற்குமுன் உங்களைத் தாக்கி கார்ட்டூன் போட்டிருக்கிறேனு?"

"போன வாரத்தில் என்ன போட்டீர்களாம்?"

"போன வாரத்திலா? ஒன்றுமே போடவில்லையே!"

"ஐயோ....! வீட்டுக்கு வாருங்கள் காட்டுகிறேன். ஜாக்கிரதையாக எடுத்து வைத்திருக்கிறேன்."

"ஓ....அதற்காக உங்கள் வீட்டிற்கு நான் வரவேண்டுமா?"

"ஸாரி....உங்களுக்கு அவ்வளவு தொந்தரவு வேண்டாம். நானே காரிலே போய்க் கொண்டு வருகிறேன்."

"கார் இருக்கிறதா? அப்படியானுல் நானே வருகிறேன்" என்று லீலாவைப் பின் தொடர்ந்தான் சுந்தரம்.

பத்து நிமிஷ கார் சவாரிக்குப் பின் "இதுதான் வீடு. இறங்கலாம்" என்ற லீலாவின் சொறகள் சுந்தரத்தின் சிந்தனையைக் கலைத்தன. லீலாவைப் பின் தொடர்ந்து உள்ளே ஹாலுக்குள் நுழைந்தான்.

"உட்காருங்கள்" என்று சொல்லி விட்டு உள்ளே ஓடினுள் லீலா!

சுந்தரம் சுற்றுமுற்றும் தன் பார்வையைச் செலுத்தினன்.

அதற்குள் "இதோ" என்று சொல்லிக் கொண்டே பேப்பரை மேஜை மீது வீசி எறிநதாள் லீலா.

பேப்பரை விரித்துப் பார்த்து விட்டு, "இதிலே என்ன தபபு?" என்று மெதுவாகக் கேட்டான் சுந்தரம்.

"என்ன தப்பா? நான் திரௌபதியாகவும் சுயம்வரத்திற்கு மாலையுடன் செல்வது போலவும் போட்டிருக்கிறீர்களே?"

"அடடே! நீ தானே தப்பாக அர்த்தம் செய்து கொண்டாய். உன்னைப் புகழ்ந்தல்லவா போட்டிருக்கிறேன்?"

"புகழ்ந்தா?"

"ஆமாமம்மா! அதாவது உன் மாலை 'என் கழுத்தில் விழாதா' என ஒவ்வொருவரும் ஏங்குவதாகவும், யார் கழுத்தில் மாலை விழுகிறதோ அவன் மிகவும் அதிர்ஷ்டசாலி என்றும் அர்த்தம். இதிலே என்ன தப்பு?"

லீலாவின் முகத்திலிருந்த கோபக் குறி மாறிவிட்டது.

"அதற்கு என் படத்தைத்தான் போட வேண்டுமா?"

"ஆமாம். நீ கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக, ஆசிரியர் என்னிடம் சொன்னுர்!"

அதற்குள் உள்ளேயிருந்து "நான் என்ன சொல்லி விட்டேன்?" என்று கேட்டுக் கொண்டே வந்த லீலாவின் தாய் சீதம்மா சுந்தரத்தைப் பார்த்து திடுக்கிட்டாள். "வாப்பா சுந்தரம். அத்தையைக் காண இப்பொழுதுதான் சமயம் வாய்த்ததா? நேற்றுக்கூட நானும் லீலாவும் உங்கள் வீட்டிற்கு வந்தோம். நீ ஏதோ படம் போட வேண்டும் என்று சொல்லிக் கொண்டு போய் விடுகிருயாம். வீட்டுக்குகூட சரியாக வருவதில்லையாம்.

"லீலா உன்னை இதுவரை பார்த்ததில்லையல்லவா? அதனுல்தான் வீட்டிற்கு வந்தோம். நீதான்—" என்று பேசிக்கொண்டே போனுள் சீதம்மா.

"நமஸ்காரம் அத்தை, இப்பொழுதுகூட நானுக வரவில்லை. லீலாதான் கூட்டிக்கொண்டு வந்தாள்" என்றுன் சுந்தரம்.

"மாலாவா, என்னடி நீயா கூட்டிக் கொண்டு வந்தாய்" என்று கேட்டாள் சீதம்மா.

"எம்மா? இவரைத்தான் என் அத்தான் என்று சொன்னுயா?" என்று கேட்டாள் லீலா.

"ஆமாண்டி, இவன்தான் உன் அத்தான். நாளைக்கு உன் புருஷனும்கூட....ம் இரு. காப்பி கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு உள்ளே போனுள் சீதம்மா.

லீலா சுந்தரத்தின் எதிரே இருந்த சோபாவில் போய் உட்கார்ந்தாள். அவன் மேலே பார்த்த வண்ணம் ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான்.

"என்ன அப்படிப்பட்ட சிந்தனை" என்று கேட்டாள் லீலா.

'உம்....அடுத்த வாரம் என்ன கார்ட்டூன் போடுவது என்றுதான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இனிமேல் ஐடியா சொல்லும் வேலை உனக்குத்தானே" என்ற சுந்தரத்தை முறைத்துப் பார்த்தாள் லீலா.

(நீங்கள் படித்தது)

நம் கதாநாயகி நர்மதாவே தன் சோகக் கதையைக் கூறுகிருள். கொங்கணத்து கடற்கரை கிராமம் ஒன்றில், மீன் வியாபாரம் செய்து வந்த ஒருவரின் மகள் அவள். அவளுக்குப் பதினுறு வயது பெரியவனுன தமையன் காசிநாத்தும், அத்தை மகன் ரங்காராமும், தாயாரும் ஒன்ருகவே வசித்து வருகின்றனர்.

சிறு பெண்ணுக இருந்தபோது ஒரு நாள் நர்மதா மின்னல் தாக்குதலால் இரு கண்களையும் இழக்கிருள்,இதைத் தொடர்ந்து அவள் தகப்பனர் படகு மூழ்கி சமுத்திரத்திற்கு இறையாகிருர். அப்பா இறந்ததும், காசிநாத், தாம்லே என்ற பணக்காரரின் புத்திரி சரயூவை மணந்துகொண்டு வேட்டகத்தோடு ரத்னகிரியில் தங்கிவிடுகிருன். நாளாவட்டத்தில் அவனுக்கும், தாயார், தங்கை, அத்தான் இவர்களுக்கும் உறவு அறவே ஒழிந்துவிடுகிறது. தாயார் கங்காமாயி குடும்பத்தை மிகக் கஷ்டத்தோடு நிர்வகிக்கிருள். வளர்ப்புப் பிள்ளையான ரங்காராம் நன்றியறிதலுடன் நடந்து கொள்ளுகிருன். அவன் சம்பாத்தியத்திலேயே குடும்பம் நடக்கிறது. நர்மதா கல்யாண வயதை அடைகிருள். அந்தக் குருடியை ரங்காராமே மனமுவந்து மணந்து கொள்ளுகிருன். கல்யாணத்தைத் தொடர்ந்து நர்மதா கர்ப்பிணியாகிருள். பிறகு ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாகிருள். ரங்காராமின் உள்ளூர் வியாபார வருமானம் குடும்பச் செலவுக்குப் போதவில்லை. ஆதலால், அவன் பம்பாய்க்குச் சென்றுஒரு வேலையில் அமருகிருன். அவன் பம்பாய் சென்றதும் கங்காமாயிக்கு கடும் ஜுரம் ஏற்படுகிறது. அக்கம் பக்கத்தினரின் உதவியுடன் நர்மதா அம்மாவுக்கு சிசுருஷை செய்து வருகிருள். சில தினங்களில் ரங்காராம் பம்பாயிலிருந்து வந்து சேருகிருன். ஆனுல், அவன் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய் கங்காமாயி உயிர் துறக்கிருள். அண்ணன் காசிநாத் ஈமக்கிரியைகளுக்குக்கூட வரவில்லை. ரங்காராமே கிரியைகளைச் செய்துவிட்டு, நர்மதா, குழந்தை திவாகரன் இவர்களுடன் கப்பலில் பம்பாய்க்குப் புறப்படுகிருன்.

பம்பாயில் ரங்காராம் தங்கி யிருந்த வீட்டுக்காரக் கிழவி ஹரிமாயி அவன்மீது பிள்ளைப் பாசம் கொள்ளுகிருள். அவள் நர்மதாவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிருள். புதுத் தம்பதி உல்லாஸமாக கப்பல் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், திடீரெனப் புயல் அடிக்கிறது. நர்மதா, திவாகரன், ரங்காராம், எல்லோரும் நீரில் மூழ்குகின்றனர். கடலில் மூழ்கியவர்களை சில செம்படவர்கள் காப்பாற்றுகின்றனர். நர்மதா ஒரு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிருள். அவளுக்குக் கண் ஆபரேஷன் செய்யப்பட்டு, பார்வையைப் பெறுகிருள். ஆனுல் கணவனும் குழந்தையும் என்ன ஆனுர்களோ தெரியவில்லை. நர்மதா வாழ்க்கையில் வெறுப்புற்று கடலுக்கு இறையாகத் தீர்மானிக்கிருள் இடையில் தெய்வாதீனமாய் ஹரிமாயி எதிர்ப்படுகிருள். தான் எதிர்பார்த்திருந்த நர்மதா அவளே என்பதை அறிந்த ஹரிமாயி அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுகிருள். அவளை வீட்டில் இருக்கச் செய்து, தானே உழைத்து அவளைக் காப்பாற்றி வருகிருள். நர்மதா குழந்தை ஏக்கம் மிகக் கொண்டு இருக்கிருள் என்பதை ஹரிமாயி உணர்ந்து, அவளுக்கு பிரபாகர கோட்ஸே என்ற தனவந்தரின் வீட்டில், அவரது ஸ்வீகாரப் புத்திரனை வளர்க்கும் வேலையைத் தேடித் தருகி

மாயாவி



ருள். அந்தக் குழந்தையின் பெயரும் திவாகரன்தான்! மாமனர் வீட்டோடு தங்கியிருந்த காசிநாத், மனைவி இறந்ததும் வேட்டகத்தினரின் அவமதிப்புத் தாளாது, தன் ஏழெட்டு மாதப் பெண் குழந்தையை எடுத்து வந்து, கோட்ஸே மாமாவிடம் கொடுத்துவிட்டு யாத்திரை செல்கிருன். அவன் போன பின்னர்தான் நர்மதாவுக்குத் தன் அண்ணன் என்று தெரிகிறது. சில காலத்திற்குப் பிறகு ஹரிமாயியும், கோட்ஸே மாமாவும் இறக்கின்றனர். எனவே, இரு குழந்தைகளையும், கோட்ஸேயின் ஆஸ்திகளையும்பாதுகாக்கும் பொறுப்பையும் நர்மதா ஏற்கிருள்.—இனி, மேலே படியுங்கள்.

அத்தியாயம் 5

நான்—நர்மதாதான் பேசுகிறேன். ஏறக்குறைய இருபது வருஷ காலத்தைத் தாண்டி நெடுமூச்சு விட்டுக் கொண்டே பேசுகிறேன்.

அத்தனை நெடுங்காலத்தை' எளிதாக ஒதுக்கி விட்டு ஓடுவதற்காக என்னை நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள். ஆனல், அந்த ஆண்டுகளைச் 'சாரமற்றவை! நிகழ்ச்சிகள் அற்றவை' என்று நான் தள்ளிவிடவில்லை. உண்மையில் அந்த வருஷங்களில்தான், அதுவரை அநுபவித்தவைகளை விடப் பெரிய

சோதனைகளையும், பெரிய ஏமாற்றங்களையும், சொல்லி மாளாத மனத் துயரையும் நான் அநுபவித்தேன். ஆனால்—கடலைக் கிளறினால் முத்துக் கிடைக்கும்; மண்ணைக் கிளறினால் புதையல் கிடைக்கலாம்; அதுபோல, நரகலைக் கிளறினால் நாற்றந்தானே கிடைக்கும்? ஆகவேதான் அதைக் கிளராமல் மேலே செல்ல விரும்பினேன். தவிர, இனிய சம்பவங்களை விவரிக்கும்போது இன்பம பிறப்பது போல, துயர சம்பவங்களை விவரிக்கும்போது துன்பந்தானே பிறக்கும்? தலைகடந்த அநதத் துன்ப நாட்களின் ஏட்டை ஒவ்வொன்றாகப் புரட்டத் தலைப்பட்டேனானால், என் நெஞ்சு வெடித்துவிடும். இருந்தாலும், நான் இன்று எங்கே எந்நிலையில் நின்று பேசுகிறேன் என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு, அந்த நீண்டகால நிகழ்ச்சிகளைச் சுருக்கிக் காட்டிவிட்டு மேலே போகிறேன்.

நேற்று நடந்தது போல இருக்கிறது, கோட்ஸே மாமா அந்த மகத்தான

பொறுப்பை என்மீது சுமத்தி விட்டுப் போனது. 'அவர் சுமத்திவிட்டார்' என்று சொல்வதுகூடத் தவறுதான். ஏனென்றால், அவருடைய கோரிக்கையை ஏற்று நிறைவேற்றி வைப்பதாக நான்தானே ஆத்மசுத்தியுடன் வாக்கு அளித்தேன்!

ஆம்; வாக்களிப்பு! உறுதிமொழி! அதைக் கொடுப்பது எளிது: நிறைவேற்றுவது கடினம் என்பது அப்பொழுது எனக்குத் தோன்றவில்லையே! ஏன? அது எனக்குக் கிட்டிய அரிய பாக்கியம் என்றல்லவா அச்சமயம் எண்ணினேன்! 'ஏராளமான சொத்து இருக்கையில் இரண்டு பச்சைக் குழந்தைகளைப் பராமரித்து, ஆளாக்கி விடுவது ஒரு பெரிய காரியமா?' என்று இறுமாந்திருந்தேன். ஒரே ஒரு கவலை—வேறு ஒரு கவலை—மாத்திரமே அன்று எனக்கு ஏற்பட்டது; அதாவது, எல்லையற்ற இந்தச் சொத்தைப் பெண்பிள்ளையான நான் எப்படி நிர்வகிப்பது என்று. ஆனால், கோட்ஸே மாமா ஏற்கெனவே அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தார் என்பது அவர் இறந்த பின்புதான் எனக்குத் தெரியவந்தது. தமது குடும்ப வக்கீலும், சிறந்த நண்பருமான கணேஷ் ஷிண்டே என்பவரையும், என்னையும் தம் சொத்துக்கு டிரஸ்டிகளாகவும், குழந்தைகளுக்குக் கார்டியன்களாகவும் நியமித்து ஒரு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்திருந்தார் அவர். அதன்படி ஷிண்டே தக்க ஆட்களை நியமித்துச் சொத்தைப் பராமரித்து வர ஏற்பாடு செய்ததும், "சரி; இனியேல் கவலையில்லை; எல்லாம் தங்கு தடையின்றி நிறைவேறி விடும்" என்று நான் களிப்படைந்தேன். ஆனால் நடந்தது என்ன?

திவாகரன் வளர்ந்தான். வளரும் தோறும், தனக்கும் எனக்கும் இடையே ஓர் ஆழமான அகழியையும் தோண்டினான்.

அநுபவந்தான் மனிதருக்குச் சரியான உபாத்தியாயர். நான் அநுபவமற்றவள்: ஆகையால் அகப்பட்டுக் கொண்டேன். ஒரு குழந்தையையேனும் தக்க வயது வரையில் வளர்த்து அநுபவம் பெற்றிருந்தேனாகில், மழலைப் பருவத்தில் குழந்தைகளைப் பற்றி நாம் கொள்ளும் அபிப்பிராயம் பிற்காலத்தில் எப்படித் தலைகுப்புறச் சாய்ந்துவிடக் கூடும் என்பதை அறிந்திருப்பேன், அதுதான் இல்லையே!

இரண்டு வயது நிரம்பாத திவாகரனிடம் அன்று காணப்பட்ட அடக்கமும், 'அம்மா-அம்மா' என்று என்னை அன்பொழுக அழைத்து அட்டையாக ஒட்டிக் கொண்டிருந்ததும் சேர்ந்து, பிற்காலத்தில் அவன் எனக்கு அடங்கியவனாக, என்னிடம் மாறாத தாய்ப் பாசம் கொண்டவனாக இருப்பான் என்று என்னைத் திடம் கொள்ளச் செய்திருந்தன.

ஆனால் நடந்தது தலைகீழ்ப் பாடம். அவன் என்னிடம் தாய்ப் பாசந்தான் கொள்ளவில்லையென்றாலும், தன் நலனில் கருத்துடையவள் என்று கூடக் கருதவில்லை. என் போதனைகளுக்கும், இறைச்சல்களுக்கும், கண்ணீருக்கும், மசியாது, தன் போக்கில் தான்தோன்றியாகத் தலையெடுத்தான். இதை விதி என்பதா? அல்லது எனக்கு ஏற்பட்ட சோதனை என்பதா?

அவன் தன்னை அறிந்துகொண்டபோது என்னையும் அறிந்துகொண்டான். யமுனா என் மருமாள் என்பதையும் அறிந்து கொண்டான். இவற்றை அறிந்த பிறகுதான் அவனிடம் அந்த மாற்றம் ஏற்பட்டதோ?

சின்னஞ் சிறு வயதிலே அவனைக் கட்டுக்கு அடக்கிக் கொண்டு வருவது எளிதல்ல என்பது எனக்கு நிதர்சனமாகி விட்டது. முளைத்து மூன்று இலைகள் விடாத அப்பிராயத்திலே, தான் ஒரு விஷவித்து என்பதைச் சொல்லாலும், செயலாலும் காட்டத் தலைப்பட்டுவிட்டான். ஒரு சுடுசொல் கேட்கப் பொறுக்க மாட்டான்; எவ்விதப் பயமுறுத்தல்களுக்கும் அஞ்சமாட்டான்; எல்லாம் தான் நினைத்தபடியே நடக்க வேண்டுமென்று நிர்த்தூளி பண்ணுவான். அவன் நினைப்பவைகளோ, அழிவுக்கு அஸ்திவாரமாக இருக்கும். இப்படிப்பட்ட பிள்ளையை நான் எப்படி நல்லவனாகத் தலையெடுக்கச் செய்யப் போகிறேனோ என்ற கவலை அப்பொழுதே என்னை வாட்ட ஆரம்பித்துவிட்டது.

அன்றெல்லாம் எனக்கு ஓரளவு ஆறுதலைத் தந்தவள் யமுனாதான். அவள் பச்சைக் குழந்தை. பாவம்; அடித்தால் கூட அழத்தெரியாத அவளுக்குத்தான்

இந்த முரட்டுப் பையன் திவாகரனிடம் அவ்வயதிலே எத்தனை பாசம்! 'அத்தான்—அத்தான்' என்று அவனிடம் ஒட்டிக் கொள்ளும் அந்தக் குழந்தை. பாவாடை கட்டத் தெரியாத பாலிகைதான்; என்றாலும் அவளுடைய புத்திக் கூர்மை தான் என்னே! ஒரு நாள் வேடிக்கையாக, "ஏண்டி யமுனா, திவாகரனை 'அத்தான்–அத்தான்' என்று அழைக்கிறாயே; யாரடி சொல்லித் தந்தார்கள் உனக்கு அப்படி அழைக்க வேண்டுமென்று?" எனக் கேட்டேன்.

"நீ எனக்கு அத்தையில்லையா?" என்று அவள் என்னைக் கேட்டாள்.

"ஆமாம்."

"அத்தையோடு பிள்ளை அத்தான் தானே!"

என் பிள்ளையா அவன்? என் பிள்ளையாக இருந்தால், இப்படி அவனைக் கண்டிக்க முடியாமல், கடுஞ்சொல் சொல்ல முடியாமல், மனம் போனபடி நடக்கப் பார்த்துக் கொண்டிருப்பேனா? இதை நான் அச்சிறுமியிடம் சொல்லவில்லை. ஆனால், "நான் திவாகரனின் அம்மா என்று யார் சொன்னார்கள், உனக்கு?" என்று கேட்டேன்.

"என்ன அத்தை, இதுகூடவா தெரியாது, எனக்கு? அத்தான் உன்னைத் திட்டுகிறான்; அடிக்கிறான்; இருந்தும் நீ அவனைக் கோபிப்பதே யில்லையே! அம்மாவையல்லாமல் வேறு யார் இதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்?"

ஆறு வயதுப் பெண் அளித்த மறுமொழியைப் பார்த்தீர்களா? என்னவோ, என் கையால் நீர் வார்த்து இரண்டு கன்றுகளை வளர்த்தேன்; ஒன்று கோடரிக் காம்பாக மாறிவிட்டாலும், மற்றொன்றாவது கனி மரமாக இருந்ததே; அதுதான் இன்றும் எனக்குச் சற்று மன ஆறுதலை அளிக்கிறது.

இத்தகைய குணமணியான அந்தக் குழந்தையை அவன் கரித்துக் கொட்டுவான். போக வர வைவான்; அடிப்பான்; மிதிப்பான். ஆனால், அந்தப் பச்சைப் பாவம் அவற்றை வாய் திறந்து என்னிடம் சொல்லக்கூட மாட்டாள். எப்பொழுதாவது என் கண்களில் பட்டு, திவாகரனைக் கண்டித்தால், அவள் குற்றம் தன்னுடையதுதான் என்று பொய் சொல்லி அவனைத் தப்புவிக்க முயலுவாள்.

"பாவண்டா அந்தப் பெண். அதைப்

[தொடர்ச்சி 51-ம் பக்கத்தில்]

பி. எஸ். சரோஜா நடித்துள்ள "மாங்கல்யம்" தமிழ்ப் படம் தமிழ் நாடெங்கும் வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கிறது.

ஸ்மிருதி பிஸ்வாஸ்

(வங்காளப் பாடல்கள் — குறிப்பாக தாகூரின் பாடல்கள் ஒலிபரப்பப் படுகின்றன.)

வங்காளம் எப்பொழுதுமே இந்தியாவின் முன்னணி மாகாணமாக இருந்திருக்கிறது. குருதேவ் தாகூர் போன்ற பல பிரபலமான அறிஞர்கள் வங்காளத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் உலகத்தின் இலட்சிய மனிதர்களாக இருந்திருக்கிறார்கள். சினிமாத் தொழிலிலும் வங்காளம் பின்னடைந்து விடவில்லை. பருவா, தேவகி போஸ், பிமல்ராய் ஆகியோர் நமது படக் கலையின் தரத்தை உயர்த்த எவ்வளவோ செய்திருக்கின்றனர். அசோக்குமார், தேவிகா ராணி, கண்ணன் பாலா, ஜமுனா, பருவா ஆகியோர் இந்திய நட்சத்திரங்களில் முன்னணி நட்சத்திரமாக இருந்திருக்கிறார்கள்—இருக்கிறார்கள். விட்டன் புரோகிராமில் நீங்கள் அசோக்குமார், சுமித்ரா தேவி, கிஷோர் குமார் ஆகியோரைச் சந்தித்து விட்டீர்கள். இன்று மற்றொரு வங்காள நட்சத்திரத்தை—ஸ்மிருதி பிஸ்வாஸை அறிமுகப்படுத்துகிறோம்.

(கதவு திறக்கிறது.)

ஸ்மிருதி:—வணக்கம், பால்ராஜ்!

பால்ராஜ்:—வணக்கம், உட்காருங்கள்.

ஸ்:—எங்கே?

பா:—வேறு எங்கு உட்காருவது? நாற்காலியில் தான்!

ஸ்:—என்னை இங்கு ஏழே முக்கால் மணிக்கு வரும்படி சொல்லியிருந்தீர்கள். அவசரத்தில் பல விஷயங்களை மறந்து விடுகிறேன். சரி, ஆரம்பிக்கலாமே.

பா:—உங்கள் ஹிருதயம் பத்திரமாக உங்களிடம் இருக்கிறதென நினைக்கிறேன்.

ஸ்:—மிஸ்டர் பால்ராஜ்............இந்த மாதிரிக் கேள்விகள் வேண்டாம்.

பா:—அதெல்லாம் நிகழ்ச்சியில் இருக்கின்றனவே.

ஸ்:—நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா? அப்படியானால், நமஸ்தே, நான் போய் வருகிறேன். உங்களை மீண்டும் சந்திக்கிறேன்.

பா:—எங்கே?

ஸ்:—என் வீட்டில்—ஸ்டுடியோவில்—சினிமா தியேட்டரில்—அல்லது ஒரு உ கடையில்.

பா:—அதெல்லாம் சரி; ஆனால் நான் உங்களைச் சந்திப்பது அவ்வளவு எளிதானது அல்லவே. தவிர, நீங்கள் பேசுவதெல்லாம் ஒலிபரப்பப்படுகிறது, தெரியும் அல்லவா?

ஸ்:—அப்படியா?

பா:—ஆம், அப்படித்தான்.

ஸ்:—நமக்குள் பேசிக் கொள்வதாக நான் நினைத்தேன்.

பா:—அதுதான் இல்லை. இது காற்றினிலே நான் உங்களைக் காணும் பேட்டியாகும். இப்பொழுது சொல்லுங்கள், பரபரப்பில் நீங்கள் எதை எதை மறந்து விட்டீர்கள்?

ஸ்:—என்னுடைய மணி பர்ஸைக் கூட; பல விஷயங்கள்.

பா:—அதைப்பற்றிக் கவலை வேண்டாம். வேறு ஏதாவது?

ஸ்:—எனது மூக்கண்ணாடி!

பா:—அது கஷ்டம் தான். நீங்கள் எப்பொழுதிலிருந்து மூக்கண்ணாடி போட்டுக்கொண்டீர்கள்?

ஸ்:—ஸ்டுடியோவின் கண்ணைப் பறிக்கும் ஒளியில் தொடர்ந்து நின்று என் கண் பார்வை பலஹீனமடைந்து விட்டது. ஆகவே, எனது கண்களைப் பாதுகாக்க இரண்டு வருஷங்களாக மூக்கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறேன்.

பா:—இரண்டு வருஷங்களுக்கு முன்னால்........?

ஸ்:—அப்பொழுது கூட நான் இப்பொழுது போல் தான் தோற்றமளித்தேன்.

பா:—இந்த அழகிய இரு பெரிய கண்கள்........

ஸ்:—நீங்கள் ஏன் என்னை அப்படி முறைத்துப் பார்க்கிறீர்கள்?

பா:—இந்த உலகத்தில் — நிரந்தரமில்லாத உலகத்தில் — அக் கண்கள்

இல்லாவிடடாலும் அவர் எந்த சமயத்திலும் என்னைச் சந்திக்கலாம். ஆனல் நான் ஓய்வு நேரத்தை தனிமையில் கழிப்பதை அதிகமாக விரும்புகிறேன்.

பா:—தனிமையாகவா? தனிமையில் மானஸிகமாக மகிழ்ச்சிக்குரிய விஷயங்களை எண்ணிக் கொண்டுதானே!

ஸ்:—எனக்கு வர்ணம் தீட்டும் கலையில் பிரியம் உண்டு. ஓய்வு நேரம் கிடைக்கும் சமயமெல்லாம் நான் படம் வரைந்து வர்ணம் தீட்டும் வேலையில் ஈடுபடுவேன். சரி, கேட்கவேண்டிய கேள்விகளை தயவு செய்து சீக்கிரம் கேளுங்கள்.

பா:—நீங்கள் வர்ணம் தீட்டுவது குறித்துத்தானே சொன்னீர்கள்?

ஸ்:—ஆம். நான் தீட்டிய சித்திரங்களை ஒரு நாள் வெளியிட வேண்டுமென்பதே எனது லயட்சியம். பிரபலஸ்தர்கள் அதைப் பார்க்க வேண்டும் என்பது என் அவா.

பா:—இக் கலையில் தேர்ச்சி பெற நீங்கள் ரொம்பவும் சிரமப்பட்டிருக்க வேண்டுமே.

ஸ்:—ஆம். அதற்கு என் தாயார் மிகவும் உதவியாக இருந்திருக்கிருர். அவர் இக் கலையில் மிகவும் தேர்ந்தவர்.

பா:—நீங்கள் எப்பொழுது திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

ஸ்:—ஒருநாள் நான் மணந்து கொண்டுதானே ஆகவேண்டும். ஆனல், அது சீக்கிரத்தில் இல்லை.

பா:—அவர் யார்? என்ன செய்கிருர்?

ஸ்:—அவர் டாக்டராக வேண்டியவர். சித்திரக்காரராக ஆனர். ஆனல் இப்பொழுது பம்பாயில் சொந்தமாகப் படம் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிருர்.

பா:—அவருடன் நீங்கள் ஏதாவது படத்தில் நடித்திருக்கிறீர்களா?

ஸ்:—ஆம். கல்கத்தாவில் தயாரான "ஏக்-அவுரத்" படத்தில் நாங்கள் சேர்ந்து நடித்திருக்கிருேம்.

பா:—கல்கத்தாவில் தயாரான "ஏக்-அவுரத்"திலா? அது யார்? பெயர் என்ன?

ஸ்:—பால்ராஜ்! உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?

பா:—எனது கல்யாணத்தைப்பற்றி என்ன? இப்பொழுது உங்கள் கல்யாணம் பற்றி அல்லவா நாம் பேசிக்கொண்டிருக்கிருேம். ஓ....சரி அவரா? ஒரு நிபந்தனைக்கு ஒத்துக்கொண்டால் அவர் பெயரை நான் இப்பொழுது வெளியிடாமல் இருக்கிறேன்.

ஸ்:—என்ன நிபந்தனை?

பா:—உங்கள் கல்யாணத்திற்குப்பின் நீங்கள் இருவரும் வந்து இந்த லிப்டன் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும்.

ஸ்:—ரொம்ப சரி. நிச்சயமாக வருகிருேம். அப்பொழுது உங்கள் திருமணம் பற்றி நாங்கள் கேள்விகள் கேட்போம்.

பா:—சம்மதம். மறக்காமல் எனக்கு ரஸ்குல்லா கொண்டு வாருங்கள்.

ஸ்:—அது நீங்கள் எங்கள் வீட்டிற்கு வரும் போதுதான் கிடைக்கும்.

பா:—ரஸகுல்லா சாப்பிடுவதற்கு உங்கள் திருமணத்திற்கு முன்பே நான் உங்கள் வீட்டிற்கு வரலாமா?

ஸ்:—ஏன் கூடாது; தாராளமாக நீங்கள் வரலாம்.

பா:—அப்படியானல் உங்கள் விலாஸம் தேவை.

(ஸ்மிருது பிஸ்வாஸ் தனது பங்களாவின் விலாஸத்தைக் கூறுகிருர்.)

உங்களுக்குப் படிப்பதில் விருப்பம் உண்டு, இல்லையா?

ஸ்:—நிச்சயமாக. தாகூரது இலக்கியங்களை நான் அடிக்கடி படிப்பேன்.

பா:—சரி, குருதேவ் தாகூரது கவிதை ஒன்றைக் கூறினீர்களானல் சந்தோஷமாக இருக்கும்.

ஸ்:—நல்லது கேளுங்கள்.

(தாகூர் கவிதை ஒன்றைக் கூறுகிருர்.)

பா:—ரொம்ப வந்தனம். நமஸ்தே.

ஸ்:—விடைபெற்றுக் கொள்கிறேன், நமஸ்தே.

[நீங்கள் மேலே வாசித்தது, பிரபலமான லிப்டன் டீ கம்பெனியாரது ஏற்பாட்டின் பேரில் ரேடியோ ஸிலோன் மூலம் ஒலி பரப்பப்பட்ட நக்ஷத்திரப் பேட்டியாகும்.]

பிரம்ம லோகம்

பராசக்தி பிக்சர்ஸின் பெயரிடப்படாத தமிழ்ப் படத்தின் படப்பிடிப்பு நியூடோன் ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது. இப் படத்திற்கென டி.ஆர் ராமச்சந்திரனும், எஸ். வரலக்ஷ்மியும் சம்பந்தப்பட்ட காதல் காக்ஷி ஒன்று சமீபத்தில் படமாகியது. இவர்கள் தவிர, பிரண்ட் ராமசாமி, முத்துலக்ஷ்மி, கணபதி பட் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். படம் எஸ். டி. எஸ். யோகியார் டைரெக்ஷனில் சுறுசுறுப்பாகத் தயாராகி வருகிறது.

நள்ளிரவில் நடந்தது

"பட்டு"வால் எழுதப்பட்டு, பல இடங்களிலும் நாடகமாக நடிக்கப்பட்டுவரும் "நள்ளிரவில் நடந்தது" இப்பொழுது ரேவதி ப்ரொடக்ஷன்ஸாரால் ரேவதி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டு வருகிறது. படத்தை கே. வேம்பு டைரெக்ட் செய்து வருகிருர். டி. ஆர். ராமச்சந்திரன், எஸ். வரலக்ஷ்மி, கே. ஏ. தங்கவேலு ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

கிரஹலக்ஷ்மி

ரோஹிணி பிக்சர்ஸின் "கிருஹலக்ஷ்மி" தமிழ்ப் படம் அவர்களது ஸ்டுடியோவில் மளமளவென்று படமாகி வருகிறது. குடிவெறியில் கையில் ரிவால்வருடன் டாக்டர் அட்டகாசம் செய்கிருர். இந்தக் காட்சி சென்ற மாதம் இப்படத்திற்கெனப் படமாக்கப்பட்டது. டாக்டராக எம்.கே.ராதா நடித்தார். மற்றும் இப் படத்தில் அஞ்சலிதேவி, ஸாய்ராம், மீனாக்ஷி, பீர்முகம்மது ஆகியோரும் நடித்து வருகின்றனர். எச். எம். ரெட்டி டைரெக்ஷனில் தயாராகி வரும் இப்படத்தின் வசனங்களை உதய குமார் எழுதியிருக்கிருர்.

மேனகா

கஸ்தூரி பிலிம்ஸாரது "மேனகா"வில் மேனகாவாக நடிப்பது பத்மினி என்பது நிச்சயமாகி விட்டது. இப்படம் சுப்பராமன் டைரெக்ஷனில் மளமளவென்று பிலிம் சென்டரில் உருபெற்று வருகிறது. கதாநாயகன் வராக சாமியாக கே. ஆர். ராமசாமி நடித்து வருகிருர். மற்றும் கே.சாரங்கபாணி டி. கே. ராமச்சந்திரன், டி. வி. சேதுராமன் ஆகியோரும் நடித்து வருகின்றனர்.

எல்லாம் இன்ப மயம்

நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகி வரும் பி. என். டி. புரொடக்ஷன்ஸின் படத்திற்கு "எல்லாம் இன்பமயம்" என்று நாமகரணம் சூட்டியிருக்கிருர்கள். கே. ஏ. தங்கவேலு, டி. கே. ராமச்சந்திரன், (ராஜ) சுலோசனை சம்பந்தப்பட்ட சில காட்சிகள் சென்ற மாத மத்தியில் இப் படத்திற்கெனப் படமாக்கப்பட்டன. மற்றும் இப்படத்தில் பிரண்ட் ராமசாமி, சிவதாணு, பொட்டை கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் நடித்து வருகின்றனர். இப் படத்தில் கதாநாயகனுக ஜெமினி கணேசனுக்குப் பதில் டி. ஆர். ராமச்சந்திரன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப் படத்தின் சில பாட்டுக்களை வி. சீதாராமன் எழுதியிருக்கிருர்.

ஏழையின் ஆஸ்தி

ரோஹிணி பிக்சர்ஸின் அடுத்தவெளியீடு அவர்களது "ஏழையின் ஆஸ்தி" தமிழ்ப் படமாக இருக்குமாம். எச். எம். ரெட்டி மேற்பார்வையில் டி. எல். ராம்சந்தர் டைரெக்ட் செய்து வரும் இப் படத்தில், "டௌளகார்"ஜானகி, சூர்யகாந்தம், சந்திரகுமாரி, ராஜநலா, ஜக்கய்யா, சாயிராம் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

முதல் தேதி

பத்மினி பிக்சர்ஸின் இரண்டாவது தயாரிப்பான "முதல் தேதி" தமிழ் — கன்னடம் இரு பாஷைகளிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்ப் படத்தின் வசனங்களை எழுதியிருப்பதுடன், இரு பாஷைப் படங்களையும் ப. நீலகண்டன் டைரெக்ட் செய்து வருகிருர். படம் ரேவதி ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது. சிவாஜி கணேசன், அஞ்சலி தேவி, என். எஸ். கிருஷ்ணன், மதுரம், பி. ஆர். பந்துலு ஆகியோர் படத்தின் முக்கிய நடிகர் நடிகைகள்.

செல்லப் பிள்ளை

இடையில் சிறிதுகாலம் நின்று போயிருந்த ஏவி.

விரைவிலே திரைக்கு வரவிருக்கும் அசோகா புரொடக்ஷன்ஸின் "பத்மினி" தமிழ்ப் படத்தில் நடனப் புகழ் சகுந்தலாவை வெகு காலத்திற்குப் பிறகு நீங்கள் சந்திக்கலாம்.

இந்த உலகத்தில் திறந்தபோது ....என்று யோசித்துப் பார்த்தேன்.

ஸ்:—ஏன் சுற்றி வளைக்கிறீர்கள்? நான் எப்பொழுது பிறந்தேன் என்று கேட்கிறீர்கள்?

பா:—நீங்கள் உண்மையில் புத்திசாலி. சரி, நீங்கள் எங்கே பிறந்தீர்கள் சொல்லுங்கள்?

ஸ்:—கிழக்கு வங்காளத்தில் குல்னா மாகாணத்தில், எனது பெற்றோரின் இருப்பிடத்தில் பிப்ரவரி மாதம் 17ம் தேதி இந்த மாயா உலகத்தில் பிறந்தேன். என் பெற்றோர், அவர்கள் டெக்கா சர்வகலாசாலையில் படிக்கும் போதே ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டு மணந்துகொண்டார்கள். அப்படியாகத் தானே நானும் என் தங்கையும் இவ்வுலகில் ஜனிக்கக் காரணமாயிருந்தோம். எங்களுக்கு சகோதரன் கிடையாது. நாங்கள் சகோதரிகள் இருவர்தான். எனது பெற்றோர் தங்களது திருமணத்திற்குப் பின் கல்கத்தாவுக்கு வந்தார்கள். கல்கத்தா ஸ்காட்டிஷ் பள்ளியில் என் தந்தை தலைமை ஆசிரியராக இருந்தார். யுனைடெட் மிஷினரி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நான் கல்வி பயின்றேன்.

பா:—ஆனால், நான் இதையெல்லாம் பற்றி உங்களைக் கேட்கவில்லையே.

ஸ்:—நீங்கள் இதையெல்லாம் கேட்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, முன்கூட்டியே நானே சொல்லி உங்களுக்கு சிரமம் இல்லாமல் செய்துவிட்டேன்.

பா:—நீங்கள் மிகவும் அன்புடன் பழகுகிறீர்கள்.

ஸ்:—அன்புடன் பழகுவதென்பது குழந்தைப் பிராயத்திலிருந்தே என்னிடம் உண்டு! நான் குழந்தையாக இருந்த போது ஒரு சமயம் ஒரு பையன் என்னை ஒரு அறை அறைந்தான். நான் இரண்டாகத் திருப்பி அவனுக்குக் கொடுத்தேன். இதைவிட நான் எப்படி திரும்ப அன்பு செலுத்த முடியும்?

பா:—அடிக்கு பதில் யாராவது உங்கள் மீது ஒரு புஷ்பத்தை வீசினால் பதிலுக்கு நீங்கள் இரண்டு வீசுவீர்களோ?

ஸ்:—அந்த உரிமை ஒரே ஒருவருக்குத் தான் உண்டு.

பா:—அது யார்?

ஸ்:—நீங்களெல்லாம் சீக்கிரமே தெரிந்து கொள்வீர்கள்.

பா:—நீங்கள் அவரை மணந்துகொள்ளப் போகிறீர்களா?

ஸ்:—ஆம்; ஏன் உங்களுக்கு ஏதாவது ஆக்ஷேபணை உண்டோ?

பா:—பவித்திரமான அந்த விஷயத்திற்கு ஆக்ஷேபணையா? அவர் எப்படி இருப்பார் சொல்லுங்கள்?

ஸ்:—மனிதனைப் போல் இருப்பார். அவருக்கு இரண்டு காதுகள், இரண்டு கண்கள், சுருண்ட கரிய கிராப் முதலியவை உண்டு. அழகாகப் பேசுகிறார். உங்கள் மாதிரி வெறுப்பாகவே பேசமாட்டார்.

பா:—ஸ்மிருதிஜி, இது தவறான குற்றச்சாட்டு. நான் வெறுப்பாகப் பேசுகிற

ஜம்பனா–நந்தி தயாரிப்பான ''குடும்பம்'' தமிழ்ப் படத்தில் டி. வி. ராதாகிருஷ்ணனும், முத்துலக்ஷ்மியும் நடிக்கின்றனர்.

வன் என்றால் நீங்கள் ஒரு சண்டைக்காரி. சரி, நீங்கள் பேசவேண்டிய சந்தர்ப்பம் இது. உங்கள் குழந்தைப் பருவம் பற்றி இப்பொழுது எதாவது கூறுங்கள்.

ஸ்:—குழந்தைப் பருவத்தில் நான் பெரிய சண்டைக்காரியாக இருந்தேன்.

(சிரிப்பு)

ஆனால், இப்பொழுது அப்படியல்ல. விளையாடுவதில் எனக்குப் பிரியம் அதிகம். விடுமுறை நாட்களில் நாங்கள் குழந்தைகளாகச் சேர்ந்து நாடகங்கள் நடிப்போம்.

பா:—என்னமாதிரி நாடகங்கள்? ஒருவருடன் ஒருவர் சண்டை போடுவதா? அல்லது காதல் நாடகங்களா?

ஸ்:—ராம-சீதா போன்ற காதல் நாடகங்களும் உண்டு. ராபின் ஹூட் போன்ற வீரக் கதைகளும் உண்டு. இருஸ்துமஸ், புது வருஷப் பிறப்பு சமயங்களில் எங்கள் பள்ளிக்கூடத்தில் விசேஷமாக நாடகங்கள் உண்டு. கேலு நாயர் எனது உபாத்தியாயர். அவரிடம் நான் கதகளி நடனம் பயின்றேன்.

பா:—அப்படியானால் உங்களுக்குக் குழந்தைப் பிராயத்திலிருந்தே நடனம் தெரியுமென்று சொல்லுங்கள்.

ஸ்:—ஆம். படத்துறைக்கு வந்ததே நடனத்தினால் தான். எனக்கு நீச்சல் அடிப்பதில் மிகவும் பிரியம். என்னை என் பெற்றோர் அதற்கு அனுமதிப்பதே இல்லை. பல சமயங்களில் மூழ்கி சாவதிலிருந்து தப்பியிருக்கிறேன். ஆனால், நான் இப்பொழுது நன்றாக நீஞ்சுவேன்.

பா:—உங்களுக்கு நீச்சல் பழகிக்கொள்ளத் தேவையிருக்கவில்லையா?

ஸ்:—இல்லை. நானே தான் கற்றுக்கொண்டேன். பள்ளியில் படிக்கும் காலத்தில் பள்ளிக்கூட ஹாஸ்டலில் தான் நான் தங்கியிருந்தேன். ஹாஸ்டல் வாழ்க்கையே விசித்திரமானது. ஒருவரோடொருவர் வீண் சச்சரவு. சூப்பிரண்டின் தடபுடல். ஹாஸ்டல் வாழ்க்கையில் பல கண்டிப்புகள் உண்டு. அதெல்லாம் நல்ல சீர்திருத்தங்கள் தான்.

பா:—நீங்கள் கதோலிக் கிருஸ்தவ வகுப்பைச் சேர்ந்தவரா?

ஸ்:—ஆம்.

பா:—நீங்கள் எப்பொழுது எப்படி படத்துறையில் புகுந்தீர்கள்?

ஸ்:—நான் பள்ளியில் எனது உபாத்தியாயர் கேலு நாயரிடம் நடனம் கற்று வந்த சமயம், பிமல்ராய் ''உதயர் புதே'' என்ற வங்காளப் படத்தையும், ''ஹம்ரஹி'' ஹிந்திப் படத்தையும் தயாரித்து வந்தார். கேலு நாயர் மூலம் எனக்கு ''ஹம்ரஹி''யில் ஒரு நடன பாத்திரம் கிடைத்தது. நான் அதில் நல்ல பெயர் வாங்கினேன்.

பா:—அதன்பின் பள்ளியில் உங்களுக்குத் தனி மதிப்பு இருந்திருக்கும். மற்ற பெண்கள் உங்களிடம் அலாதியான மரியாதையுடன் நடந்து கொண்டிருப்பார்கள்.

ஸ்:—மதிப்பா....! சகமாணவிகள் என்னுடன் பேசுவதையே நிறுத்திக் கொண்டனர். எங்களது உறவினர்

களும், எங்கள் ஜாதியினரும் எங்களிடம் வெறுப்புக் காட்டினர்கள். அப்பொழுது எனக்கு அழுகையே வந்து விடும். ஆகவே, மெட்ரிக் பரீக்ஷை முடிக்கும்வரை நான் அதன்பின் வேறு எந்தப் படத்திலும் நடிக்கவில்லை.

பா:—மெட்ரிக் பரீக்ஷைக்குப் பின் நீங்கள் கல்லூரியில் சேர்ந்தீர்களா?

ஸ்:—மெட்ரிக்குக் பின் நான் கல்கத்தாவை விட்டு லாகூருக்குப் போனேன்.

பா:—அங்கு எந்தக் கல்லூரியில் சேர்ந்தீர்கள்?

ஸ்:—எந்தக் கல்லூரியிலும் சேரவில்லை. மஹேஸ்வர பிக்சர்ஸார் மாதம் 750 ரூபாய் சம்பளத்திற்கு என்னை ஒப்பந்தம் செய்து கொண்டு, "ராகினி" என்ற படத்தை லாகூரில் தயாரித்தனர்.

பா:—"ராகினி"யில் உங்களுடன்கூட நடித்த நடிகர்கள் யார் யார்?

ஸ்:—நஜமல் ஹஸன், அருணதாஸ் ஆகியோர். பிரான்தான் அப் படத்தில் கதாநாயகன்.

பா:—படத்தில் நடிக்கும்போது குறிப்பிடத் தக்க என்ன கஷ்டம் உங்களுக்கு ஏற்பட்டது.

ஸ்:—ஹிந்தி வசனங்கள். ஹிந்தி வசனங்களைக் கற்க நான் ரொம்ப சிரமப்பட்டேன். கடைசியில் "ராகினி" திரையிடப் பட்டதும் எனது பாகம் வெகுவாகப் பாராட்டுதல்களைப் பெற்றது. ஆகவே, நான் பாஞ்சோலியுடன் இரண்டு வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டேன். ராகினி, அல்-நஸீர் ஆகியோருடன் கூட "தம்பி"யில் நான் நடித்தேன்.

பா:—அதன் பின் பம்பாய் படத் தயாரிப்பாளர்கள் லாகூரிலிருந்த உங்களை அழைத்தார்கள் போலும்!

ஸ்:—நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தபின் நான் எனது பெற்றோருடன் டெல்ஹௌஸிக்குப் போனேன். பிறகு அமிருதஸரஸுக்கும், அங்கிருந்து டில்லிக்கும போனேம். டில்லியிலிருக்கும் சமயம் ரஞ்சித் மூவிடோனிலிருந்து அவர்களது படங்களில் நடிக்க எனக்கு அழைப்பு வந்தது. ஆனல், நான் பம்பாய்க்குப் போகவில்லை.

பா:—பின் டில்லியிலிருந்து எங்கு போனீர்கள்?

ஸ்:—உலகம் உருண்டையானது என்பது தெரியுமல்லவா? பல இடங்களுக்கும சுற்றிவிட்டு மீண்டும் கல்கத்தாவுக்கே வந்து சேர்ந்தேன்.

பா:—'1949 வருஷத்திய சிறந்த நடிகை' என்று நீங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டீர்கள், இல்லையா?

ஸ்:—ஆம், நீங்கள் சொல்வது சரி; கல்கத்தாவுக்கு வந்த பின் நான் பல வங்காளப் படங்களில் நடித்தேன். "அபிமன்" படத்தில் நடித்ததர்காகவே எனக்கு அட பெருமை கிடைத்தது.

பா:—பம்பாய்க்கு எட்பொழுது வந்தீகள்?

ஸ்:—1952ம் வருஷம பம்பாய் டாக்கீஸின் "ஷம்ஷீர்" படத்தில் நடிக்க பம்பாய் வந்தேன். அதன்பின்—"ஹம்டார்ட்", "ஹம்ஸபார்", "பாய் சாஹிப்", "பகத்சிங்", "தீன் பட்டி சார் ரஸ்தா" ஆகிய படங்களில் நடித்தேன். நான் நடிச்கும் பல படங்கள் இட்பொழுது தயாரிப்பில் இருச்கின்றன. "ஏக்-பாத்" படத்தில் ஹாச்கி விளையாட்டுக்காரர் தீன் தயாளுடன் நடிக்கிறேன். "பாய்ரே பாட்", "சண்புனி சௌக்". "லகன் மென் ஏக்" ஆகிய படங்களிலும் நடிக்கிறேன். லிட்டன் படமான "பிக்னிக்"கிலும் நான் நடித்திருக்கிறேன். அது மிகச் சிறிய படமானலும் அழ்கிய கலர் படம். அதை நான் வெகுவாக ரஸித்தேன்.

பா:—பம்பாயில் நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள்?

ஸ்:—கர் பகுதியில்.

பா:—உங்களுக்கு ஓய்வான சமயத்தில் அந்த இரண்டு கண், இரண்டு காதுப் பேர்வழி உங்களைக் காண வருகிருர் என்று நம்புகிறேன்.

ஸ்:—எனக்கு ஓய்வு இருந்தாலும்

புதிய ஸ்தாபனம்

மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்திலே சென்ற மாதம் 2ம் தேதி, "ஓரியன்டல் ஸினி ஆர்டிஸ்ட்ஸ் இன்பர்மேஷன் பீரோ—அண்டு என்டர்டெய்ன்மெண்டு புரோக்கர்ஸ்" என்ற புதிய ஸ்தாபனம் ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

படத் திறப்பு விழா

சென்னை, எழும்பூரில் நடைபெற்று வரும் ஸ்ரீ வேத சபாவில், கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில், சபையின் முன்னாள் தலைவரான வி. வி. ஸ்ரீனிவாச அய்யங்காரின் படத்தை,சுப்ரீம் கோர்ட் நீதிபதி டி. எல். வேங்கடராமய்யர் திறந்து வைத்தார்.

பாராட்டினார்கள்

இந்திய சர்க்கார், எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு பத்ம விபூஷண் என்ற பட்டத்தை அளித்துள்ளனர். கோகிலகானத்துக்கு இப்பட்டம் கிடைத்ததைப் பாராட்டி, மயிலை ரஸிக ரஞ்சனி சபையினர் ஒரு பாராட்டுக் கச்சேரியை சென்ற மாதம் முதல் தேதி ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்றைய தினம் தலைமை வகித்த சுப்ரீம் கோர்ட் நீதிபதி டி. எல். வேங்கடராமய்யர், சர்க்கார் எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு அப்பட்டத்தை அளித்தது மிகவும் பொருத்தமானது என்று குறிப்பிட்டார். பிறகு நடைபெற்ற பாடகியின் கச்சேரி வெகு சிறப்பாக அமைந்திருந்தது. இறுதியில் பாடகியின் சார்பில் "கல்கி" நன்றி தெரிவித்தார்.

அமெச்சூர்ஸ் உதவினர்

சென்ற மாதம் 12ம் தேதி, மயிலை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் "முருகன் ஓர் உழவன்" என்ற நாடகம் நடைபெற்றது. காலஞ் சென்ற கே. எஸ். வேங்கடரமணி எழுதிய நாவலைத் தழுவியது இந்த நாடகம். நாடகத்தை

தமிழ்நாடு ஏஜெண்டுகள் :—சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், மேலகோபுர வாசல், மதுரை,

எம். ஏ. வி. பிக்சர்ஸ் தயாரித்து வரும் "பெண்ணரசி" படத்தில் சூர்யகலா இவ்விதம் தோன்றி நடிக்கிறார்.

மயிலை அமெச்சூர் கோஷ்டியினர் சிறப்பாக நடித்தார்கள். கே. எஸ். வேங்கடரமணியின் குடும்ப உதவிக்காக நடைபெற்ற இந்த நாடகத்திற்கு "ஹிந்து" பத்திரிகையின் துணை ஆசிரியர் என். ரகுநாத அய்யர் தலைமை வகித்தார்.

பாக் பிலிம்களை பகிஷ்கரிக்க இந்திய முடிவு

ஆகஸ்டு 25க்குப் பிறகு தணிக்கை செய்யப்படும் எந்த பாகிஸ்தான் சினிமாப் படத்தையும் தருவிக்கவோ, அதில் பேரம் வைத்துக்கொள்ளவோ காட்டவோ கூடாதென்று இந்திய சினிமாப் பட உற்பத்தியாளர் சங்கம், சினிமாப் பட விநியோகஸ்தர்கள் சங்கம், சினிமா தியேட்டர்காரர்கள் சங்கம் அவற்றின் மெம்பர்களுக்கு கோரிக்கை வெளியிட்டது. இந்திய பிலிம்கள் சம்பந்தமாக பாகிஸ்தான் கொள்கை, போக்கு இவற்றை ஆட்சேபித்தே இந்த சங்கங்களின் நிர்வாகக் கமிட்டி பாகிஸ்தானுக்கு பிலிம்கள் அனுப்புவதை நிறுத்தத் தீர்மானித்துள்ளது.

தென்னிந்தியா பற்றி முழுநீள டாகுமெண்டரி

இத்தாலிய பிலிம் டைரெக்டர் ஆல்பிரடோ மீடாரியும், வசனகர்த்தா அன்டானியோ பியுரினேவும் சென்னை அஸ்டோரியா பிக்சர்ஸ் தியாகராஜனுடன் சேர்ந்து தென்னிந்தியாவின் பணபாட்டைக் காட்டும் சரித்திரப் பெருமை பெற்ற இடங்கள், சிற்பம் முதலிய கலைகள் அடங்கிய ஒரு முழுநீள டாகுமெண்டரி படம் எடுக்கப் போகிறார்களாம். இப்படத்தில் சங்கீதம் பிரதான அம்சமாயிருக்கும். டாக்டர் பி. வி. பதிதான் படங்கள் எடுத்துக் கொடுக்கப் போகிறவர். படம் பெர்ரானியா கலரில் தயாராகும்.

சினிமாக்கள் மீது கேஸ்கர் பாய்ச்சல்

"சினிமாவினால் ஏற்படும் கெடுதல்கள் குறித்து நாடு முழுவதும், குறிப்பாகப் பெற்றோர்களின் எதிர்ப்புக் கிளம்பி யிருப்பது அரசாங்கத்துக்குத் தெரியும், இந்த எதிர்ப்புக்கு அரசாங்க அனுதாபமும் உண்டு" என்று கடந்த ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி மத்திய சட்டசபையில் செய்தி இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் சொன்னார். அரசியல் சட்டம் குறுக்கே நிற்பதால், இது விஷயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

"மனு கொடுத்தவர்களும், வேறு இடங்களிலுள்ள பெற்றோர்களும் சினிமாவுக்கு எதிராகத் தெரிவித்துள்ள விஷயங்களை கவனிக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால், இது விஷயத்தில் நடவடிக்கை எடுக்க அரசாங்கத்துக்கு அரசியல் சட்டம் போதிய அதிகாரம் அளிக்கவில்லை. சமுதாய நலனுக்காக இந்த அதிகாரம் அரசாங்கத்துக்கு அளிக்கப்பட வேண்டுமா என்று முடிவு செய்யவேண்டியது சட்டசபையின் பொறுப்பு".

எஸ். டி. எஸ். யோகியாருக்குப் பாராட்டு

ச. து. சுப்ரமணிய யோகியாரைப் பாராட்டி அவரது நண்பர் இக்னேஷியஸ்(ஜாப்கோ கம்பெனி அதிபர்)சென்ற மாதம் 4ம் தேதி நேற்று அளித்த விருந்து உபசாரத்தில் சென்னை முதன் மந்திரி காமராஜ் பேசுகையில் 'யோகியார் பெரிய தேசபக்தர், கவி, கஷ்டங்களைப் பொருட்படுத்தாது எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பவர் என்றும் அவரது உதாரணத்தை மற்றவர்கள் பின்பற்ற வேண்டுமென்றும் கூறினர். யோகியார் மீண்டும் சினிமாத் தொழிலில் டைரெக்டராகப் பிரவேசிப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்து அவர் வெற்றிபெற வேண்டுமென்று வாழ்த்தினர். இக்னேஷியஸும், திரிலோக சீதாராமும் (''சிவாஜி'' ஆசிரியர்) யோகியாரைப் பாராட்டிப் பேசினர். யோகியார் ப தி லளி க் கை யி ல், இக்னேஷியஸ் மூலம்தான் கவிதை உலகில் தான் பிரவேசித்ததாகவும், ஒரு லட்சியத்தைத் தந்து வாழ்க்கை நியதிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் அளவுகோல்தான் கவிதை என்றும் கூறினர். ராயப்பேட்டை உட்லண்ட்ஸில் நடந்த இந்த விருந்திற்குப் பல தமிழ் எழுத்தாளர்களும் சினிமாக் கலைஞர்களும் வந்திருந்தனர்.

பாரதி கண்காட்சி

பாரதி பிறந்த தின விழா சென்ற மாதம் பல இடங்களில் கொண்டாடப் பெற்றது. அமெரிக்க செய்தி ஸ்தாபனத்தில் ''பாரதி கண் கா ட் சி'' ஒன்று இரண்டு வாரங்கள் நடைபெற்றது. பாரதி சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் அடங்கிய இந்தக் கண்காட்சியை பலரும் கண்டு ரஸித்து, அதை ஏற்பாடு செய்திருந்த ரா. அ. பத்மநாபனை வெகுவாகப் பாராட்டினர்கள்.

வெள்ள நிதிக்கு நக்ஷத்திர உதவி

அஸ்ஸாம், பீகார், வங்காளம் ஆகிய ராஜ்யங்களில் வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்காக சினிமா நட்சத்திரங்கள் சென்ற மாதம் 15ம் தேதி பம்பாய் நகரில் நிதி வசூல் செய்தனர். பிரபல நடிகர் ராஜ்கபூர் தலைமையில் ஊர்வலம் ஒன்று நடந்தது. பிரபல சினிமா நடிகைகளான நர்கிஸ், கல்பனா கார்திக், பீனா ராய், சுரய்யா, கீதாபாலி, நிம்மி, நளினி ஜெய்வந்த், சுமித்ராதேவி, ஷம்மி பிரபல நடிகர்களான தேவ் ஆனந்த், பிரேம் நாத், அசோக்குமார், திலிப் குமார், கிஷோர் ஸாகு, டேவிட், ஆகா, கோப், பிரபல சினிமாப் பட டைரெக்டரான சாந்தாராம் சங்கீத டைரெக்டர் நவுஷத் ஆகியவர்கள் லாரிகளில் ஊர்வலம் சென்றனர்.

அவர்களைத் தொடர்ந்து 50 லாரிகளில் நூற்றுக்கணக்கான சினிமா கலைஞர்களும் நடிகைகளும் ஊர்வலம் வந்தனர். ஊர்வலம் 10 மைல் தூரம் சுற்றி வந்தது. லக்ஷக் கணக்கான மக்கள் தெருக்களின் இருபுறமும் வரிசையாக நின்று ஊர்வலத்தை வேடிக்கை பார்த்தனர். நடிகை, நடிகர்கள் கையில் உண்டி வைத்திருந்தனர். மக்களிடம் கைநீட்டி பணம், துணி, மருந்து ஆகியவைகளை வசூல் செய்தனர். தெரு ஓரத்தில் நின்று கொண்டிருந்த மக்கள் உண்டியில் காசுபோட கையை நீட்டினர். எட்டவில்லை. உடனே நடிகைகளும், நடிகர்களும் லாரியிலிருந்து

விலைவாசிகள் அதிகமாக உள்ள இந்தக் காலத்தில் ''குடும்பம்'' நடத்துவது ரொம்ப சிரமம்தான் ஸார்'' என்கிறரோ ''குடும்ப''த்தில் இப்படி வரும் டி. எஸ். துரைராஜ்.

கீழே குதித்து உண்டியில் பணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மக்கள் நன்கொடையாகக் கொடுத்த சட்டை, வேஷ்டி முதலியவைகளை நடிகைகள் தலையில் சுமந்து சென்றனர். வீட்டு மாடியில் நின்று கொண்டிருந்தவர்கள் அங்கிருந்தபடியே பணத்தையும் துணிகளையும் லாரிமீது வீசி எறிந்தனர்.

இரண்டு லக்ஷம் ரூபாய் வசூல் செய்வது என்று நட்சத்திரங்கள் உறுதி கொண்டிருந்தனர். ஆனால், மக்களின் உற்சாக மிகுதியில் அதற்கும் அதிகமாகவே பணம் வசூலாகியுள்ளது. ஊர்வலத்தை முன்னிட்டு எல்லா சினிமா ஸ்டுடியோக்களும் அன்று மூடப்பட்டன. சினிமா சிப்பந்திகளுக்கு சம்பளத்துடன் லீவு கொடுக்கப்பட்டது.

எது வாழ்வு

சென்னை வைத்யக் கல்லூரி பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியின் அங்கத்தினர்களால், அவர்களது சங்க உதவிக்காக "எது வாழ்வு?" நாடகம் அண்ணாமலை மன்றத்தில் சென்ற மாதம் 12ந் தேதி டாக்டர் பி. வி. செரியன் முன்னிலையில் நடந்தது. அருமையான நாடகத்தை உருக்கமாக நடித்தார்கள்.

ராஜமாணிக்கத்திற்குப் பாராட்டு

நாடகக் கலைஞர் நவாப்டி.எஸ். ராஜமாணிக்கத்தைப் பாராட்டி, ஆகஸ்ட் மாதம் 31ம் தேதி அண்ணாமலை மன்றத்தில் ஒரு விழா நடந்தது. வெள்ளியினாலும் தங்கத்தினாலும் செய்யப்பட்ட சபரிமலை உருவத்தை ராஜமாணிக்கத்திற்கு ஸி. பி. ராமசாமி அய்யர் வழங்கி ராஜமாணிக்கத்தைப் பாராட்டிப் பேசினார். 'மலைகளையும் நகர்த்தும் வலிமை நம்பிக்கைக்கு உண்டு என்பது இன்று புலனாகிறது' என்று அவர் கூறினார்.

விழாவில் ராஜாஜி, மந்திரி சுப்பிரமணியம், சிவ ஷண்முகம் பிள்ளை, செட்டிநாடு ராஜா முத்தையா செட்டியார், டி. செங்கல்வராயன், "கல்கி" கிருஷ்ணமூர்த்தி முதலியோர் கலந்து கொண்டனர்.

ராஜாஜி பேசுகையில் கூறியதாவது:-

ராஜமாணிக்கம் என் பக்தர். இன்று அவருக்கு அளிக்கும் பரிசு அவருக்கல்ல. அவர் கொண்டுள்ள நல்ல நோக்கத்துக்கு, தெய்வ நம்பிக்கைக்கு ஆகும். பக்தி மக்களுக்கு சந்தோஷத்தை அளிக்கிறது. பக்தியின் அவசியத்துக்கு அது ஒரு காரணமே போதும். பணம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் பக்தியுமாகும். பணத்தை இழந்தால் சம்பாதித்துக் கொள்ளலாம். பக்தியை இழந்தால் மீண்டும் பெற முடியாது. ஒரு பெண் நல்ல சமையல்காரி என்பதால் மட்டும் ஒருவன் அவளை மணந்து கொள்வதில்லை. அன்பும் காதலும் ஏற்பட்டு அவளை விரும்பியே ஒருவன் மணந்து கொள்கிறான். அதுபோல கடவுள் மீது எல்லோரும் காதல் கொள்ள வேண்டும்.

நவாப் ராஜமாணிக்கம் பதிலளிக்கையில் மிகவும் உருக்கமாகப் பேசினார். சுயராஜ்யம் பெறுவதற்கு முன்னால் நமக்கு எப்படி தேச பக்தி அவசியப்பட்டதோ அதுபோல இப்போது நமக்கு தெய்வ பக்தி அவசியமாகும் என்று அவர் கூறினார்.

நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியார் நாடகம் நடத்த ஏற்பாடு செய்து கொடுத்த "ஸ்டேஜ்" ஸ்தாபன நிர்வாகிகள் சார்பில் ராமபத்திரன் நன்றி தெரிவித்தார். டி. செங்கல்வராயன் வந்தனோபசாரம் கூறினார்.

நடனம் ஆடினர்

'சமீப காலத்திலே நடைபெற்ற நல்ல நடன நிகழ்ச்சி' என்று குறிப்பிடலாம், சென்ற மாதம் 5ம் தேதி மியூஸியம் தியேட்டரில் நடைபெற்ற குமாரி வனமாலா, குமாரி மாலதி ஆகிய சிறுமிகளின் நடனக் கச்சேரியை. சென்னை, அபிராமபுரம் மாதர் சங்கத்தின் சார்பில், அச்சங்க உதவி நிதிக்காக நடைபெற்றது அன்றையக் கச்சேரி. கர்நாடக மானதும், மிகவும் சிரமமானது, அழகானது என்று கருதப்படும் உஸேனி வர்ணத்தை இவர்கள் கச்சிதமாக ஆடினார்கள். "மாலைப் பொழுதினிலே" என்ற பதத்திற்கு முருகனை மாலதி வந்து ஆடியது குறிப்பிடும்படி சிறப்பாக இருந்தது. பொதுவாக நடன உலகிலே நல்ல புகழ் இவர்கள் பெறக் கூடும் என்பதற்கு சூசகமாக இருந்தது அவர்களது அன்றையக் கச்சேரி. இச் சிறுமிகள் தனமாணிக்கம் அம்மாள், ஸி. ராமமூர்த்தி ஆகிய இருவரிடமும் சிக்ஷை பெற்றுள்ளனர். ராஜலக்ஷ்மி சந்தானம் பொருத்தமாவும் இனிமையாகவும் பதங்கள் பாடினார். அன்று தலைமை

எம்.மின் "செல்லப் பிள்ளை"யின் படப் பிடிப்பு மீண்டும் ஏவி. எம். ஸ்டுடியோவில் ஆரம்பமாகியுள்ளது. படத்தின் வசனங்களை மேற்கொண்டு ஜாவர் சீதாராமன் எழுதியுள்ளார். இதே கதை தெலுங்கிலும் "வதீனா" என்ற பெயரில் படமாகி வருகிறது. சாவித்திரி, கண்ணாம்பா, கே. ஆர். ராமசாமி, எஸ். வி. ஸஹஸ்ரநாமம், பி. டி. சம்பந்தம், பி. ஆர். பந்துலு பிரதம பாகங்களில் நடிக்கும் படம். தெலுங்குப் படத்தில் நாகேஸ்வர ராவ் நடிக்கிறார். இரு படங்களையும் எம். வி. ராமன் டைரெக்ட் செய்கிறார்.

நல்ல பிள்ளை

ஹிந்தியில் வெளிவந்த "அல்பேலா" என்ற படத்தைத் தமிழாக்கி வருகிறார்கள் ஈஸ்டர்ன் ஆர்ட் புரொடக்ஷன்ஸார். பகவான், கீதாபலி ஆகியோர் நடித்துள்ள இந்த ஹிந்திப் படத்தின் தமிழாக்கம் "நல்ல பிள்ளை" என்ற பெயரில் வெளிவரும். லீலா, ராஜா ஆகியோர் பின்னணியில் பாடியுள்ளனர். தஞ்சை ராமய்யாதாஸ் வசனங்களை எழுதிய இப் படத்தின் தமிழ் வசனங்களை டி.கே. பட்டம்மாள், பத்மா மற்றும் பலர் பேசியுள்ளனர்.

ரத்தக் கண்ணீர்

நிச்சயமாக தீபாவளி வெளியீடு என்று சொல்லக்கூடிய படம் "ரத்தக் கண்ணீர்" ஆகும். நாடகமாக நடிக்கப்பட்டு ஒரு புரட்சியை உண்டு பண்ணியதாகும் இது. நாஷனல் பிக்சர்ஸின் தயாரிப்பான இப்படத்தை கிருஷ்ணன் - பஞ்சு டைரெக்ட் செய்து வருகின்றனர்.

மெர்குரியின் "போன மச்சான் திரும்பி வந்து விடுவார்" தீபாவளிக்கு என்று சந்தோஷமாய் கூறுகிறார் தங்கவேலு.

எம். ஆர். ராதா பிரதம பாகத்தில் நடிக்கும் இப் படத்தில் அவர் தவிர ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம், சந்திரபாபு ஆகியோரும் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர்.

வெறும் பேச்சல்ல

பிரின்ஸிபல் பிக்சர்ஸின் "வெறும் பேச்சல்ல" என்ற தமிழ்ப் படம் ஸிடாடல் ஸ்டுடியோவில் பெறுமளவு படமாகி விட்டதாம். புது மாதிரியான கதை அமைப்பைக் கொண்டதாக இருக்குமாம் இப் படம். ஜோஸப் பள்ளிபாட் டைரெக்ஷனில் தயாராகி வரும் இப் படத்தில் டி. எஸ். பாலய்யா, மிஸ்டர் மைசூர் என்ற சுதர்ஸன், பத்மினி, எஸ். வரலக்ஷ்மி ஆகியோர் நடிக்கின்றனர்.

நல்லவன்

தீபாவளிக்கு வரவிருக்கும் ஸன் ரைஸ் புரொடக்ஷன்ஸின் "நல்லவன்". தமிழ்ப் படம் எம். திருவேங்கிடம் டைரெக்ஷனில் உருவாகி இறுதிக் கட்டத்தில் உள்ளது. படத்தின் வசனங்களை ஏ. எல். நாராயணனும், பாடல்களை ராமய்யாதாஸும் எழுதியுள்ளனர். மனோஹர், நம்பியார், சாமா, வி. கே. ராமசாமி, சாயிராம், முஸ்தாபா, பி. கே. சரஸ்வதி, ஸி. கே. சரஸ்வதி, ராஜ சுலோசனா, ரேவதி, எஸ். ஆர். லக்ஷ்மி ஆகியோர் நடிக்கிறார்கள்.

பெண்ணரசி

எம். ஏ. வி. பிக்சர்ஸின் "பெண்ணரசி" கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் படமாக ஆரம்பித்துள்ளது. படத்தின் கதை-வசனம் ஏ. பி. நாகராஜனால் எழுதப்பட்டுள்ளது. ஏ. பி. நாகராஜன், எம். என். நம்பியார், எஸ். ஏ. நடராஜன், ஏ. கருணாநிதி, பி. எஸ். வெங்கடாஜலம், வி. எம். ஏழுமலை, ஸி. ஆர். சகாதேவன், பி. கண்ணாம்பா, ஆர். சுலோசனா, சூர்யகலா, ருஷ்யேந்திர மணி, ஸி.வி. சரோஜா ஆகியோர் நடித்து வரும் இப்படத்தை கே. சோமு டைரெக்ட் செய்கிறார்.

இது செய்தி

குழந்தைகள் பிலிம் சொஸைட்டி

மைசூர் பிரீமியர் ஸ்டுடியோவில், ப்ஸ்வராஜ் ஆதரவின் கீழ், மைசூரைச் சேர்ந்த சமூக சேவா ஊழியர்களும், மற்றும் பிரமுகர்களும் சென்ற மாதம் முதல் வாரத்தில் கூடி, "குழந்தைகள் கலாசார பிலிம் சொஸைட்டி" ஒன்றை ஸ்தாபித்தனர். டைரெக்டர் கே. சுப்ரமணியம் இந்த சொஸைட்டியின் நோக்கத்தை விவரித்துக் கூறுகையில், குழந்தைகளுக்கான படங்களைத் தயாரிப்பதில், தயாரிப்பாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று மத்ய சர்க்கார் விரும்புவதாகவும், இதற்காக விசேஷப் பரிசுகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். டில்லியில் நடத்தப்பட்டதைப் போல,வருகிற தஸராவின்போது,மைசூரிலும் ஒரு "குழந்தைகள் பிலிம் விழாவை" நடத்துவதெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

சாந்தா ஆப்தேமீது வழக்கு

பிரபல நடிகை சாந்தா ஆப்தேமீதும் அவருடைய சகோதரர் பாபுராவ் ஆப்தேமீதும், 'போலீஸ் அதிகாரிகள் சோதனையிட வந்தபோது அவர்களைத் தடுத்து தாக்கி காயப்படுத்தியதாகவும்; குடித்திருந்ததோடு, சாராயம் வைத்திருந்ததாகவும்' நாகபுரி மாஜிஸ்டிரேட் குற்றப் பத்திரிகை வாசித்தார். கடந்த ஏப்ரல் 7ம் தேதி இவ்விருவரும் நாகபுரியில் ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கையில் அவர்களுடைய அறையை சோதனை போடச் சென்றபோது மேற்சொன்ன குற்றங்கள் புரிந்ததாக போலீஸார் கூறினர். சந்தா ஆப்தே நடித்த நாடகத்துக்கு இலவச பாஸ் கொடுக்க மறுத்ததற்காக போலீஸார் இந்த வழக்கை ஜோடித்திருப்பதாக எதிர்கள் கூறினர்.

இந்தியாவின் டெலிவிஷன்

இரண்டாவது ஐந்து வருஷ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தியாவில் டெலிவிஷன் நுழைக்கப்படுமென்று ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் தெரிவித்துள்ளார். 1956-57க்குள் டெலிவிஷன் இயங்க ஆரம்பித்து விடுமென்றும் அவர் சொன்னார். டெலிவிஷன் புதிய முறைகளை தொழில் நுணுக்க நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள் என்றும் டாக்டர் கேஸ்கர் தெரிவித்தார்.

ஸ்டுடியோ ஏலம்

சென்ற வருஷம் வெள்ளி விழாக் கொண்டாடிய பம்பாய் ரஞ்சித் மூவிடோன் ஸ்டுடியோ ஏலத்துக்கு வந்துவிட்டது. இந்த ஸ்டுடியோ ஏஷியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியாரிடம பந்தகம் வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் கடன் கொடுத்த பணத்துக்கு வியாஜ்யம் தொடரவே பம்பாய் ஹைக்கோர்ட்டார் ஒரு ரிஸீவரை நியமித்தனர்.

ரேடியோ சங்கீத விழா

இம்மாதம் 23ம் தேதி முதல் 27ம் தேதி வரை, அகில இந்திய ரேடியோ, "ரேடியோ சங்கீத சம்மேளனம்" ஒன்றை நடத்தும். உயர்ந்த சங்கீதக் கச்சேரிகளுடன் ஹிந்துஸ்தானி, கர்நாடக சங்கீதம் பற்றிய விவாதங்களும் நடைபெறும். ஹிந்துஸ்தானி சங்கீத நிகழ்ச்சிகள் டில்லியிலும், கர்நாடக சங்கீத நிகழ்ச்சிகள் சென்னையிலும் நடைபெறும். ராகங்களை அவைகளுக்கு உரிய வேளையில் பாட வசதியாக காலையிலும் மாலையிலும் சம்மேளன நிகழ்ச்சிகள் நடைபெறும்.

"பழையனூர் நீலி"

"ரத்த பாச"த்தைத் தயாரித்த அவ்வை புரொடக்ஷன்ஸார் அடுத்தபடி "பழையனூர் நீலி" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். "காதல்" பத்திரிகையின் ஆசிரியர் அரு. ராமநாதன் எழுதிய கதையாகும் இது.

ஐந்தாம் தமிழ் மகாநாடு

இம்மகாநாடு முதல் மூன்று ஆண்டுகள் கல்கத்தாவிலும், கடந்த ஆண்டு பம்பாயிலும் நடைபெற்றது. இவ்வாண்டு, ஐந்தாவது தமிழ் மகாநாடு, நாளது அக்டோபர் மாதம், இந்தியாவின் தொழிற்சாலை நகரமான ஜெம்ஷெட்பூரில் நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டை ஒட்டி தமிழ்ப் புத்தக—பத்திரிகைகள் கண்காட்சியொன்றும் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

வகித்த "கல்கி" ஆசிரியர் ரா. கிருஷ்ண மூர்த்தி சிறுமிகளின் திறமையைப் பாராட்டினர். சரஸ்வதி தியாகராஜன், ராஜேஸ்வரி சேதுராமன் இருவரையும் காரியதரிசிகளாகக் கொண்டது அபிராமபுரம் மாதர் சங்கம்.

மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப் ஆதரவில் சென்ற மாதம் 11ம் தேதி குமாரி (பொள்ளாச்சி) கமலாவின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது.

ரேடியோவில் மீண்டும் சினிமாப் பாட்டுகள்

சர்க்காருடன் சில பெரிய பிலம் உற்பத்தியாளர்கள் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும், ரேடியோவில் பிலம் இசைத்தட்டுகளை மீண்டும் ஒலிபரப்புவதற்கான ஒப்பந்தம் சீக்கிரமே ஏற்படும் என நம்புவதாகவும் செய்தி - ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் கேஸ்கர் ஆகஸ்ட் மாத இறுதியில் ஒரு தகவலை வெளியிட்டார். ஆனல் ரேடியோ நிகழ்ச்சிகளில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தைத்தான் சினிமாப் பாட்டுகளுக்கு ஒதுக்க முடியும் என்பதையும் தெளிவு படுத்தினர்.

மந்திரி மேலும் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு:--சினிமாப் பாட்டுகள் முழுவதையுமே நான் கண்டிக்காவிடினும், இப்பாட்டுகளில் பெரும்பாலானவை மட்டரகமான அமெரிககர் பாணியிலும், ஆபாசமாகவும் உள்ளன என்று கூற வேண்டியிருக்கிறது. மக்களின் ரஸனையைக் குறைப்பதற்குச் சர்க்கார் அனுமதிக்காது. பிலம் உற்பத்தியாளருடன் ஒப்பந்தம் ரத்தானதற்கு சர்க்கார் பொறுப்பாளி அல்ல. இதை உணர்ந்து சில பிரபல உற்பத்தியாளர்கள் சர்க்காருடன் கடிதப்போக்குவரத்து நடத்தி வருகின்றனர்.

"ஒழுக்கக் குறைவாகவும், மகத்தான இந்திய சமுதாயத்தின் வாழ்வை மோசமாகவும் சித்தரிக்கும் பிலம்களுக்குத் தடை விதிக்க சர்க்காருக்கு அதிகாரமில்லை. நமது படங்களில் சில, ஆபாசமான அமெரிக்கப் படங்களை விடவும் மோசமாக இருக்கின்றன. வசனங்களை முன் தணிக்கை செய்யக் கூட சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. சட்ட ஷரத்துக்கு முரணுகவுள்ள ஆபாசக் காட்சிகளை மாத்திரமே சர்க்கார் ஆட்சேபிக்க முடியும். இவை பற்றி சர்க்கார் சற்று கண்டிப்புடன் நடந்து கொள்ள விரும்பினல் பத்திரிக்கைகளில் பலத்த ஆட்சேபம் எழுகிறது. இவ்விஷயத்தில் சர்க்காருடன் பத்திரிகைகள் ஒத்துழைக்க வேண்டும். இவ்விஷயத்தில் பார்லிமெண்ட் எனக்குப் போதிய அதிகாரம் வழங்கும் வரை நான் எதுவும் செய்வதற்கில்லை."

அரவிந்த் பிக்சர்ஸார் தயாரிக்கும் "முல்லை வனம்" என்ற படத்தில் எஸ். ஏ. நடராஜன்

சினிமாபற்றி உப ராஷ்டிரபதி

ஜெமினியின் புது ஹிந்திப் படமான "பஹூத்தின் ஹூவே" புது டில்லியில் சென்ற மாதம் 3-ம் தேதி திரையிடப்பட்டது. உதவி ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் படத் திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் எல்லா தொழில் நுட்ப சாதனங்களையும் போல சினிமாவும் ஒரு உபயோகமான சாதனம் என்றும் இதை எல்லா ரசிகர்களும் உள்ள மக்களுக்கு உபயோகமுள்ளதாக்கி அவர்களது உற்சா

கத்தை அதிகப்படுத்துவதாக இருந்தால் அதைப் பாராட்டத்தான் வேண்டுமென்றும் அவர் கூறினார். ராதாகிருஷ்ணன் மேலும் கூறியதாவது:

சினிமா ஒரேயடியாக நல்லதென்றோ அல்லது கெட்டதென்றோ யாரும் சொல்லிவிட முடியாது என்று நான் நினைக்கிறேன். ஒவ்வொரு படத்தையும் அதன் தன்மையையும் உபயோகத்தையும் பார்த்தே தனித் தனியாக மதிப்பிட வேண்டும். வாஸனை எனக்கு 30 வருஷங்களாகத் தெரியும். அவர் பொழுது போக்குக்காகப் படம் எடுக்கவில்லை. கலை அபிமானத்தினால்தான் எடுக்கிறார். நாட்டின் ருசியையும் கலாச்சாரத்தை தையும் வளர்ப்பதற்கு சினிமாவைப் பயன்படுத்த அவர் விரும்புகிறார். அவரது நோக்கம்வெறும் வியாபார நோக்கமல்ல. சினிமாவில் கலாச்சார அம்சம் பிரதானமாக இடம் பெறும் வரையில் சினிமா உபயோகமான பணி ஆற்றும்; தார்மீக உணர்ச்சிகளைத் தொடும் பல காட்சிகளை இப்படத்தில் தற்போது நாம் பார்த்தோம். நாம் பல பரம்பரைகளாகக் கேட்டு வந்த ஒரு கதையைத் திரும்பச் சொல்வது மட்டுமல்ல. நமது மக்களின் ருசிக்கே பிடித்தமானபடி கதையைச் சொல்வதும், ஒரு நீதி போதிக்கும் வகையில் கதையைச் சொல்வதும்தான் இந்தப் படத்தின் நோக்கம். எனக்கு ஹிந்தி அதிகம் தெரியாது. ஆனால் 'கண்ணீர் விடாமலும்-மற்ற கஷ்டங்களை அனுபவிக்காமலும், ஹிந்தி கற்றுக்கொள்ள ஹிந்திப் படங்களை பார்ப்பது ஒரு வழி' என்பதை ஹிந்தி தெரிந்த என் நண்பர்கள் உணருகிறார்கள். இப்படத்தை அதிகம் பேர் வெறும் மகிழ்ச்சிக்காக மட்டுமின்றி நாட்டில்பாஷையைத் தெரிந்து கொள்ளவும் பார்ப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆரம்பத்தில் எஸ். எஸ். வாஸன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அன்றைய வசூல் பூராவும் பிரதமர் வெள்ள நிவாரண நிதிக்கு அளிக்கப்படுவதாக அவர் கூறினார்.

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸிஸ், 37, ஜானிஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள்: **B. பாலபட்டாபி செட்டியார்,** (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) **கோயமுத்தூர்.**

போட்டு இப்படிப் படுத்துகிருயே'' என்று சொன்ஞல், அந்தக் கிராதகன், "இந்தப் போக்கற்ற சனியன்கள் இல்லையென்று யார் அழுதார்கள்!'' என்பான்.

"அவளும் உன்னைப்போலவே, உன் அப்பாவால் வளர்ப்புப் பெண்ணுக ஏற்றுக்கொள்ளப் பட்டவள்தான்; தெரியுமா உனக்கு?'' என்பேன் நான்.

"ஓ! தெரியும்; நன்ருகத் தெரியும்; அவள் உன் அண்ணுவின் பெண் என்பதும் தெரியும். அதனுல்தான் உனக்கு அவளிடம் இத்தனை கரிசனம் என்பதும் எப்பொழுதோ எனக்குத் தெரியும்!'' என்று முகத்திலே குரோதம் மிதக்கக் கூறுவான்.

பன்னிரெண்டு வயது நடந்துகொண்டிருந்தபோதே அவனுடைய போக்கு இப்படி இருந்ததென்ருல், பிற்காலத்தில் அது எப்படி வளர்ந்திருக்க வேண்டும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

ஆனுல் அவன் போக்கை இப்படியே வளரவிட்டுக் கொண்டிருந்தால் கோட்ஸே மாமாவுக்கு நான் அளித்த வாக்குறுதி என்னுவது? அதிலும், அச் சிறு பிராயத்திலே புகை பிடித்தல், சீட்டு விளையாடுதல் போன்ற துர்ப் பழக்கங்களும் அவனிடம் குடிகொள்ள ஆரம்பித்ததைக் கண்டபோது என்னுல் சும்மா இருக்க முடியவில்லை. 'ஆடிக் கறக்கும் மாட்டை ஆடிக் கற; பாடிக் கறக்கும் மாட்டை பாடிக் கற' என்ற முதுமொழிப்படி நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பயனளிக்க வில்லை.

இந்தச் சமயத்தில்தான் வக்கில் ஷிண்டே அவனை வசப்படுத்த ஒரு வழி காட்டினுர். அவர் நாவில் ஒன்றில் குழந்தைகளின் க்ஷேம நலன்களை விசாரிக்க வருவதுண்டு.

நடந்ததைக் கேட்ட அவர் சொன்னுர்: "நீங்கள் சொல்வதைக் கேட்கையில், அவன் தகாத சகவாசத்தால் இப்படி மாறி வருகிருன் என்று தோன்றுகிறது. கன்றுதான என்ருலும் பன்றியுடன சேர்ந்துவிட்டால் அதன் குணங்களைத்தான் கொள்ளும். கன்றைக் கன்ருேடு கட்டிப்போட்டுத் திருத்தவேண்டும். உங்களுக்கு ஆக்ஷேபணையில்லையென்ருல் நான் ஒரு ஆலோசனை கூறுகிறேன்: சென்ற வருஷம் வரையில் என்னிடம் குமாஸ்தாவாக வேலை பார்த்து, திடீர் மரணத்துக்குள்ளான ஸ்ரீகண்டே என்பவரின் மகன் ஒரு பையன் இருக்கிருன். ஏறக்குறைய திவாகரனின் வயதே இருக்கும். ஏழைமை நிலை காரணமாக படிக்க வழியில்லாதிருக்கிருன். பையன் அழகிலும்,குணத்திலும் அற்புதமானவன். எவரிடமும் வலியச் சிநேகம் கொண்டு, ஆட்களுக்கு ஒப்ப நடந்து கொள்ளுவதில் வல்லவன். நற்குணங்களின் இருப்பிடமான அந்தப் பையனைத் திவாகரனின் பள்ளியிலே சேர்த்து, இந்த வீட்டோடு வைத்துக் கொள்ள இசைந்தீர்களானுல், நற்சகவாசத்தால் திவாகரன் திருந்திவிடக் கூடும். அதோடு, ஏழைச் சிறுவன் ஒருவனுக்கு அன்ன—வஸ்திரம் கொடுத்து, கல்வி அறிவும் புகட்டிய புண்ணியமும் உங்களைச் சாரும்.''

13-4-57.

எப்படியாவது திவாகரன் நல்வழிப் பட்டால் போதும் என்றிருந்த நான், வக்கில் கூறியவாறு அந்தச் சிறுவன் சியாம்சுந்தரனை அவன் அம்மாவின் அனுமதி பெற்று அழைத்து வந்து வீட்டோடு வைத்துக்கொண்டேன். திவாகரனின் பள்ளியிலே கல்வி கற்கவும் ஏற்பாடு செய்தேன். "சியாம், திவாகரனை உன தம்பி என்று நினைத்துக் கொள். அவன் துஷ்டர்களுடன் சேர்ந்து கெட்டலைந்து கொண்டிருக்கிருன். அவனை இணைபிரியாதிருந்து, சுமுகமாக நல்வழிக்குத் திருப்பி விட்டுவிடவேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டேன்.

"ஆகட்டும் மாமி; என்னுல் இயன்ற வரையில் முயன்று அவன் கெட்ட சகவாசம் கொள்ளாது பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று அவனும் எனக்கு நம்பிக்கை யூட்டினுன்.

ஆனுல், எங்கேயாவது மலையைக் கடப்பாறையால் புரட்டிவிட முடியுமா? ஆனைப்பட்ட என் போன்ற பெரியவர்களாலே வசப்படுத்த முடியாத திவாகரனைச் சியாமாலும் நல்லவனுக்க முடியவில்லை. ஆனுல் அவனுடைய சம்சர்க்கத்தால் திவாகரனின் படிப்பில்

நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அதோடு சியாமுடன் அத்தியந்த நட்பும் பூண்டான் அவன். இருந்தாலும், படிப்பும் நட்பும் மாத்திரமே அவனை நல்லவனுக்கிவிட முடியாதே!

ஒவ்வொரு நாளும் அவன் யார் யாருடன் சேர்ந்து என்ன என்ன துஷ்கிருத்தியங்கள் செய்தான் என்பதை என்னிடம் வந்து ஒப்புவிப்பான் சியாம், "நான் கெஞ்சினேன், மாமி. தடுக்கக்கூடத் தடுத்தேன். ஆனல் அவன் என்னைச் சட்டை செய்யவில்லையே! நான் என்ன செய்வேன்?" என்று அப்பாலகன் வருந்தும்போது, நானும் அவனுடன் சேர்ந்து வருந்துவேன். வேறு என்ன செய்வது?

கடைசியில், மறுபடியும் ஷிண்டேயிடம் அவன் திருந்தாததைப்பற்றிக் கூறி, வேறு என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டேன்.

"அவன் கேட்டபோதெல்லாம் கைச் செலவுக்குப் பணம் கொடுப்பதை நிறுத்திப் பாருங்கள். அவன் கையில் பணம் இருப்பதால்தானே துஷ்டர்கள் அவனைச்சுற்றி அலைகிறார்கள். அதை நிறுத்திவிட்டீர்களானல், அவர்களும் ஒதுங்கி விடக்கூடும்" என்று மற்றொரு ஆலோசனையை வெளியிட்டார் அவர்.

'அநுபவிக்கப் பிறந்த பிள்ளை. இந்த ஏராளமான சொத்துக்களுக்கு ஏகபோக யஜமானகை விளங்கப் போகிறவன். தரித்திரத்தில் பிறந்து வளர்ந்த நாம், குறுக்கிட்டு நமது தரித்திர புத்தியைக் காட்ட வேண்டாம்' என்று அதுவரையில் அவன் எத்தனை பணம் கேட்டாலும்,ஏனென்று கேட்காமல் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்படி இருந்தது தான் அவனைக் கெட்ட வழிகளில் திருப்பிவிட்டு விட்டது என்பதை ஷிண்டே எடுத்துக் காட்டியதும் அவ் வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்தேன்.

அன்று சியாமுடன் பள்ளிக்குக்கிளம்பியபோது, திவாகரன் என்னிடம் வந்து, "அம்மா என்னிடம் பணமே இல்லை; ஒரு பத்து ரூபாய் கொடு" என்று வழக்கம்போலக் கேட்டான்.

"எதற்கடா இப்பொழுது பத்து ரூபாய்?" என்று கேட்டேன் நான்.

"கைச் செலவுக்குத்தான்" என்றுன் அவன்.

"இல்லை; உன் கைச் செலவுக்கு இனி நான் பணம் தரமாட்டேன். அதனல் நீ கெட்டுப் போகிருய்: அத்தியாவசியமானது என்று அறிந்தால் அல்லாது இனி உன் கையில் காசு புரளவிடமாட்டேன்" என்று நான் கண்டிப்புடன் உரைத்தேன்.

"அப்படியானல், எப்பொழுதாவது வயிறு பசித்தது, ஏதாவது வாங்கித் தின்ன வேண்டுமென்றல் நான் என்ன பண்ணுவதாம்?" என்று சிணுங்கினன் அவன்.

"சியாமைக் கேள்; அவனிடம் பணம் கொடுத்து வைக்கிறேன்; அவசியமானல் தருவான்."

"அதெல்லாம் நான் ஒருவரிடமும் யாசகம் கேட்க முடியாது. என் செலவுகளுக்குப் பணம் எப்பொழுதும் என்னிடம் இருக்க வேண்டும்."

"ஆனல் நீ பணத்தைத் தகாத வழிகளில் செலவு செய்கிருயே!"

"அது என் இஷ்டம் அம்மா; உனக்கு அது தகாததாகப் படுகிறது. ஆனல் எனக்கு அது தக்கதாக இருக்கிறதே!"

"எது தக்கதாக இருக்கிறது உனக்கு? இந்த வயதிலே கண்ட கயவர்களுடன் சேர்ந்துகொண்டு, சிகரெட் பிடிப்பதும், பணம் வைத்துச் சீட்டு விளையாடுவதும், பந்தயத்தில் பணத்தைத் தொலைப்பதும் உனக்குத் தக்கவைகளாகப் படலாம். ஆனல், உன்னுடைய நன்னடத்தைக்கு ஜவாப்தாரியான எனக்கு அது நல்லதல்ல என்று படுவதால்,இனிமேல் அவசியமான செலவுகளுக்கு மாத்திரமே நான் பணம் தரமுடியும்."

சியாமும் என்னுடன் சேர்ந்து கொண்டு அவனுக்கு நல்லதனமாக எடுத்துச் சொன்னன். "இந்த வயதில் நல்லது எது, கெட்டது எது என்பது நமக்குத் தெரியாது திவாகரா. ஆகவே பெரியவர்கள் சொல்கிறபடி கேட்பது தான் உத்தமம்" என்று போதித்தான்.

முகத்தை 'உர்' என்று வைத்துக் கொண்டு திவாகரன் அப்பொழுது போய்விட்டான். அதன் பிறகு ஒரு மாத காலம் வரையில் அவன் என்னிடம் பணமே கேட்கவில்லை. ஆனல் அவனுடைய கூடா நட்பும் கொண்டாட்டங்களும் தொடர்ந்து நடை

நாடுவது ஏன்?
T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி
நாட்டிலே நற்பெயர்பெற்று நிலவுகிறது
தபால் பெட்டி 1151 சென்னை - 21.
REGISTERED TRADE MARK
S. R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

பெற்று வந்ததாக சியாம் அறிவித்தான். 'எப்படி? எங்கிருந்து அவனுக்கு இதற்கெல்லாம் பணம் கிட்டுகிறது?' என்று நான் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் இரவு நடுத் தூக்கத்தில் பக்கத்து அறையில் ஏதோ சப்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். அந்த அறையில் ஓர் அலமாரியில் அன்று செய்த தின்பண்டங்களை வைத்திருந்தேன். அலமாரியைப் பூட்ட மறந்து, பூனை வந்து அவற்றைத் தீர்த்துக் கட்டுகிறதோ என்று பார்ப்பதற்காக நான் எழுந்து சென்றபோது, அதே அறையிலிருந்த பணப் பெட்டியைத் திறந்து, திவாகரன் பணம் எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டேன்.

திருட்டு! நாள்தோறும் நான் தூங்குகையில் சாவியை எடுத்து வந்து இப்படி அவன் பணம் எடுத்துச் சென்றுகொண்டிருந்தான் போலும். கணக்கு வழக்குத் தெரியாத எனக்குப் பணம் குறைவது தெரியவில்லை.

கடைசியில் என்னுடைய இந்தக் கண்டிப்பு அவனை ஒரு புதிய கெட்ட பழக்கத்தில் இறக்கி விட்டதைக் கண்டதும் நான் இடிந்து போனேன்.

அவனைக் கையும் களவுமாகப் பிடித்து, "இப்படிச் செய்கிறாயே; இது நியாயமா?" என்று கேட்டேன்.

"நீ செய்வது மாத்திரம் நியாயமா? என் பணத்தை எனக்கு உதவாமல் பூட்டி வைப்பது நியாயமானால் நான் செய்வதும் நியாயந்தான்!"

ஆமாம்; அவன் பேசியதுங்கூட நியாயமான பேச்சுத்தான். அவன் சொத்துக்களின் மீது அதிகாரம் செலுத்த நான் யார்? அந்த உரிமையை ஸ்தாபிக்க கோட்ஸே மாமாவின் அதிகாரப் பத்திரம் இருந்த தென்னவோ உண்மைதான்; ஆனால், எட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? அதிகாரத்தை ஸ்தாபிக்கப் போய், அதன் பலனைத் தான் இதோ நிதரிசனமாகக் கண்டு விட்டேனே! இன்னும் அடம் பிடித்தால், இன்னும் 'காபந்து' செய்தால், அவனுக்கு வழியா தெரியாது? வெளியே கடன் வாங்கிச் செலவு செய்வான், தெய்வமே! என்னை ஏன் இப்படி யெல்லாம் சோதனை செய்கிறாய்?

அன்றே நான் திவாகரனிடம் பெட்டிச் சாவிகளைக் கொடுத்து விட்டேன். "உன் சொத்து; உன் பணந்தான் இவை. ஆனால் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதை துர்விநியோகம் செய்யாதே! அதனால் அதுவும் அழியும்; நீயும் அழிவாய்" என்று கண்ணீர்விட்டுக் கேட்டுக்கொண்டேன்.

ஷிண்டேயிடம் இதைப்பற்றிச் சொன்னபோது, அவர், "ஆமாம்; நீங்கள் செய்தது சரியான காரியம் தான். பையன் நிமிர்ந்து விட்டான். இனி அவன் தானாகத் திருந்தினால் தான் உண்டு. நீங்களும் நானும் வீணில் மனசைப் போட்டு அலட்டிக் கொள்வதில் என்ன இருக்கிறது?" என்று பட்டும் படாமலும் சொல்லி விட்டார்.

அவர் அப்படிச் சொல்லலாம்; ஆனால் நான் எப்படி அல்லல் படாமல் இருக்க முடியும்? கோட்ஸே மாமாவுக்கு அளித்த உறுதிமொழி என்ன? இன்று நடப்பது என்ன? 'உயிரைக் கொடுத்தேனும் அவனை உத்தமனாக வாழச் செய்வேன்' என்றேனே. ஆனால் திவாகரனோ நாளுக்கு நாள் சீரழிந்து கொண்டு போகிறானே. கட்டவிழ்த்த காளையாகத் திரியும் அவனை இனி எப்படித்தான் நல்வழிப்படுத்த முடியும்? என்று மண்டையை உடைத்துக்கொண்டேன்.

இடையே நாட்கள் பறந்தன! மாதங்கள் ஓடின; வருஷங்களும் உருண்டு விட்டன. திவாகரன் இப்பொழுது மேஜர். சட்டபூர்வமாகத் தன் சொத்துக்களுக்கு யஜமான். அவன் போக்குகளோ விபரீதத்தின் உச்சியை எட்டியிருந்தன. ஒரே மைனர் ராஜ்ய பாரம். மெட்ரிகுலேஷன் வரையில் படித்து விட்டு, காலேஜில் சேர்ந்தான். அங்கேயும் ஒரு வருஷம் குப்பை கொட்டினான். ஆமாம்; படிப்பில் அவனை ஊக்குவித்துக் கொண்டிருந்த சியாம் இப்பொழுது இல்லை. திவாகரனைத் திருத்துவது தன்னால் இயலாத காரியம் என்று அவனுடன் காலேஜில் சேர மறுத்து, அவன் எங்களிடமிருந்து விலகிக் கொண்டு, எங்கோ சொற்ப சம்பளத்தில் ஒரு வேலையைத் தேடிக்கொண்டு விடை பெற்றுப் போய்விட்டான்.

[தொடர்ச்சி 83-ம் பக்கத்தில்]

மலர்ந்த வாழ்வு

[ஆசிரியர் : டபிள்யூ. ஸி. சுந்தரேசன்; விலை ; 6 அணா; கிடைக்குமிடம் : ரதி பதிப்பகம், 127, தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை.]

ஆசிரியரின் பல சின்னஞ் சிறு கதைகளின் தொகுப்பு இது. கதைகள் தான் சின்னஞ்சிறியனவே தவிர, அவைகளில் கருத்துப் புதைந்து காணப்படுகிறது. "தண்டனை" போன்ற கதைகள் உள்ளத்தைத் தொடுவதாக உள்ளன. கவர்ச்சிகரமான 'சங்கரி'ன் அட்டைப் படத்துடன் புஸ்தகம் அச்சாகியுள்ளது.

சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ்

[ஆசிரியர் : ரா. தனலன்; விலை ரூ. 1-4-0 ; கிடைக்குமிடம் ; பிரேமா பிரசுரம், சென்னை-24.]

சிந்தனையாளரின் வரிசையிலே இது மூன்றாவதாகும். 'மனித குலம் மாண்படைய பொருளாதார விடுதலையே வழி' என்று சிந்தித்தவர் இந்த கார்ல் மார்க்ஸ். புத்தக ஆரம்பத்தில் இந்த சிந்தனையாளரின் வரலாறும், பிற்பகுதியில் அவரது சிந்தனைகளும் உள்ளன. நடுவிலே இந்தியா பற்றி மார்க்ஸின் அபிப்பிராயத்தையும் சேர்த்திருக்கிறார்கள்.

மர்மத் தீவு

[ஆசிரியர் : சிரஞ்சீவி ; விலை ; ரூ. 1-4-0 ; கிடைக்குமிடம் : பிரேமா பிரசுரம், சென்னை-24.]

இனக் கவர்ச்சி மிக்க கதைகளை எழுதுவதில் தான் வல்லவர் என்று இந்த ஆசிரியருக்கு ஒரு பெயர் உண்டு. ஆனால், இந்தப் புத்தகத்தைப் படிக்கும் வாசகர்களுக்கு இவர் துப்பறியும் நாவல்களையும் நன்கு எழுதக் கூடியவர் என்பது புலனாகும். உண்மையிலேயே கதை படிக்க மிகவும் பயங்கரமாகத்தான் இருக்கிறது. மர்மத் தீவுக்கு பத்து பேர்கள் லேக்ராஜ என்பவரால் அழைக்கப்படுகிறார்கள். அங்கு சென்ற பின் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக மரணமடைகின்றனர். ஒவ்வொருவரும் மற்றவர்களில் எவனோ ஒருவன் தான் அந்த மர்ம மனிதன் லேக்ராஜ் என்று சந்தேகப்படும் முறையில் சூழ்நிலை அமைகிறது. இறுதிவரை சுவாரஸ்யம் குன்றாமல் போகிறது கதையின் போக்கு.

திருக் குர் ஆன் பொன் மொழிகள்

[தொகுத்தவர் : எம். அப்துல் வஹ்ஹாப் எம். ஏ., பி. டி. எச். ; விலை: 8 அணா : கிடைக்குமிடம் : பிரேமா பிரசுரம், சென்னை-24.]

அல் குர் ஆன் என்பது இஸ்லாமியத்திருவேதம். அவர்களின் மதத் தலைவர் ராது முஹம்மது நபி அருளியது. மொத்தம் 114 அத்தியாயங்கள் கொண்ட அவ் வேதத்திலிருந்து முக்கியமானவற்றைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார் ஆசிரியர். எளிய நடையிலே யாரும் படித்துப் புரிந்து கொள்ளும்படி இருக்கிறது.

எதிர் வீட்டு ஜன்னல்

[ஆசிரியர் : கோ. த. சண்முக சுந்தரம் ; விலை ; ரூ. 1 : கிடைக்குமிடம் : பிரேமா பிரசுரம், 63, ஆற்காடு ரோடு, சென்னை-24.]

இது ஒரு மனோதத்துவ நாவல்! ஆகவே, படிக்கக் கொஞ்சம் வரட்சியாகத்தான் இருக்கிறது. சின்ன வயதிலேயே வாழ்க்கையை ருசித்து அலுத்துப்போன சாம்பசிவம், அழகி வனஜாவை மணக்கிறான். அழகி வனஜாவின் மனம் எதிர்வீட்டு ஜன்னலில் கண்ட சக்திவேலை நாடுகிறது. ஆனால் இறுதியில் கணவனின் உள்ளன்பு கண்டு திகைத்துத் திருந்துகிறாள்.

வெள்ளியம்பலக் குறவஞ்சி

[ஆசிரியர் ; குத்தாலம் எம். கோபாலன், கிடைக்குமிடம் : எஸ். கணேசம் பிள்ளை, அருணகிரி நாதர் தெரு, குத்தாலம் (தஞ்சை ஜில்லா) விலை அணா 12.]

தலைவனைச் சேர தவித்து நிற்கும் தலைவியின் கையைப் பிடித்து குறமகள் குறி சொல்லுவதைப் போன்ற கதைகள் "குறம்" என்ற பெயரில் அந்தநாட்களில் உண்டு. பிறகு குறவஞ்சிப் பாடல்கள் தோன்றின. அக்காலத்தில் குறத்தியின் குறி சொல்லும் திறமையில் மக்கள் அளவு கடந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். குறத்தி என்று யாராவது ஒருத்தி வந்து குறி சொன்னால் போதும், அதை முற்றும் நம்பிவிடுவார்கள். இந்த 'வெள்ளியம்பலக் குறவஞ்சி'யிலும் ஈஸ்வரனை மனதில் வரித்து, அவனை அடைய ஏங்கித் தவிக்கும் மீனாக்ஷிக்குஅகஸ்தியரின் மனைவி

லோபமுத்ராதேவி குறத்தியாக வந்து, 'அவள் இஷ்டம் நிறைவேறும்' எனக் குறி சொல்கிருள். பிறகு மீனுக்ஷி-சுந்தரேஸ்வரர் திருக் கல்யாணத்தோடு கதை இனிது முடிகிறது. இதை நாட்டிய நாடகத்திற்கு ஏற்றபடி பாட்டுகளாக எம். கோபால் அவர்கள், குத்தாலம் பரதக்கலை ஆசிரியர் எஸ். கணேசம் பிள்ளை அவர்கள் விரும்பியவண்ணம் இயற்றி யிருக்கிருர். பாட்டுகளுக்கு சப்தம், ஜதி, தீர்மானங்கள் முதலியவைகளை எஸ். கணேசம் பிள்ளை தொகுத்திருக்கிருர். ஜதி தீர்மானங்களின் சப்தத்தை அங்காங்கே இன்னும் சற்று மாற்றி அமைத்திருக்கலாம். இக் குறவஞ்சியில் நாட்டிய நாடகத்திற்குத் தேவையான கருத்துகளோடு பாடல்கள் உள்ளதால் அபிநயத்தோடு ஆடுகையில் ஆடல், பாடல், அபிநயம் கலந்து அழகாகப் பரிணமிக்கும். சிருங்காரத்தில் விப்ரலம்பம் அதிகமாக இருப்பதால் அழகான பாவத்திற்கும் ஏற்ற இடங்கள் நிறைய இருக்கின்றன. "அம்பலத்தில் ஆடும் ஆனந்தக் கூத்து" என்ற தலைப்பில் வரும் வெண்பாக்களில் இரண்டாவதில் இலக்கணப் பிழை உள்ளது. அடுத்த பதிப்பில் இவைகளைத் திருத்துவார்களென நம்புகிறேம். இதைப் போன்ற நாட்டிய நாடகப் புத்தக வெளியீட்டு முயற்சி நாட்டியக் கலை உலக நண்பர்களுக்கு மிக்க உதவியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

அனுர்க்கலி

[ஆசிரியர் : பி. இரா. சிவானந்தன் : கிடைக்குமிடம் : ரதி பதிப்பகம், தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை. விலை : ரூ. 1-0-0.]

சிரஞ்சீவித்வம் பெற்றுள்ள காதல் கதைகளில் அனுர்க்கலி ஒன்ருகும். அக்பர் மகன் சலீம், பணிப் பெண்ணுன அனுர்க்கலியைக் காதலிக்கிருன். மன்னனும், அமைச்சன் பீர்பாலும் அதை கூடாக் காதலாக்கி, சலீம் மனம் உடையச் செய்கின்றனர். இக்கதையை நாடகமாக்கியிருக்கிருர் ஆசிரியர். வசனம் எழுதப் பட்டுள்ள முறையினுல் முக்கியமான கட்டங்கள் சப்பென்றிருக்கின்றன.

சிரித்த முகம்

[ஆசிரியர் : எல்லார்வி : விலை : ரூ. 1-4-0: கிடைக்குமிடம் : ரதி பதிப்பகம், 127, தெற்கு ஆவணி, மதுரை.]

ஆசிரியரின் குறுநாவல் இது. ஏற்கெனவே இம் மாதிரிக் குறுநாவல்கள் எழுதி வாசகர்கள் உள்ளத்தில் ஒரு இடம் பெற்றுள்ள இந்த ஆசிரியரின் இந்தநாவலும் விறுவிறுப்பாக இருக்கிறது. துக்ககரமான முடிவைக் கொண்டுள்ள இந்தநாவலில் நாம் அன்ருட வாழ்க்கையில் காணும் பல பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

வரப்பெற்றேம்

காங்கிரஸ்

[தேசிய சமூக வார இதழ். தனிப் பிரதி : 2 அணு: கிடைக்குமிடம் ; தெப்பக்குளம், திருச்சி.]

நீங்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் தயாராகிறது

இன்சே

தீபாவளி மலர்

விலை ரூ. 3 தான். (தபால் செலவு அணு 10)

உங்கள் மலருக்கு இப்பொழுதே உங்கள் ஊர் ஏஜண்டிடம் முன் பணம் கொடுத்துப் பதிவு செய்து கொள்ளுங்கள்

★ உழைத்து உள்ளம் சோர்வடைந்து, அந்தியிலே வீடு திரும்பும் எண்ணற்ற ஏழை பாட்டாளி மக்களுக்குப் புத்துயிர் அளிக்கவல்ல ஓர் உன்னத உல்லாசப் பொழுது போக்கு சாதனமாகவும், மாணவர்களுக்குப் பாடங்களை எளிதில் உணர்ந்தறிய உதவும் உயரிய கருவியாகவும், சஞ்சலத்தால் சுழலுவோர்க்கு சாந்தி அளிக்க வல்லதாகவும், மற்றும் ஏனையோருக்கு ஒரு களியாட்டமாகவும் இவ் விருபதாம் நூற்ருண்டிலே சினிமா திகழ்கிறதென்ருல் அது மிகையாகாது! அவ்வாறிருக்க, 'சினிமாவினுல் சிறுவர்கள் கெட்டு விடுகிருர்கள்' என்று பிரதமர் நேருவுக்கு மகஜர் அனுப்பிய டில்லி தாய்மார்கள் "மருமகள்", "ஔவையார்", "சம்சாரம்" போன்ற பொன்ஞன அறிவுரைகளை அள்ளி இறைத்து, மூட நம்பிக்கைகளையும் சம்பிரதாயங்களையும் களைந்தெறிந்து சமுதாயத்தைச் சீர்திருத்த வல்ல உன்னதத் தமிழ் சித்திரங்களைக் கண்டு களித்திருப்பார்களேயானல் இத்தகைய அறிவற்ற அவசர முடிவிற்கு வந்திருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். நல்லவனிடத்திலும் ஏதேனும் ஒரு சில சிறு தீய குணங்கள் இருக்கத்தான் காண்கிருேம். அதற்காக அவன் சேர்க்கையை நாம் புறக்கணிப்பதில்லையே! அவ்வாறே சினிமாவினுல் பெரும் அளவிற்கு நன்மை ஏற்படுகின்ற அதே சமயத்தில், சில சிறு தீமைகளும் ஏற்படுகின்றன. படங்களில் குற்றங் குறைகள் இருந்தால் அதை அந்தந்த படத் தயாரிப்பாளர்களுக்கு எடுத்துக் கூறி, அதைத் தவிர்க்க வழியும் வகுத்துக் கொடுத்தால், அவர்கள் திருத்தி அமைத்து விடுவார்கள் என முன்பு ஒரு பத்திரிகையில், ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன் அறிவித்திருந்தார். அவ்வாறு டில்லி தாய்மார்கள் செய்திருப்பார்களேயானல் அது எல்லோரும் போற்றுதற்குரிய விஷயமாகும். அவ்வாறில்லாமல் இந்த சிறு விஷயங்களுக்கெல்லாம் நாட்டின் பிரதமருக்கு மகஜர் அனுப்பி, உலகிற்கு அறிய தொண்டாற்றிவரும் சினிமாக் கலையையே முற்றிலும் ஒழிக்க வேண்டுமென்று தெரிவித்துள்ள நமது அனுதாபத்துக்குரிய டில்லித் தாய்மார்கள் அலறியது ஆராய்ந்து அறியாமல் செய்த செயலாகும்.

"ரஸிகன்", கரூர்.

ஹிந்து மதம் படும் பாடு

"சீர்திருத்தம்", "பகுத்தறிவு" என்ற போர்வையின் கீழ் ஒரு சில கதை, வசன கர்த்தாக்கள் ஹிந்து மதத்தை தமிழ்ப் படங்களில் கேவலப் படுத்த முயற்சி செய்து வருகிருர்கள். சினிமா என்பது எல்லா மதத்தினருக்கும் பொதுவான பொழுதுபோக்கு சாதனம், அதில் குறிப்பிட்ட ஒரு மதத்தை மாத்திரம் தாக்கிப் பேசி, ஆடிப் பாடி நடித்துக் காட்டுவது விரும்பத்தக்கதல்ல. சமீபத்தில் வெளியான சில தமிழ்ப் படங்களில் பல கட்டங்களில், பல காட்சி அமைப்புகளில் வேண்டுமென்றே ஹிந்து மதத்தினர் புனிதமாகக் கருதிப் போற்றி வரும் தெய்வங்கள்-பதிவிரதைகள்-பக்தர்கள்-மதத் தலைவர்கள் இவர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கிக் கேவலப் படுத்தும் கதை அமைப்பும், வசனங்களும், நடிப்பும் உள்ளன. இவை ஸென்ஸார் போர்டால் தாராளமாக அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. நல்ல வேளை! கிறிஸ்தவ மதம், இஸ்லாம், பௌத்த ஜைன மதங்கள் பிழைத்தன. தயவு செய்து கலையிலே 'மதத்துவேஷத்தை'ப் புகுத்த வேண்டாம். கதை வசனம் எழுதும் அறிஞர்கள், பட முதலாளிகள், டைரெக்டர்கள், நடிகர் நடிகைகள், இதர டெக்னீஷயன்கள் இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

ஜே. சக்ரவர்த்தி, வேதாரண்யம்.

☆ **பரிசு பெற்ற கடிதம்**

எழுதியவர் :

எஸ். ராகவன்,

5, சன்னிதித் தெரு,

கரூர் (திருச்சி ஜில்லா)

பட முதலாளிகளுக்கு......!

"கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" என்ற படத்தில் கதாநாயகன் கணபதி "இந்தியாவில் இதற்காக சட்டமொன்று பிறப்பிக்கப்பட வேண்டும்" என்று கூறுகிறார். ஒருமுறையல்ல; பல முறைகள் பல இடங்களில் அதே வார்த்தையை திரும்பத் திரும்பக் கூறுகிறார் கணபதி. ஹாஸ்யத்திற்காக அது படத்தில் புகுத்தப் பட்டிருக்கிறது. ஒரு முறை அல்லது இரு முறைகள் அதே வார்த்தைகளைத் திரும்பக் கூறினால் படம் பார்க்க வருவோர்கள் அதை ஹாஸ்யமாகக் கருதுவார்கள். ஆனால், எதற்கெடுத்தாலும் அதே வார்த்தையை கணபதி அர்த்தமின்றி அடிக்கடி கூறுவதால் அது படம் பார்க்க வருவோருக்கு ஹாஸ்யத்தை உண்டுபண்ணுவதற்குப் பதிலாக மனச் சோர்வையும், சலிப்பையும், வெறுப்பையும் ஒருங்கே உண்டுபண்ணுகிறது. தமிழ்ப் படங்கள் பலவற்றில் பட முதலாளிகள் மேற்கூறிய விதமாய் ஹாஸ்யத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். இன்னும் புகுத்திக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, "நாம் இருவர்", "வாழ்க்கை", "ஜாதகம்", "லக்ஷ்மி" போன்ற படங்களைக் கூறலாம். நவீன முறையில் ஹாஸ்யம் புகுத்தப் பட்டிருந்தால் தான் அதை மக்கள் ஹாஸ்யமாகக் கருதி மனமகிழ்ச்சி கொள்ள வழி ஏற்படுகிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக இன்னமும் நம் தென்னாட்டிலுள்ள பட முதலாளிகளில் பலர், பார்த்துப் பார்த்து அலுத்துப்போன, கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன முறைகளிலேயே ஹாஸ்யத்தைப் புகுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்வது, மக்களுக்கு அது ஹாஸ்யமாகத் தென்படாமல் வெறும் கோமாளிக் கூத்தாகவும், கேலிக் கூத்தாகவுமே தென்படுகிறது. இனியேனும் நம் பட முதலாளிகள் உண்மையை உணர்ந்து ஹாஸ்யத்தை நல்ல வழியில், நவீன முறையில் புகுத்தி பட ரஸிகர்களுக்கு பரவசத்தை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

"பம்பாய்த் தமிழன்" பம்பாய்-22

கதைப் பஞ்சமா ?

நம் தமிழ் நாட்டில் நல்ல கதைகள் எழுதும் எழுத்தாளர்களுக்குக் குறைவே இல்லை. ஒவ்வொரு படத் தயாரிப்பாளர்களிடமும் கதை இலாகா என்று வேறு ஒன்று இருக்கிறது. அப்படி இருக்கையில் அவர்கள் எடுத்த கதையையே திரும்பத் திரும்ப ஏன் தான் எடுக்க முயற்சி செய்கிறார்களோ தெரியவில்லை. பூம்புகார், அம்பிகாபதி, பாலநாகம்மா முதலிய கதைகள் முன்பே படமாக எடுக்கப்பட்டு வெற்றியும் அடைந்துள்ளன. அந்தக் கதைகளையே மறுபடியும் எடுக்க முன் வருவதைவிட, புது மாதிரியான நல்ல கதைகளை படமெடுக்க முன் வந்தால் ரஸிகர்கள் நிச்சயம் அதை வரவேற்பார்கள். பட முதலாளிகள் இனிமேலாவது இதை உணர்வார்களா ?

எம்.பிரேமாதேவி, கடலூர் என்.டி.

கவனக் குறைவா ?

"பெண்" படத்தில் பாரத நாட்டின் பண்பை அழகாகச் சித்தரித்திருக்கிறார்கள். ஆட்டமும் பாட்டும் கண்ணையும் கருத்தையும் கவரக் கூடியதாக இருக்கின்றன. என்றாலும் ஒரே ஒரு குறை; அது படத் தயாரிப்பாளர்களின் கண்களுக்குப் புலப்பட வில்லையோ! அல்லது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லையா! 'பாரத நாட்டிற்கிணை பாரத நாடே' என்ற பாட்டில் பாரதத்தின் படத்தை சித்தரித்து முக்கிய ஜீவநதிகள் ஓடுவதையும், புத்தர், பரமஹம்ஸர், காளிதாஸன், கம்பர், காந்திஜி, இவர்களெல்லோரும் எங்கள் பாரத நாட்டில் அவதரித்தவர்கள் என்று காட்டுவதும், கருத்தை மட்டுமல்ல உள்ளத்தையும் ஊடுருவி உவகை உலகத்திற்கு நம்மை இழுத்துச் செல்கிறது. பாராட்டுகிறோம்! பெருமைப்படுகிறோம்.

"முப்பது முக்கோடி சங்கம்
முழுமைக்கும் பொதுவுடமை"

என்று முழங்கிய புரட்சிக் கவிஞர் பாரதியார் அந்தப் பட்டியலில் சேரத் தகுதியற்றவரா....? தமிழனுக்காகவும் தமிழுக்காகவும் தன் சுகத்தைப் பொருட்படுத்தாமல் பாரதத்தின் பண்பை பாமரன் முதல் பண்டிதர் வரை படித்து மகிழும்படி பாடிய பாரதியாரை எப்படி இவர்கள் மறந்தார்கள் என்று நினைக்கும் போது யாருடைய நெஞ்சிலும் வேதனை நிரம்பும்.

டைரெக்டர் எப். நாகூர் தயாரித்து வரும் "சந்தேஹி" தமிழ்ப் படத்தில் எம். வி. ராஜம்மா.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்!

என்ற பாட்டை மறந்து விடாமல் எடுத்துக் கொண்டவாகள், அப்பாட்டைப் பாடியவரின் உருவப் படத்தைக் காட்டாமல் இருந்தது ஏன்? இது படத் தயாரிப்பாளரின் கவனக் குறைவுதானே?

"எம். கே. எஸ்."—கொழும்பு.

இதுவா ஹாஸ்யம்?

சமீப காலமாக சினிமா உலகில் ஒரு புது தொத்து நோய் ஆரம்பமாகி இருக்கிறது. அதுதான் படக் கதாநாயகன் ஹாஸ்யமென்று நினைத்துக் கொண்டு அளவுக்கு மீறி ஆடிப், பாடிக் குதிப்பது. சிற்சில சினிமாக்களில் வரும் கண்ணருவி நடனங்களைப் பார்த்த ரஸிகர்கள், படங்களில் பெண்கள் அதிகமாக நடனமாடுவதையே வெறுக்கஆரம்பித்துள்ளார்கள். இந் நிலையில், ஆண்கள் நடனமாடும் பாஷன் சினிமா உலகில் நுழைந்திருக்கிறது. 'மனம்போல் மாங்கல்யம்' படத்தில் இம்மாதிரியான கோமாளிக் கூத்து வருகிறது. ஆனால், அது பைத்தியக்கார ஆஸ்பத்திரி சம்பவமாக வருவதால் கொஞ்சமாவது நம்ப முடிகிறது. ஒவ்வொரு படத்திலும் ஹாஸ்யத்திற்காகவே தனி நடிகர்கள் வருகிறார்களே? அப்படி இருக்கையில் கதாநாயகனை நடிப்பவர்களும் கோணங்கித்தனம் செய்வது விரும்பக் கூடியதாக இல்லை. "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி", "பெண்" இவ்விரு படங்களிலும் முறையே சிவாஜி கணேசன், பாலசந்தர் இருவரும் மிகையாகவே நடித்திருக்கிறார்கள். ஒரு படித்த நாகரீகம் தெரிந்த இளைஞன், முக்காடு போட்டுக்கொண்டு, மூக்கில் நத்தை மாட்டிக் கொண்டு வேலைக்காரனுடன் குதிப்பது அருவருக்கத்தக்கதாக இருக்கிறது. இம்மாதிரி இடங்களில் சிரிப்பு வருவதற்கு பதிலாக நமக்கு வருத்தமே ஏற்படுகிறது. இதுவா உயர்ந்த ஹாஸ்யம்?

ஏ. வி. மஹேஸ்வரி, கடலூர்.

கலையும் கொலையும்

இப்பொழுது வெளிவரும் அநேக தமிழ்ப் படங்களில் நாட்டியக் கலை கொலை செய்யப்படுகிறது. மேல் நாட்டுப் பாணியில் ஆபாச உடைகளுடன் பெண்கள், கோஷ்டிகளாகவும், தனித் தனியாகவும், காலையும் கையையும் குலுக்கி ஆடுவது சகிக்கவில்லை. நம் பாரத நாட்டின் தனிப் பெரும் சுடராகிய 'பரத நாட்டியம்' சிறப்புற்று விளங்கி வரும்பொழுது, அந்நிய நாட்டினரது நடனத்தை நாம் ஆடுவது வெட்கப்பட வேண்டிய விஷயம். சென்னைக்கு விஜயம்செய்திருந்த ரஷ்யக் கலைஞர்களே நம் நாட்டியத்தைக் கண்டு பிரமிப்பு அடைந்தார்கள்; பாராட்டினார்கள். ஆனால், அதே பரத நாட்டியத்தைப் படங்களில் புகுத்த நம் படத் தயாரிப்பாளர்கள் ஏனோ வெட்கப்படுகிறார்கள். இவ்வித மேல்நாட்டு நடனங்கள் ஆடுவதால் அநேக புகழ் பெற்ற நடனமணிகளும், நடிகைகளும் தங்கள் பெயரைக் கெடுத்துக் கொள்கிறார்கள். 'நம் பாரத நாடு. நம் பரத நாட்டியம். அதுவே சிறந்தது, ஈடு இணை இல்லாதது' என்று நம் படமுதலாளி

களும், டைரெக்டர்களும், நடிகைக ளும் இன்னும் பட சம்பந்தப்பட்டவர் கள் எல்லோருமே நினைத்தால் அந்த மங்கா நாட்டியக் கலைக்கு ஒரு தனி மதிப்பு உண்டாகிவிடும். இனியாவது, நாட்டியத்தைக் கொலை செய்யாமல் பரத நாட்டியத்திற்கே முதல் ஸ்தா னத்தை அளித்து ஆதரிப்பார்களா நம் பட முதலாளிகள்?

அம்பிகை ரங்கனாதன், மடுல்கலை.

'பென்ஸிலின்' கணேசன்!

பராசக்தியின் அருளிலே பட உலகில் காலைவைத்து, பட முதலாளிகளின் தயவிலே பல படங்களில் நடித்து, அதிருஷ்ட தேவதையின் அணைப்பிற் கிடையே ரஸிகர்களின் 'சபாஷைப்' பெற்று, தற்பொழுது ஓர் முன்னணி நக்ஷத்திரமாகத் திகழ்ந்து வரும் சிவாஜி கணேசனிடம் உள்ள இரு குறை களை எழுதாமல் இருக்க என்னால் முடிய வில்லை. கதாபாத்திரங்களுக்கேற்ப தன் னுடைய முகபாவங்களை மாற்றிக் கொண்டும், நடிக்க வேண்டிய சூழ் நிலைக்கு ஒப்ப வசனங்களை அவசர மின்றியும், மாடைப்போல உரக்கக்கத் தாமல் நிதானமாகவும், தெளிவாகவும் பேசுபவனே ஒரு குணசித்திர நடிகனா வான். இந்நிலையில் வைத்துத்தான் ஒரு நடிகனுடைய திறனை நிர்ணயிக்கவேண் டும். கணேசன் வசனம் பேசுவதில் சமர்த்தர் என்ற பெயரைச் சம்பாதித்து விட்டாலும், உண்மையாக நிற்கும் ஒரு முக்யமான விஷயத்தை யாவரும் அறிய வேண்டும். அவர் வசனத்தைக் கூறும் பொழுது அவரது முகம் படும் பாடும், வாய் போகும் கோணலும், அருவருப் பான நிலையையே அறிவுறுத்துகிறது. ஆக அவருடைய பேச்சின் இனிமையை ரஸிக்க வேண்டுமானால், ரஸிகர்கள் யாவரும் தங்களுடைய கண்களைத்தான் மூடிக்கொள்ள நேரிடும். அவரது நடிப் பைப்பற்றிச் சற்று ஆராய்வோம். எப் பொழுதும்போல, ஒரே மாதிரியான நடிப்பையே மேற்கொள்ளும் அவர் ஏற் கும் கதா பாத்திரங்களோ வெவ்வேறு விதமான குணங்களை உடையதாக இருக்கின்றன. பராசக்தியில் எவ்விதம் வசனங்களைப் பேசினாரோ அதே போல் தான் எல்லாப் படங்களிலும் வசனங் களை ஒப்பிக்கின்றார். கணேசன் எல்லாப் படங்களிலும் ஒரேமாதிரியாக நடிப்பது, எனக்கு வைத்தியர்கள் உபயோகிக்கும் 'பென்ஸிலின்' மருந்தின் ஞாபகத்தை உண்டாக்குகின்றது. ஏனெனில் எல்லா வியாதிகளுக்கும் அதே மருந்தைத்தான் உபயோகிக்கின்றனர் டாக்டர்கள். அதேபோல் கணேசனும், தனது ஒரே மாதிரியான நடிப்பையே எல்லாப் படங் களுக்கும் உபயோகிக்கின்றார். பென்ஸி லின் மருந்தானாலும் வியாதியைக் குணப்படுத்துகிறது. ஆனால்,கணேசனது 'பென்ஸிலின் நடிப்போ' அவரது பெய ரைக் கெடுக்கிறது. ஆகவே இனிமேலா வது, 'பென்ஸிலின்' கணேசன் மேற் கூறிய குறைகளைத் திருத்திக்கொண்டு நல்லதொரு நடிகனாகத் திகழ்ந்து, "சிவாஜி—பட உலகிலிருந்து சலோஜி" என்ற அளவிற்கு ரஸிகர்களிடமிருந்து வெறுப்பை உண்டாக்கிக்கொள்ளமாட் டார் என நம்புகிறேன்.

எம். வி. ருக்மணி, சென்னை-17.

கவனிப்பார்களா?

"கண்ணகி" இதற்கு முன் 'இளங்கோ வன்'ல் எழுதப்பட்டு, ஜூபிடர் பிக் சர்ஸாரால் தயாரிக்கப்பட்டு வெளிவந் தது. அதில் மாதவி ஒரு வேசியிலும் கீழ்த்தரமானவளாகச் சித்தரிக்கப்பட் டிருந்தாள். அதுவும் தவிர மூலக்கதை யில் இல்லாத பரமசிவன்-பார்வதி தர்க் கமும் படத்தில் இடம் பெற்றிருந்தது. 'சிலப்பதிகாரம்' சிதைக்கப் பட்டிருந் தது. "கண்ணகி" திரை ஓவியத்தில் ஒரு கற்பின் திலகத்தை காசுக்கு சரஸமா டும் வேசியாகச் சித்தரித்தது எவ்வளவு மோசம்? இப்பொழுது அதே "கண்ணகி" வரலாற்றை "பூம்புகார்" என்ற பெய ரில் மற்றொரு படக் கம்பெனிக்காரர்கள் படமாக்கப் போவதாக விளம்பரம் செய்துள்ளனர். அதற்கு மு. கருணாநிதி வசனம் எழுதப் போவதாகவும் குறிப்பி ட்டிருந்தனர். இந்தப் படத்திலாவது "சிலப்பதிகார"த்துக்கு பங்கம் ஏற்படா தபடிக்கு கதை அமைப்பையும், பாத்தி ரங்களின் தன்மையையும் அமைக்க வேண்டும் என இதன் தயாரிப்பாளர் களைக் கேட்டுக்கொள்கிறேன். முந்தின தயாரிப்பாளர்கள் செய்த தவறை இவ ர்களும் செய்யாதிருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கதையுடன் ஒன்றிய தாகவும், கட்சி சார்பில்லாமலும், கட வுள் நிந்தனை இல்லாமலும் வசனம் அமையவேண்டுமெனக் கருணாநிதியை

யும் கேட்டுக் கொள்கிறேன். அருமையான காப்பியம் அவலமடையக் கூடாது என்பது என் அவா! என் கூக் குரலை தயாரிப்பாளரும், வசனகர்த்தாவும் கவனிப்பார்களா?

எஸ். ராஜகோபால்,
பாளையங்கோட்டை.

அவசரத் தீர்ப்பு

படங்களிலேயே பரிசு பெறத்தக்க பெருமைபெற்ற "தேவதாஸ்" படத்தை "நமக்குத் தேவையா?" என்ற தலைப்பில் கமுதி அன்பர் 'மைனுவதிப் பிரியன்' கண்டித்து எழுதிவிட்டார், ஆகஸ்ட் ஊசியில். 'சிறுவர்கள் பீடி பிடிப்பதையும், பக்கத்து வீட்டுப் பார்வதியை சிறுவன் தேவதாஸ் நேசிப்பதையும் பார்ப்பதனுல் நம் சிறுவர்கள் கெட்டுவிடுவார்கள், அனைவரும் தேவதாஸ்களாக மாறிவிடுவார்கள்' என்ற எண்ணம்போல் இருக்கிறது நண்பருக்கு. தேவதாஸ் குடிகாரனுனது எதனுல்? நண்பன் போதனையினுலோ, அவனை திருப்திப் படுத்துவதற்காகவோ அல்ல; அதன் மூலம் காதலி நினைவை அகற்றுவதற்காக. ஆனுல், அவன் எவ்வளவு குடித்து போதையிலாழ்ந்தும் பார்வதியை மறக்க முடிவதில்லை. அதுவன்றோ உண்மைக் காதல்? ஒரு நீதியை போதிக்க வேண்டுமானுல், முதலில் தவறைக் காட்டித்தானே திருத்த முடியும்? குடிப்பதைக் காட்டித்தானே குடிப்பது தவறு, அதனுல் ஏற்படும் ஆபத்துகள் இவ்வளவு என எடுத்து உரைக்க முடியும்? தேவதாஸ் காதலில் ஏமாற்ற மடைந்தது காரணமாக, அதை மறக்கவேண்டி குடிக்கப் பழகுகிறுன்; அதுவே அவனுக்கு யமனுகிறது. அதை ஏன் நாம் சிறந்த நீதியாக எடுத்துக்கொள்ளக்கூடாது? மாஜி குடிகாரர்கள் எப்போதும்போல குடித்துக்கொண்டுதான் இருக்கிறுர்கள், திருட்டுத்தனமாக. அவர்களுக்கு தேவதாஸினுல் ஒன்றும் புதிதாக சபலம் ஏற்படவில்லை. அவர்களைத் திருத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துத்தான் வருகிறது. 'காதலில் தோல்வியுற்றுல் தேவதாஸைப்போல அழிந்துபோகாதீர்கள், மனம் மாறி வாழவழி தேடுங்கள்' என்ற நீதியை நாம் "தேவதாஸ்" படத்திலிருந்து அறிந்து கொள்கிறேம்.

கே. ரகுபதி, கும்பகோணம்.

தங்கச் சங்கிலி

கடந்த ஆகஸ்ட் மாதம் 7-ந் தேதி இரவு 8 மணிக்கு சென்னை ரேடியோவில் நடைபெற்ற "தங்கச் சங்கிலி" என்ற நாடகம் மிகவும் நன்ருக இருந்தது. இம்மாதிரிக் கதைகளைப் படம் எடுத்தால் பாமர ஜனங்கள் அதை மிகவும் ரசிப்பார்கள். மேற்படி நாடகத்தில் நடித்த அதே நடிக, நடிகர்களைக் கொண்டு அதைப் படமாக எடுக்கலாம். கதாநாயகி பாத்திரத்திற்கு மட்டும் பி. கே. சரஸ்வதிக்கு பதிலாக வேறு ஒரு நடிகையைப் போடலாம். இந்தக் கதை தற்காலத்தில் கண்ணை மூடிக்கொண்டு வரதட்சிணை கேட்கும் பணப்பிசாசுகளுக்கு ஒரு பாடமாக இருக்கும். குடும்பக் கதையாக இருப்பதால் இதற்கு நிறைய ஆதரவும் கிடைக்கும்.

டி. என். லக்ஷ்மி, சென்னை-1.

அசோகா பிக்சர்ஸின் "என் மகள்" தமிழ்ப் படத்தில் டி. பாலசுப்ரமண்யமும், ஆர். ரஞ்சனும் தோன்றும் ஒரு காட்சி இது.

புண்படுத்தவா ?

உலக அரங்கில் திரைப்படத் தொழிலில் இந்தியா இரண்டாவது இடம் பெற்றிருக்கிறது என்ற பெருமைக்கு உரியவர்கள் நாம். மக்களின் பெரும் ஆதரவுதான் இதற்குக்காரணம் என்று கூறத் தேவையில்லை. அப்படிப்பட்ட மக்களின் மனதை இப்போது வெளிவந்திருக்கும் சில படங்களின் கொச்சையான வசனங்கள் புண்படுத்த ஆரம்பித்துள்ளன. "நல்ல காலத்"தில் ஒரு இளம் பெண்ணைக் 'குட்டி குட்டி' என அழைப்பது, "சம்சாரம் வேலை காலியாக இருக்கிறது, வேண்டுமா" என்று கேட்பதும், "கனவு" என்ற படத்தில் முறை தவறியதாகச் சந்தேகிக்கும் பெண்ணை "எங்கேடி போனே? எவனிடம் போனுளோ?" என்று திட்டுவதும், ஒரு பெண் மற்றெரு ஆடவனைப் பார்த்து, "நீ நன்ருக நடக்கக் கற்றுக்கொள்வதற்குள் நான் கிழவி ஆகிவிடுவேன்" என்று கூறுவதும் சில உதாரணங்கள். மக்களின் மான உணர்ச்சியைப் பட முதலாளிகள் தான் மதிக்கத் தவறி விட்டார்கள் என்ருல், சென்ஸார் போர்டாராவது இவற்றைத் தவிர்த்து இருக்கலாம். இது போன்ற தவறுதல்களால் தான் சில புதிய படங்கள் சில நாட்களிலேயே தோல்வி அடைந்து விடுகின்றன. படமுதலாளிகள் இனியாவது திருந்தட்டும்.

"அறிவின்பம்", கரூர்.

யார் குற்றம் ?

"நல்ல காலம்" என்ற படத்தைப் பார்த்தேன். பாரத நாட்டின் பெண்களின் பெருமை, பண்பு, கலாசாரம் இவற்றைப் பழிக்கும்படியாக அமைந்துள்ளது அதில் டி. ஏ. மதுரம் பாடியுள்ள "பாரத நாட்டின் கண்கள்" என்ற பாட்டு. கற்புக்கரசியான கண்ணகியின் செயலைச் சின்னப்பிள்ளைத் தனம் என்று கூறுவது சரியா? கணவனின் மனம் நோகக் கூடாதே யென்று தன் சுக வாழ்வையே தியாகம் செய்தாரே! அதுவா சின்னப்பிள்ளைத்தனம்? கணவன் அடித்தால் பதிலுக்கு அடிப்பதுதான் பாரதநாட்டின், பகுத்தறிவுள்ள பெண்களின் செயலா? பாரத நாட்டுப் பெண்களின் பெருமையையே இழிவுபடுத்துவது போன்று பாடியுள்ளது யார் குற்றம்? சங்கீத அமைப்புக்குப் பொறுப்பான கே. வி. மஹாதேவனின் குற்றமா? அல்லது அப்பாடலைப் பாடியுள்ள டி. ஏ. மதுரத்தின் குற்றமா? அல்லது படத் தயாரிப்பாளரின் குற்றமா? அல்லது அதை அனுமதித்த சென்ஸார் போர்டின் குற்றமா? யார் குற்றமா யிருந்தாலும் சரி; இது பெரிய அநீதி. இனியாவது இவ்விதம் பாரத நாட்டின் பெருமையை இழிவு படுத்தாமல் உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறும் பாட்டுகளை அமைப்பார்களா ?

"தமிழரசி", தென்காசி.

வைஜயந்தி–திலீப் ஜோடி

ஏவி. எம். தயாரிக்க உத்தேசித்திருக்கும் அடுத்த ஹிந்திப் படத்தில், முதன் முறையாக வைஜயந்திமாலாவும் திலீப் குமாரும் சேர்ந்து நடிக்கக் கூடும். அக்டோபரில் தயாரிக்க விருக்கும் இப் படத்துக்கு கிஷோர் குமார், ஓம் பிரகாஷ், ராஜ் மேஹ்ரா, ரனதிப் ஆகியோர் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப் பட்டுவிட்டதாகவும் தெரிகிறது.

கதகளி கோஷ்டி மலாயா விஜயம்

அழகி வனஜாவின் காதல் வரலாறு

மலாய்ப் படங்களுக்குத் தணிக்கைத் தொல்லை

சென்ற மாதம், சிங்கப்பூரிலும் மலாயாவிலுமுள்ள பிரதான நகரங்களிலும் இந்தியாவின் புராதன நடனக் கலைகளில் ஒன்றான கதகளியைக் கண்டு களிக்கும் வாய்ப்பை மலாயா வாசிகள் பெற்றனர். இந்த அரிய நடனக் காட்சியை மலாயா வாசிகள், அதன் பண்பும் தொன்மையும் கட்டுக்கோப்பும் குறையாமல் முதன் முதலாகக் காணும் வாய்ப்பை அளித்தவர்கள், அண்மையில் இங்கு விஜயமளித்த வள்ளத்தோல் கோஷ்டியினரே ஆவர். சமீபத்தில் இந்திய ஜனாதிபதியிடமிருந்து 'பத்ம விபூஷண்' பட்டம் பெற்றவரும், கேரளத்தின் தலைசிறந்த கவிஞரும், கேரள கலா மண்டலம் என்ற நடன கலாசாலையை நாட்டின் பல பாகங்களிலும் தோற்றுவித்தவரும், உலகப் பிரசித்திபெற்ற உதயசங்கர், ராம்கோபால் போன்ற எண்ணற்ற கலைஞர்களின் குருவுமாகிய இந்த 85 வயது நிறைந்த வள்ளத்தோல் நாராயண மேனனுக்கும், பதினெட்டுக் கலைஞர்கள் கொண்ட அவரது கோஷ்டியினருக்கும் மலாயா மக்கள் மிக உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

சிங்கப்பூர் நகர மண்டபத்தில் சென்ற மாதம் 6ம் தேதி மலாயாவில் இருக்கும் இலங்கை கமிஷனரான எம். சரவணமுத்து தலைமையில் ஒரு பொது வரவேற்பு அவர்களுக்கு அளிக்கப்பட்டது. ஏராளமான பொது மக்களும் சட்டசபை அங்கத்தினர்களும் பிரமுகர்களும் அதில் கலந்து கொண்டனர். கடல் கடந்து இங்கு வந்திருக்கும் வள்ளத்தோலின் கலைப் பணியைப் பலரும் பாராட்டிப் பேசினார்கள்.

வள்ளத்தோல் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், கதகளியின் தன்மையைப் பற்றியும், அதன் சிறப்பியல்புகளையும் எடுத்துக் கூறினார். 'உலகின் எந்தப் பகுதியிலிருந்து கலாச்சாரக் கோஷ்டியினர் வந்தாலும் அவர்களை வரவேற்க இந்தியா என்றும் தயங்கியதில்லை. மலாயாவிலிருந்தும் கலைஞர்களை நாங்கள் வரவேற்கிறோம்' என்று அவர் மேலும் குறிப்பிட்டார். மலாயாவின் கலைகளையும் கலாச்சாரங்களையும் இந்தியாவிலுள்ளவர்கள் அறிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

வள்ளத்தோல் குழுவினருக்கு சிங்கப்பூரிலுள்ள அநேக கலைக் கழகங்கள் தனித் தனியே விருந்து உபசரிப்புகள் நடத்தி தங்கள் அன்பையும் ஆதரவையும் காட்டித் திணறடித்தன.

வள்ளத்தோலின் கதகளி கோஷ்டியினருடன் சிங்கப்பூருக்கு விஜயமளித்திருந்த நடனநக்ஷத்திரங்களில் இருவர்-குமாரி ஹேமாவதி, குமாரி சத்யபாமா.

பெரும்பாலும் அரசியல் காரியங்களுக்கும், உத்தியோக பூர்வமான நிகழ்ச்சிகளுக்கும் மட்டுமே தலைமை வகிக்கும் பொறுப்பை ஏற்கும் சிங்கப்பூர் கவர்னர் சா. ஜான் நிக்கல், விக்டோரியா தியேட்டரிலும் ஹேப்பிவோர்ல்டு ஸ்டேடியத்திலும் நடைபெற்ற வள்ளத்தோலின் கதகளி நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து, அவரை கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

மலையாளிகள் ஏராளமாக வசிக்கும் பகுதியாகிய

வள்ளத்தோல் அவர்களுக்கு சிங்கப்பூர் வாசிகள் உற்சாகமான வரவேற்பளித்தனர்.

கிலேத்தாரில் நடைபெற்ற திறந்த வெளி கதகளி நிகழ்ச்சிக்கு ஏராளமான இராணுவ உத்தியோகஸ்தர்களும் ஐரோப்பியர்களும் விக்டோரியா தியேட்டரில் நடந்த நிகழ்ச்சியில் 'கதகளித் துள்ளலில்' மேடையே உடைந்து போயிற்று! பொதுவாக கதகளிக் குழுவினரின் நிகழ்ச்சிகள் நல்ல வெற்றி அளித்தன.

ஒரு மலையாள நண்பரை நான் அணுகி, இக் கதகளி நடனத்தைப் பற்றி அவரது அபிப்பிராயத்தைக் கேட்டபோது, "கதகளிக்கென்றே தம் வாழ்நாளை அர்ப்பணித்துள்ள வள்ளத்தோலின் கதகளி நடனத்தில் குற்றங் குறை கூறுவதற்கில்லை. ஆனால், எனக்கு இது பரிபூர்ண திருப்தியை அளிக்கவில்லை. இரவு முதல் விடியும் வரை தாயகத்தில் இந்த பாகவத, பிரகலாத புராணக் கதைகளை நடத்தியவர்கள், இங்கு மூன்று மணி நேரத்துக்குள் இதை முடித்து விட்டார்களே!" என்று ஆச்சரியப்பட்டார்!

கதகளி நடனம் எல்லாம் புராணக் கதைகளையே அடிப்படையாகக்கொண்டிருந்ததால், தமிழ் மக்கள் இதை நன்கு ரசித்தார்கள். ஆனால், வாத்தியங்கள் எழுப்பிய ஒலி காதை அடைக்கிறதே, என்று பலர் குறைப்பட்டுக் கொண்டார்கள்!

கதகளி நடனக் குழுவினர் இப்பொழுது மலாயாவெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். இக்குழுவினருடன் (ஆரம்பத்தில் அறிவித்தபடி) நடன நக்ஷத்திரம் தாரா சௌத்ரி வரவில்லை. ஆனால், மலாயாவிலே மலாக்கா என்ற ஊரில் பிறந்தவரும், வள்ளத்தோலிடம் கதகளி பயின்றவருமான குமாரி ஹேமாவதி வந்திருந்தார். குமாரி சத்யபாமாவும் 18 பேர்கள் கொண்ட இந்த நடனக் குழுவில் இருந்த மற்றொரு நடன நக்ஷத்திரமாவார்.

பாகவதர் விஜயம்!

கதகளி கோஷ்டியினரின் விஜயம் ஒருபுறமிருக்க, எம். கே. தியாகராஜ பாகவதரின் நாடகக் கோஷ்டியினர் மலாயாவிற்கு இதோ வருகின்றனர், அதோ வருகின்றனர் என்று அடிக்கடி கேட்டு, எதிர்பார்த்து மலாயா மக்கள் ஏமாந்து சலித்துப்போய் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், அக்டோபர் மாத பிற்பகுதியில் தமது கோஷ்டியினருடன் மலாயா வருவதாக பாகவதர் சமீபத்தில் அறிவித்திருக்கிறார். அவர் தமது கோஷ்டியுடன் மலாயாவில் கால் வைத்த பின்னர்தான் அவரது மலாயா விஜயம் ஊர்ஜிதமாகக் கருதப்படும்!

ஆர். ராமாமிருதம் அவர்கள் "சீதா கல்யாணம்" கதாகாலக்ஷேபம் செய்தார்.

வனஜாவின் காதல் வரலாறு

ஆகஸ்ட்மாத ஊசியில்—மலாயாவில் பரபரப்பளித்த, அழகிப் போட்டியில் 'பெடரேஷன் அழகி'யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குமாரி வனஜா மாதவனைப் பற்றிக் குறிப்பிட்டிருந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அவர் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்! அவர் சென்ற மாதம் பினங்கு மாரியம்மன் ஆலயத்தில் ஏ. வாசுதேவனைத் திருமணம் செய்துகொண்டு, இல்வாழ்க்கையில் பிரவேசித்து விட்டார்!

அவருடைய காதலும் திருமண வரலாறும் வெகு சுவாரஸ்யமானவை:

இரண்டு வருஷங்களுக்கு முன்பு, தெலுக்தான் சனிலுள்ள ஆங்கிலோ சைனீஸ் ஸ்கூலில் ஒரு வேடிக்கைச் சந்தை நடைபெற்றது. அதற்கு விஜயமளித்த குமாரி வனஜா எதிர்பாராத விதமாய் எதிரே வந்த ஒரு பள்ளியாசிரியரான வாசுதேவன் மீது மோதிக்கொண்டார். இருவர் கண்களும் ஒன்றையொன்று கவ்விக் கொண்டன! அப்புறமென்ன, காதலரானார்கள்! காதல் வளர்ந்து வந்தது. அவர்களுடைய காதல் ஓட்டத்திற்கு முட்டுக்கட்டையாக 'அழகிப் போட்டி' வந்து சேர்ந்தது. அழகிப் போட்டியில் குமாரி வனஜா சிறந்த அழகியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பெண்ணுக்கு 'பெரிய' இடங்களிலிருந் தெல்லாம் வரன்கள் வந்து குவிந்தன. அவற்றிலொன்றுக்கு 'முடிபோட்டுவிட' வனஜாவின் பெற்றோர் தீர்மானித்தனர். வனஜா தாம் வெகுவாக நேசித்த தமது காதலர் வாசுதேவனைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாது என்று பெற்றோரிடம் எடுத்துச் சொன்னார். பெற்றோரோ முடியவே முடியாதென்று மறுத்தனர். வாசுதேவனும் அவர்களிடம் நேரே சென்று தமக்கு வனஜாவை மணமுடித்துக் கொடுக்கும்படி கேட்டார். அதிலும் தோல்விதான். காதலர் இருவரும் கூடித் திட்டம் வகுத்தனர். அவர்களது நண்பர்களே அத்திட்டம் நிறைவேற ஒத்தாசை புரிந்தனர். ஒருவருக்கும தெரியாமல் பினங்கிற்கு 'ஓடிப்போய்' திருமணம் செய்து தம்பதியாவது என்று தீர்மானித்தனர், மோட்டார் காரில் சென்றால்

புத்தி தன் சுய நிலையிலிருந்து தவறி விட்டால் **பைத்தியம்** என்கிறோம்.

அவ்வித நிலையிலிருந்து குணமடைய

நவரத்ன கல்பம்

ஓர் இன்றியமையாத சஞ்சீவி.

- ★ உடை, பழக்கவழக்கங்களில் புதுமை
- ★ வெற்றுப் பார்வை
- ★ கவலையும் பீதியும் கொண்ட தோற்றம்
- ★ ஞாபகச் சக்தியின்மை
- ★ எதையும் புரிந்துகொள்ள முடியாமை
- ★ தன்னடக்க மின்மை
- ★ மாயை, ஒரே காரியத்தை திரும்ப திரும்ப செய்வது, பிரமை.

இவைகளே **சித்தசுவாதீனம்** தவறி விட்டதற்கான அறிகுறிகளாகும்

இவைகளை முளையிலேயே கிள்ளிவிட

வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம் முத்து, பவழம், கோமேதகம், வைடூரியம்

முதலிய ஒன்பது உயர்ந்த கற்களின் சேர்க்கை கொண்ட

நவரத்ன கல்பம்

எனும் உலகப் பிரசித்தமான மருந்தை உட்கொள்ளுங்கள்

கவிராஜ் பண்டிட்

துர்க்காதத்த சர்மா

வைத்தியவாசஸ்பதி

அவர்களால்

கண்டு பிடிக்கப் பட்டது.

இலவசப் பிரசுரங்களுக்கு எழுதவும்:

THE MANAGER:

NAVRATNA KALPA PHARMACY

JULLUNDUR CITY (India)

Grams: 'NAVRATNA' **Phone: 401**

யாராவது அடையாளம் கண்டு விடுவார்களென்று எண்ணி, கோலாலம்பூரிலிருந்து ஒரு விமானத்தை ரிஸர்வ் செய்து வரவழைத்து, அதில் காதலர் இருவரும் ஏறிக்கொண்டு, 160 மைல்களுக்கு அப்பால் இருந்த பினங்குக்கு 'பறந்து' சென்றனர்.

இடையில் எத்தனையோ இடையூறுகள். அவற்றையெல்லாம் சமாளித்துக் கொண்டு பினங்கை அடைந்தனர். அவர்களது நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்தபடி, உடனே ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் ஹிந்து ஆசாரப்படி அவர்களுக்குத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. தலைக்குமேல் வெள்ளம் போய்விட்டதை உணர்ந்து கொண்ட வனஜாவின் பெற்றோர், பின்னர் மனம் தெளிந்து, அவர்கள் திருமணத்துக்கு ஆசிகூறி, பிரமாதமான முறையில் புது மணத் தம்பதிக்கு ஒரு விருந்தை நடத்தினார்கள். இறுதியில் எல்லாம் சுபமாக முடிந்தது!

''என்னை உலக அழகியாகத் தேர்ந்தெடுத்திருந்தாலும் நான் என் காதலர் வாசுதேவனையே கல்யாணம் செய்து கொள்வேன். பணமும் பதவியும் எனக்கு முக்கியமல்ல, என் காதலர்தான் பிரதானம்'' என்று அழகுப் புன்னகை மிளிர பத்திரிகை நிருபர்களிடம் அழகி வனஜா தெரிவித்தார்!

மலாய்ப் படத் தயாரிப்பிற்கு தொல்லைகள்!

சிங்கப்பூரிலுள்ள ஷா பிரதர்ஸ் ஸ்டுடியோவில் தயாரிக்கப்படும் மலாய்ப் படங்களுக்கு மலாயா, போர்னியோ, ஜாவா, சுமத்ரா, இந்தோனீஷியா ஆகிய இடங்களிலெல்லாம் அபார வரவேற்புக் கிடைத்திருப்பதாக மலாய்ப் படத் தயாரிப்பாளர்கள் அறிவித்தனர். படங்களின் தரம் உயர்ந்திருப்பதாகவும் தயாரிப்புச் செலவுகள் குறைந்திருப்பதாகவும் தெரிவித்தனர். ஆனால், தணிக்கை போர்டின் தொல்லையும் மலாய் சமூகத்தின் கட்டுதிட்டங்களும் நல்ல படங்கள் தயாரிப்பதற்கு இடையூறாக இருப்பதாய் அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர். சூதாடுதல், கொலை செய்தல், தற்கொலை புரிதல், மது அருந்தல், கதாநாயகனும் கதாநாயகியும் தழுவிக் கொள்ளல், ஒரு நடிகை மல்லாந்து படுத்திருத்தல் போன்ற காட்சிகள் எதுவும் மலாய்ப் படங்களில் இருந்தால் அவை தணிக்கை செய்யப்பட்டு விடுகின்றனவாம். பலசாலி, பலமில்லாதவனை சண்டையில் தோற்கடித்து ஜெயிப்பது, கத்திச் சண்டையில் வில்லன ஜெயிப்பது, கதாநாயகன் தோல்வியடைவது போன்ற காட்சிகள் மலாய்ப் படங்களில் அனுமதிக்கப்படமாட்டாதாம். இவை தவிர இன்னும் ஏராளமான முஸ்லிம் மார்க்கப்படியான பல கட்டுத் திட்டங்களும், சுயேச்சையான முறையில் படம் தயாரிக்க முடியாமல் இருக்கிறதென்றும் தயாரிப்பாளர்கள் குறைப்படுகின்றனர்.

விரைவில் சயாமில் மலாய்ப் படங்கள் தயாரிக்கப்படும் என்று மலாய்ப் படத் தயாரிப்பாளர்களில் ஒருவரான ஹோ-ஆ-லோக் என்பவர் சமீபத்தில் தெரிவித்தார். இதற்கு வேண்டிய ஒப்பந்தங்கள் எல்லாம் பூர்த்தியாகி விட்டன வென்றும் விரைவில் படத் தயாரிப்பு வேலைகள் தொடங்கி விடுமென்றும் தெரிவித்தார்.

கதம்ப விழா

இந்திய நுண்கலை சங்கத்தின் சார்பில் ஒரு கதம்பக் கச்சேரி சென்ற மாதம் சிங்கப்பூர் விக்டோரியா தியேட்டரில் நடத்தப்பட்டது.

கே. பி. பாஸ்கரின் 'ஓட்டம் துள்ளல்' என்ற மலையாள நடனமும், தேவதத்தா ஜெட்லியின் ''யுத்த நடன''மும் பிரமாதமாய் இருந்தன. குமாரிகள் வரலக்ஷ்மியும் தேவியும் சில அருமையான கர்நாடகப் பாடல்களை இசைத்தார்கள். ஏராளமான சிறுமிகள் பற்பல நடனங்களில் கலந்து கொண்டார்கள். ''அவசரப் பஞ்சு'' என்ற நாடகம் ஒன்றும் நடைபெற்றது. பிலிம் டைரெக்டர் எஸ். ராமநாதனும் அவரது மனைவியும், மலாயா ரேடியோ புகழ்பெற்றவருமான ஸ்ரீமதி பார்வதியும், பஞ்சுவாகவும், மங்களமாகவும் திறம்பட நடித்தார்கள். யுனைட்டெட் கமர்ஷியல் பாங்கைச் சேர்ந்த ஆர். ராமாமிருதம் கோஷ்டியாரின் 'சீதா கல்யாணம்' கதா காலக்ஷேபம் பக்தி ரஸத்துடன் நகைச் சுவையும் நிறைந்திருந்தது. இது நல்ல முயற்சி. மொத்தத்தில் அன்றைய நிகழ்ச்சிகள் நல்ல கதம்ப ரஸத்தை அளித்தன!

—எஸ், சப்தகிரி சர்மா.

வீழிநாதனின் "மனோரமா"

சமீப காலமாய்—அசட்டு வாதங்கள், ஆபாசக் கருத்துக்கள், துவேஷப் பிரசாரங்கள் போன்றவை கொந்தளிக்கும் நாடகங்களையே பார்க்க வேண்டியதாயிருக்கிறது. இந்த நிலையில் நான் சென்றமாதம் 19ந்தேதியன்று சென்னை மியூஸியம் தியேட்டரில் மாம்பலம் ஸ்ரீராம் ஆர்ட்ஸ் அஸோஸியேஷனைச் சேர்ந்தோர் நடித்த "மனோரமா" நாடகத்தைப் பார்த்த போது எனக்குப் பெரும் ஆறுதல் ஏற்பட்டது.

இந்த நாடகக் கதை "கல்கி" உதவி ஆசிரியர் ரா. வீழிநாதன் அவர்களால் எழுதப்பட்டதாகும். நீதி போதிக்கும் கருத்துக்களுக்கு இந்த நாடகத்தில் பஞ்சமே யில்லை. "சாம்பு" வேஷப் புகழ் என். எஸ். நடராஜன் இந்த நாடகத்தைத் தயாரித்து, மேடையில் அழகாக நடித்துக் காட்டிச் செய்தார்.



பரமானந்தரும், ராமலிங்கமும்

இதில் என். கே. மூர்த்தியும், ஏ. பி. ஈஸ்வரனும் பிரதம பாகங்களில் நடித்தனர். மூர்த்தி தம் பாகத்தை நன்கு நடித்தார். ஆனால், ஈஸ்வரனின் பெண் வேஷமும், நடிப்பும் சோபிக்கவில்லை. பரமானந்தராக நடிந்த கிட்டு கணீரென்று பேசி, நன்கு நடித்தார். ஆனால் இவரது வேஷம் ஒரு போலிச்சாமியாரைக் குறிப்பதாகவே இருந்தது. ராமலிங்கமாக நடித்த கே. எஸ். பார்த்தசாரதி சுமாராக நடித்தார். மாதவனை நடித்த ஏ. கே. ஸ்ரீநிவாஸனின் நடிப்பு பரவாயில்லை. ஜம்புகேசனை நடித்த டி. ரங்கநாதனின் படபடப்பான பேச்சும் நடிப்பும் அவர் ஏற்றுக் கொண்ட பாத்திரத்திற்கு வெகு பொருத்தமாக இருந்தது. ரஹ்மத்தாக தோன்றிய வேலாயுத மேனன் சுமாராக நடித்தார்.

ராதா வேஷத்தை ஏற்ற எம். கிருஷ்ண மூர்த்தி நன்கு நடிக்க முயன்றார். ஆனால் பெண் வேஷம் அவருக்குப் பொருந்தவில்லை. ஆர். கிருஷ்ணமூர்த்திக்கு பெண் வேஷம் பொருந்தியிருந்தது; நடிப்பும் பரவாயில்லை.

ஹாஸ்யத்திற்கே இடமில்லாத இந்த நாடகத்தில் கொஞ்சம் ஹாஸ்யத்தைப் புகுத்த முயன்றிருந்தனர். இந்த முயற்சி விரஸமாகவே முடிந்தது. ஆனால், வேலைக்காரக் காதலர்களாகத் தோன்றிய டி. பிச்சுமணி, கே. கோபாலன் இவர்களது நடிப்பையும், வெடுக்கென்ற பேச்சையும் சபையில் ஒரு பகுதியினர் ரஸிக்கவே செய்தனர். இவர்களுக்கு வேஷமும் நன்கு பொருந்தியிருந்தது.

நாடகத்தில் சங்கித அம்சமும், சீன் ஜோடனைகளும் திருப்தியளித்தன. ஆனால் ஒளி வீச்சு சரியாகச் செய்யப்படவில்லை. வசனங்கள அர்த்த புஷ்டியுடன் அழகாகவும், பொருத்தமாகவும் எழுதப் பட்டிருந்தன. அமெச்சூர்களால் நடிக்கப்பட்ட இந்த நாடகம், மொத்தத்தில், ஒரு சிறந்த வெற்றி என்றே கூறலாம்.

—"நிழல்."



"மனோரமா" நாடகத்தில் ராதா, ஜம்புகேசன், சுதாகர் தோன்றும் ஒரு காட்சி.

வாழ்க்கை வர்ணனை

[12ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் மாதங்கள் பல கழிந்த பின்னரும் பிரசாத்திடமிருந்து பதில் வராததால் ராமராவ் ஏமாற்றம் அடைந்தார்.

"சும்மாயிருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம்" என்ற பழமொழிப்படி, சிவனேயென்று சர்க்கார் உத்தியோகத்தில் அமர முயற்சித்து வந்த ராம ராவின் மனதில் பிரசாத் சினிமா எண்ணத்தைப் புகுத்தி விட்டுச் சென்றபின் ராமராவால் சும்மாயிருக்க முடியவில்லை. அவர் சும்மா யிருக்க விரும்பினாலும், அவரது நண்பர்களின் கிண்டல் பேச்சு அவரை சும்மா யிருக்கும்படி விடவில்லை. எப்படியாவது—ஒரு படத்திலாவது—நடித்து அவர்களது வாயை அடைக்க வேண்டுமென்று ராம ராவ் சபதம் செய்து கொண்டார்.

இப்படி யிருக்கையில், ஒரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. உத்தியோகத்திற்காக அவர் சர்க்காருக்குப் போட்டிருந்த மனுவுக்குப் பதில் வந்து சேர்ந்தது. அவருக்கு சப்-ரிஜிஸ்திரார் உத்தியோகம் அளிக்கப்பட்டிருப்பதாகவும், உடனே வேலையை ஏற்றுக் கொள்ளும்படியும் அவ்வுத்தரவு கூறியது. ராமராவுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. நண்பர்களிடம் தாம் செய்த சபதத்தைக் காற்றில் விட்டுவிடுவதா என்று தவித்தார். ஆனால், "தானைத் தேடி வந்ததைத் தள்ளவே கூடாது" என்று பெற்றோர் உபதேசம் செய்து வற்புறுத்தியதால் சப்-ரிஜிஸ்திரார் உத்தியோகத்தை ராம ராவ் ஏற்றுக் கொண்டார்.

இத்துடன் ராம ராவின் எதிர்காலப் பிரச்னை தீர்ந்து போயிருந்தால் தான் நான் இந்த வாழ்க்கை வர்ணனையை எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காதே! சப்-ரிஜிஸ்திரார் பதவி ஏற்று முழுதாக மூன்று வாரங்கள் உத்தியோகம் பார்ப்பதற்குள் பிரசாத்திடமிருந்து அழைப்பு வந்துவிட்டது!

கைமேல் கிடைத்த சர்க்கார் உத்தியோகத்தை விட்டுவிட்டு, ஸ்திரமான போக்கற்ற சினிமா நடிகரின் வாழ்க்கையை மேற்கொள்ளக் கூடாது என்பது பெற்றோரின் அபிப்பிராயம். ஆனால், தமக்குள்ள நடிப்புத் திறமையையும், சினிமா உலகில் தாம் பெறக்கூடிய நக்ஷத்திரப் பதவியையும் கற்பனைக் கண்முன் கண்ட ராம ராவ் பெற்றோருக்குப் பக்குவமாக சமாதானம் கூறிவிட்டு, அசாத்தியமான துணிபுடனும் நம்பிக்கையுடனும், சப்-ரிஜிஸ்திரார் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிட்டு, (1948ம் வருஷம் ஜனவரி மாதத்தில்) சென்னைக்குப் புறப்பட்டார்.

அந்த சமயத்தில் எம். ஆர். ஏ. புரொடக்ஷன்ஸார் சோபனசலா ஸ்டுடியோவில் "மன தேசம்" என்ற தெலுங்குப் படத்தை பிரசாத்தின் டைரெக்ஷனில் தயாரித்து வந்தனர். இப் படத்தில் நடிப்பதற்காகவே பிரசாத் ராம ராவை அழைத்திருந்தார்.

"மன தேச"த்தில் ராம ராவ் சப்-இன்ஸ்பெக்டர் வேஷத்தை ஏற்று நடித்தார். நல்ல உடல் கட்டும், முக வெட்டும், நடிப்புத் திறமையும் கூடிய ராம ராவ் முதல் படத்தின் மூலமே எல்லோரது கவனத்தையும் கவர்ந்து, தம்மைப் பற்றி சினிமா உலகில் ஒரு நல்ல அபிப்பிராயம் பரவும்படிச் செய்து விட்டார்.

"மன தேசம்" முடிந்ததும் ராமராவை சோபனசலா ஸ்டுடியோக்காரர்கள் தங்கள் "பல்லட்டூரி பில்லா" என்ற தெலுங்குப் படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டு, அவருக்கு கதாநாயகன் வேஷத்தையே அளித்தனர். இப் படத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை ராமராவ் நன்கு பயன்படுத்திக்கொண்டு திறம்பட நடித்து முடித்தார். இப்படம் பிறகு "கிராமப் பெண்" என்ற பெயருடன் தமிழாக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது.

இப் படங்கள் வெளிவந்த சமயத்தில் பி. நாகி ரெட்டி தம் விஜயா புரொடக்ஷனை ஆரம்பித்து, முதன் முதலாக "ஷௌகார்" தெலுங்குப் படத்தை தயாரித்தார். பிரபல பிரசாத்தே இப் படத்தை டைரெக்ட் செய்தார். படம் பிரமாதமான வெற்றி பெற்றது. "ஷௌகாரி"ன் வெற்றி ராம ராவுக்கு பட உலகில் நல்ல கிராக்கியை ஏற்படுத்தி வைத்தது.

தென்னிந்திய சினிமா உலகில் "சம்சாரம்" படம் ஒரு புயலைக் கிளப்பி விட்ட படமாகும். சாதனா பிலிம்ஸார் இப் படத்தை முதலில் தெலுங்கில்

தயாரித்தார்கள். இப் படம் வெளியாகி ஒரு பரபரப்பை உண்டு பண்ணியதும் ஜெமினி இதன் உரிமைகளைப் பெற்று, தமிழ் "சம்சாரம்" படத்தை வெளியிட்டது. இப் படமும் பிரமாதமான வெற்றியைப் பெற்றது.

பிரசாத் டைரெக்ட் செய்த இந்தப் படத்தில் ராம ராவ் கோபுவின் வேஷத்தை ஏற்று நடித்திருக்கிறார். ஆனால் தமிழ் "சம்சாரம்" தமிழ் நடிகர்களைக் கொண்டே தயாரிக்கப்பட்டதால் ராம ராவ் அதில் நடிக்கவில்லை.

இதன்பிறகு ராமராவ் "மாயா ரம்பா" தமிழ், தெலுங்குப் படங்களில் நடித்தார். இப் படங்கள் தோல்வியுற்றன. எனினும், ராம ராவின் நடிப்பு மட்டும் குறைகூறுவதற்கில்லாமல் இருந்தது.

"சௌகார்" மூலம் அபாரமான வெற்றிகண்ட விஜயா புரடக்ஷன்ஸார் மிகுந்த பணச் செலவில் "பாதாள பைரவி" படத்தைத் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளில் தயாரிக்க முற்பட்டனர். கே. வி. ரெட்டி டைரெக்ஷனில் தயாரான இந்தப் படத்திலும் ராம ராவை நடிக்கச் செய்தனர்.

தோட்ட ராமன் வேஷத்தில் தோன்றிய ராம ராவ் அதிதிறமையுடன் நடித்தார். புரட்சிகரமான வசூலைப் பெற்ற இப்படம் பிறகு ஹிந்தியிலும் தயாரிக்கப்பட்டது. தமிழ் ரஸிகர்களுக்கு ராம ராவ் இப்படத்தின் மூலம்தான் நன்கு அறிமுகமானார்.

இதன்பின் ராமராவ் பி. என். ரெட்டி தயாரித்த "மல்லேஸ்வரி" தெலுங்குப் படத்தில் பானுமதியுடன் நடித்தார். கலையம்சம் ததும்பும் படமாக அமைந்த "மல்லேஸ்வரி" தமிழ் விளக்கத்துடன் தமிழ் நாட்டிலும் காட்டப்பட்டது. பி. என. டைரெக்ஷனில் ராம ராவின் நடிப்பு மிகுந்த 'நகாஸ்' பெற்றது.

விஜயாவின் மூன்றுவது படமான "கல்யாணம் பண்ணிப் பார்" படத்திலும் ராம ராவே கதாநாயகனை நடித்தார். தமிழ், தெலுங்கு பாஷைகளில் தயாரிக்கப்பட்ட இப்படங்களும் விஜயாவுக்கு ஏராளமான வசூலை அளித்தது. இவற்றில் ராம ராவ் பைத்தியக்காரனின் வேஷத்தை ஒரு கை பார்த்திருந்தார். இதற்கு அடுத்தபடியாக ராம ராவ் "பல்லுட்டூரு" என்ற தெலுங்குப் படத்தில் நடித்தார்.

"சம்சார"த்தைத் தயாரித்த (நடிகை லக்ஷ்மி ராஜ்யத்தின் சொந்தக் கம்பெனியான) ராஜ்யம் பிக்சர்ஸார் "தாஸி" என்ற படத்தை தெலுங்கில் தயாரித்தனர். பெல் பிக்சர்ஸார் இதை "வேலைக்காரி மகள்" என்ற பெயருடன் தமிழில் வெளியிட்டனர். இப் படங்களில் ராம ராவ் ஜட்கா வண்டிக்காரன் ஆறுமுகமாகத் தோன்றி தம் பாகத்தைத் தத்ரூபமாய் நடித்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

இதற்கடுத்தபடியாக, கிருஷ்ணா பிக்சர்ஸார் ராம ராவை ஒப்பந்தம் செய்து கொண்டு, "மருமகள்" (தமிழ்) "அம்மலக்கலு" (தெலுங்கு) ஆகிய இரு படங்களில் நடிக்கச் செய்தனர். நக்ஷத்திரங்கள் குவிந்த இப்படத்தில் ராம ராவுக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. ஆனால், அளித்த வரையில் கச்சிதமாய் நடித்திருக்கிறார்.

விஜயா புரடக்ஷன்ஸார் உன்னத முறையில் பிரமாதமான ஸெட்டிங்குகளுடன் வெளியிட்ட "சந்திரஹாரம்" (தமிழ், தெலுங்குப்) படங்களிலும், பானுமதி மூன்று பாஷைகளில் தயாரித்து வெளியிட்ட "சண்டி ராணி"யிலும், ஏவி. எம். இதேபோல் மிகுந்த பணச் செலவில் தயாரித்த "சங்கம்" (பெண்) தெலுங்குப் படத்திலும், ராம ராவ் கதாநாயகனை நடித்திருப்பது கவனிக்கத் தக்கது. உன்னத முறையில் தயாரிக்கப்பட்ட மூன்று பிரபலப் படங்களில் ராமராவே கதாநாயகனை நடித்திருப்பது பெருமைப்பட வேண்டிய விஷயமதானே?

சுமார் ஐந்தரை அடி உயரமும், கம்பீரமான தேகக் கட்டும், அழகிய முகத் தோற்றமும், சிவந்த நிறமும் கொண்டவரான ராம ராவ் தாம் ஒரு சிறந்த நடிகர் என்பதை இதற்குள் பலதரப்பட்ட பாத்திரங்களை ஏற்று நடித்து நிரூபித்திருக்கிறார். அவருக்கு ஆங்கிலமும், தெலுங்கும் நன்றாகத் தெரிந்த பாஷைகள். ஹிந்தியும், தமிழும் அவருக்கு ஓரளவே தெரியுமாம்.

1942-ம் வருஷத்தில் ராம ராவ் தம் மாமன் மகளான பஸவராமதாரகம் என்பவரை மனைவியாகப் பெற்றார். இப்பொழுது ராமராவுக்கு இரண்டு பிள்ளை

களும ஒரு பெண்ணும் பிறந்திருக்கின்றனர். முதல் பையன் ராமகிருஷ்ணனுக்கு ஒன்பது வயதாகிறது. இரண்டாவது பையனை ஜெயகிருஷ்ணனுக்கு ஐந்து வயதும், கடைசிப் பெண்ணை லோகேஸ்வரிக்கு இரண்டு வயதும் ஆகின்றன. ராம ராவின் ஒரே தம்பியான திருவிக்கிரம ராவ் தமையனருடனேயே வசித்து வருகிருர். இவர்களது பெற்ருேர் மட்டும் சொந்த கிராமத்தில வாழ்ந்து வருகின்றனர்.

ஓய்வு நேரங்களில் ராம ராவ் நல்ல புஸ்தகங்களைப் படிப்பார்; அல்லது வர்ணங்களைக் குழைத்துக் கொண்டு சித்திரம் தீட்டத் தொடங்கிவிடுவார். இவை இல்லையென்ருல், அவருடைய மூன்று வாரிசுதாரர்கள் இருக்கிருர்களே; அவர்களுடன் பொழுதைக் கழிப்பார்.

ராம ராவ் ஒரு படித்த நக்ஷத்திரமாதவால் முற்போக்கு நோக்கங்களைக் கொண்டிருக்கிருர். நடிப்புக் கலைஞர்கள் சமூகத்திலிருந்து தங்களை ஒளித்துக்கொண்டு தனி வாழ்வு வாழ்வது கூடாதென்பதும், சமூகத்தின் மூலம் தான் நடிகன் புகழும் பணமும் பெறுவதால் நடிகர்கள் சமூகத்திற்குத் தங்களாலான சேவையைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிருர்கள் என்பதும் அவருடைய அபிப்பிராயங்களாகும்.

இவற்றை அவர் அபிப்பிராயங்களாகத் தெரிவிப்பதோடு நின்று விடாமல் நடைமுறையிலும் பின்பற்றி வருகிருர். பொதுக் காரியங்களில் அவர் தாராளமாய் பங்கெடுத்துக் கொண்டு உழைக்கிருர். அவரே சொந்தத்தில் "நேஷனல் ஆர்ட் தியேட்டர்ஸ்" என்ற நாடகக் கம்பெனியை நடத்தி வருகிருர். முன்பு ஆந்திராவில் ஏற்பட்ட பஞ்ச நிவாரணத்தை முன்னிட்டு பல நாடகங்களை நடத்தியும், ஆந்திர தேசத்திற்கு (ஜி. வரலக்ஷ்மியுடன்) நேரில் சென்று தெருத் தெருவாக வசூலித்தும் ஒரு லக்ஷம் ரூபாய் சேர்த்து, அதைப் பஞ்ச நிவாரணத்திற்குப் பயனபடுத்தும் படி அளித்திருக்கிருர். இதுமாதிரி எல்லா நடிக நடிகைகளுமே சமூக சேவையில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி விட்டால், பிறகு, சினிமா உலகத்தினரை சமூகத்தினர் ஒரு தனி வர்கத்தினராய் கருதமாட்டார்கள் அல்லவா?

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அநுகூலமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 6-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
கிளை: 134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82, MAIN ST., கொழும்பு-11.

சிபாரிசு

ரா. வெங்கடசாமி

"முடிவாகச் சொல்லுகிறேன். என் கதைக்கு ஏற்ற கதாநாயகி நீ அல்ல! உனக்கென்று அது எழுதப் படவில்லை. தயவு செய்து இந்த விஷயத்தில் நீ என்னைத் தொந்தரவு செய்யாதே!" என்றான் எழுத்தாளன் சேகர்.

"ஆமாம்! அந்த நாற்பது வயது நடிகைதான் உங்கள் கதைக்கு ஏற்றவள். அவளையே நடிக்கச் சொல்லுங்கள். இனி உங்களைத் தொந்தரவு செய்ய நான் என்ன முட்டாளா? நம் உறவு நீடிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், இம்மாதிரி யெல்லாம் நடந்து கொள்ள மாட்டீர்கள் என நினைக்கிறேன்!" என்றாள் சுசீலா. அவள் பிரபல நடிகை அல்ல! நடிகை ஆக முயற்சி செய்து கொண்டிருப்பவள்!

"இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை சுசீ! இப்போது என் குறியெல்லாம் புகழ்மேல்தான். அதை அடைந்த பிறகுதான் எல்லாம்!" என்று கூறி விட்டு சேகர் எழுந்தான்.

"புகழ்! புகழ்!! புகழ்!!! எப்போதும் இதே பல்லவிதானா? இனி நான் உங்களிடம் இதைப்பற்றி பேசத் தயாராக இல்லை. நான் வருகிறேன். நான் எப்போது உங்களுக்குத் தேவை எனப்படுகிறதோ...அப்போது என்னிடம் வாருங்கள்!" என்று கூறிவிட்டு சுசீலாவும் அங்கிருந்து புறப்பட்டாள்.

"சுசீலா...இந்தா இதைக் கேட்டு விட்டுப் போ!" என்று சேகர் கத்தினான். அவள் திரும்பிவந்தால்தானே.... கார் புறப்படும் சப்தம்தான் அவன் காதுகளில் விழுந்தது. அடேயப்பா! சுசீலாவுக்குத்தான் எவ்வளவு கோபம்?

சேகர் ஒரு எழுத்தாளன். வாழ வசதி படைத்த காரணத்தால் அவன் எழுத்து வேலையில் தீவிரமாக இறங்கியிருந்தான். சுமாராக எழுதவரும் அவனுக்கு. அதைக்கொண்டு பெயரும் புகழும் சம்பாதிக்க எண்ணினான். சினிமா உலகைத் தவிர வேறெங்கு எளிதில் புகழ் சம்பாதிக்க முடியும்? இந்த யோசனையை அவனுக்குக் கூறியதே சுசீலா தான்! சுசீலா அவன் கல்லூரித்தோழி. சிறந்த நாட்டியக்காரி. அதிலே அவளுக்கு நல்ல பெயர். பெரிய குடும்பத்துப் பெண். சேகரின் எழுத்து அவளுக்குப் பிடித்திருந்தது. அவனுக்கு சுசீலாவின் நாட்டியம் பிடித்திருந்தது. பரஸ்பரம் புகழ்மாலைகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பிரிக்க முடியாத ஒரு பாசம் அவர்களிடத்தில் ஏற்பட்டிருந்தது. அதைக் காதல் என்றும் சொல்லிவிட முடியாது!

சுசீலாவின் நடனத்தைப் பார்த்த ஒரு பட முதலாளி, தாம் எடுக்கும் படத்தில் அவள் நாட்டியத்தைச் சேர்க்க விரும்பினார். தந்தையின் அனுமதியுடன் சுசீலா, சினிமா உலகில் காலடி எடுத்து வைத்தாள். நாட்டியத்தில் ஆரம்பித்து, சில்லறை வேஷங்கள்—செகண்ட் ஹீரோயின் இப்படியாக சினிமா உலகில் அவள் நிரந்தரமாகத் தங்கிவிட்டாள். பணத்தைப்பற்றிய கவலையா அவளுக்கு? கலையுள்ளம் படைத்தவள் அவள்.

சேகர் இந்த நேரத்தில் அருமையான கதையொன்றை சிருஷ்டித்திருந்தான். சுசீலா அதைப் படித்துப் பார்த்துப் புகழ்ந்தாள். அவளுக்கு ஒரு ஆசை, அந்தக் கதையின் கதாநாயகியாகத்

தான் நடிக்க வேண்டும என்று! அவளால் அது சாத்தியமில்லா விட்டாலும் சேகரின் சிபாரிசுக்கு படத் தயாரிப்பாளர் செவி சாய்த்துத் தானே ஆகவேண்டும்? தான் சொன்னால் சேகர் கேட்காமலா போகிறுன் என்ற தைரியம அவளுக்கு! ஆனல் சேகரின் எண்ணம் வேறு விதமாக இருந்தது. தனது கதையில் பிரபல நடிகர்கள நடிக்கவேண்டும் என்று அவன் நினைத்தான். அப்போது சினிமா வானில் மிகவும் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருந்தவள், திருமதி விமல குமாரி! அவள் நடித்த படங்கள் சோடையாகப் போனதில்லை—அவள் பாடிய பாட்டுக்களை பிச்சைக்காரர்கள் கூட பாடிக் கொண்டிருந்தனர். பொதுவாக அவள பிரபலமடைந்தவள்! அவள் மீது தான் சேகரின் கண் விழுநதது. அவள் தன் கதையின கதா நாயகியாக நடிககச் சம்மதித்து விட்டால், தனக்குப் புகழ் நிச்சயம்! கதை படமாக்கப்படுவதைப் பற்றி அவன் கவலைப் படவில்லை. விமலகுமாரி நடிக்கிறேன் என்று ஒத்துக் கொண்டால் எந்தப் பட முதலாளியாவது படம் எடுக்காமலா போகிறுன்? தன் லட்சியத்தில் அவன் தைரியமாக முன்னேறினன்.

விமலகுமாரியை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவன் அதை நல்ல விதத்தில் உபயோகப்படுத்திக் கொணடான். தான ஒரு எழுத்தாளன் என்பதை மறைமுகமாக தெரிவித்துக் கொண்டான். எடுத்த எடுப்பிலே விமலகுமாரிக்கும் சேகரைப் பிடித்திருந்தது.

"வீட்டுக்கு வாருங்கள், சாவகாசமாகப் பேசலாம்!" என்று விமல குமாரியை சொல்லவைத்து விட்டான் சேகர் தனது பேச்சுத் திறமையினல்.

"ஏண்டா ஒரு நடிகையின் சிபாரிசினல்தான நீ முன்னேற வேண்டும்?" என்று அவன் நண்பன் ஒருவன் கேட்டான். அவனுக்கு சிபாரிசு வியாபாரம் பிடிக்காது.

"இந்தக் காலத்தில் சிபாரிசு இல்லாமல் எந்தக் காரியமப்பா நடக்கிறது? நான் எழுதிய கதை, நல்ல கதையென்று நானே சொன்னல் நன்ருக

இருக்குமா, இல்லை ஒரு பிரபல நடிகை சொன்னால் நன்ருக இருக்குமா? நடிகைக்கு இந்த விஷயத்தில் இருக்கும் 'வால்யூ! எனக்கிருந்தால் நான் என் அவளிடம் போகிறேன்?'' என்று பதில் சொன்னன் சேகர். அவன் சொன்னதும் நியாயமாகப் படவே அந்த நண்பன் பிறகு பேசவில்லை.

சேகர் தன் கதையை விமலகுமாரியிடம் கொடுத்தான். "நாளைக்குப் படித்து....உங்களுக்கு என் அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்!'' என்று விமலகுமாரி சேகரை தட்டிக்கழித்து விடவில்லை. கையில் கதையைப் பெற்றுக் கொண்ட மறு நிமிடமே படிக்கத் தொடங்கி விட்டாள். அவள் படித்து

முடிக்கும் வரை சேகர் பொறுமையோடு காத்திருந்தான், ஒரு மணி நேரம்! சேகர் கொஞ்சம் பொறுமைசாலிதான். இடையிடையே "சபாஷ்!"...."பிரமாதம்" "பேஷ்! பேஷ்!!" என்று விமலகுமாரி சொல்லிக் கொண்டிருந்தது, சேகருக்கு மனதில் நம்பிக்கையை சற்று தளிர்விட்டோடச் செய்திருந்தது. அப்பாடா! கடைசியாக விமலகுமாரியும் கதையைப் படித்து முடித்தாள்;

"மிகவும் நன்ருக இருக்கிறது மிஸ்டர் சேகர்!" என்ருள் விமலா. சேகரின் நம்பிக்கை இன்னும் கொஞ்சம் பலமடைந்தது.

"இதைப் படமாக எடுத்தால் நன்ருக இருககுமல்லவா?" என்று கேடடு வைத்தான் சேகர், பட்டால் படடடுமே என்ற எண்ணத்தில்.

"அதைத்தான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன், இதில் வரும் கதாநாயகியின் பாத்திரம் எனக்குப் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்ருள் விமலா.

சேகர் தனது திகைப்பை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"உங்களை மனதில் வைத்துத்தானே நான் இந்தக் கதையை எழுதினேன்!" என்று போட்டான் ஒரு போடு.

"நீங்கள் அதிகம் புகழுகிறீர்கள்!" என்ருள் விமலா கொஞ்சலாக.

"என்ன நடக்கிறது இங்கே?" எனக் கேட்டுக் கொண்டே அங்கு வந்தார் சண்முகம் பிள்ளை. அவர் விமலாவின் கார்டியன்....எல்லாம்!

"இந்தக் கதையைப் படித்துப் பாருங்கள். 'ஐடியா' புதிதாக இருக்கிறது! நல்ல கற்பனை" என்று சொல்லிக் கொண்டே போனுள் விமலா.

சேகர்....மனக் கண்ணுல் தனக்கு பின்ருல் வரும் புகழைப்பற்றி நினைத்துப் பார்க்க ஆரம்பித்து விட்டான். அவன் போட்ட திட்டம் பாதி வெற்றி. இனி படம் எடுக்க வேண்டியதுதான் பாக்கி. அதற்குத்தான் அஸ்திவாரம் போட்டாகி விட்டதே!

* * *

சுசீலா இந்த விஷயத்தைக் கேட்டு கொதித்தெழுந்தாள். விமலா, சேக

ஜம்பனு—நந்தி தயாரிப்பான் "குடும்பம்" படத்தில் ஆதிகால நக்ஷத்திரம் சந்தான லக்ஷ்மியையும் நீங்கள் சந்திக்கலாம்.

ரின் கதையில் கதாநாயகியாக நடிப்பது அவளுக்கு சற்றும் பிடிக்கவில்லை. உண்மையில், கதையில் வரும் தாயாரின் வேஷத்திற்குத்தான் அவள் லாயக்கு என்பது சுசீலாவின் எண்ணம். இதில்தான் அபிப்பிராய பேதம், சேகருக்கும்-சுசீலாவுக்கும். அவள் ஆரம்பத்தில் கூறியபடி கோபித்துக் கொண்டு போய் விட்டாள்.

* * *

விமலகுமாரிக்கு ஏற்ற பட முதலாளி ஒருவர் இருக்கத்தான் செய்தார்.

"ஆஹா....நீங்கள் சொன்ன பிறகு.... படம் எடுக்கா விட்டால் எப்படி? மேலும் நல்ல கதை என்று சொல்லுகிறீர்கள்? அவசியம் எடுக்கலாம்!" என்று அவர் தாதாஸ்து போட்டு வைத்தார். நடிகை முயற்சிப்பதனுல்....பணம் கொஞ்சம் குறைவாக வாங்கிக் கொள்வாள் என்று அவர் எண்ணியிருக்கலாமல்லவா? விமலா என்ன சொன்ன போதிலும், அவர் கதையைப் படித்து விட்டுத்தான் தன் திருப்தியைத் தெரிவித்தார். பண விஷயம், யோசனை அவசியம்!

எந்த வேளையில் சேகர் அந்தக் கதையை எழுதினனே, ஆரம்பத்திலிருந்து ஏகத் தடங்கல்கள். அதில் மிகவும் முக்கியமானது சுசீலாவின் மனஸ்தாபம். புகழ் சமான்யமாகக் கிடைக்கக் கூடியதா? அந்த எண்ணத்தில்தான் அவன் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டான். சுசீலாவை எளிதில் சமாதானம் செய்துவிடலாம் என்ற நினைப்பு. என்ன இருந்தாலும் அவளும் பெண்தானே?

* * *

ஏற்கெனவே திட்டமிட்டபடி விமலாதான் கதாநாயகியாக நடித்தாள். கதையில் கதாநாயகிக்கு வயது பதினறு. விமலாவுக்கு முப்பது வயது. ரசிககோடிகள் இதையா கவனிக்கப் போகிறுர்கள்? விமலாவுக்கும் இன்னும் பெயர் இருந்ததல்லவா? கஷ்டப்பட்டு, தன் வாழ்க்கையை வளமாக்கிக் கொண்ட ஏழைப் பெண்ணெருத்தியின் கதை அது!

படப்பிடிப்பு ஆரம்பமாகி தொடர்ந்து நடந்தது. சேகர் கதை, வசனம், பாடல் ஆகிய மூன்றின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டான். எல்லாமே திருப்திகரமாக நடந்துகொண்டு வந்தன. சேகர் அடிக்கடி யோசனை கேட்பதற்காக விமலாவினல் அவள் வீட்டிற்குஅழைக்கப்பட்டான். அவர்கள் தொடர்பு இதனுல் நெருங்கியது. ஒரு தடவை விமலா சேகரைக் கூப்பிட்டு அனுப்பினள். அப்போது படம் முடிவடையும் தறுவாயில் இருந்தது. விமலாவிடம் அடிக்கடி போய்ப் பேசிக்கொண்டிருந்தது சேகருக்குப் பிடிக்கவில்லை. மேலும் அடிக்கடி விமலா கொஞ்ச ஆரம்பித்து விட்டாள் அவனிடம். இதை அவன முன்பே எதிர்பார்த்ததுதான். இருந்தாலும் புகழுக்காகப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

வேண்டா வெறுப்பாக சேகர் விமலாவின் வீட்டிற்குள் நுழைந்தான். வழக்கம்போல அவள் இனிமையான குரலில் அவனை வரவேற்ருள்.

"வாருங்கள்! ஒரு முக்கியமான விஷயம் குறித்து உங்களிடம் பேசத்தான் வரவழைத்தேன்" என்ருள் விமலா.

"சொல்லுங்கள் காத்திருக்கிறேன்!"

"சினிமாவுலகில் நீங்கள் இந்தக்

கதையின் மூலமாகத்தானே காலடி எடுத்து வைக்கிறீர்கள்?''

''ஆமாம்! அதுவும் உங்களின் பலத்த சிபாரிசினால். நீங்கள் இல்லாவிட்டால் நான் இவ்வளவு தூரம் முன்னேற முடியுமா?'' என்று உயர்வு நவிற்சியில் பேசினான் சேகர்.

''அப்போது நீங்கள் எனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வீர்கள்?''

''பேஷாக!'' என்றான் சேகர், அவள் என்ன கேட்டுவிடப் போகிறாள் என்ற தைரியத்தில்.

''சேகர்!'' குழைவான குரலில் கூப்பிட்டாள் விமலகுமாரி!

''உம்!''

''உங்கள் கதையை நான் எதனால் படம் எடுக்க சிபாரிசு செய்தேன் என்று நினைக்கிறீர்கள்?''

''அது மிகவும் நன்றாக இருந்த காரணத்தால்''

''அதுதான் இல்லை. நான் உங்கள் மீது கொண்ட காதலால். உங்களைக் கண்டவுடன் என் உள்ளத்தில் காதல் மலர்ந்துவிட்டது. எனக்கு ஏற்ற லட்சியக் கணவர் நீங்கள் தான். என்னை மணந்து கொள்ளத் தடையொன்றும் இல்லையே?''

''என்ன?'' என்று கேட்டவாறு தன் இருக்கையை விட்டு எழுந்துவிட்டான்.

''ஆமாம்! இதில் ஒன்றும் ஆச்சர்யமில்லை. நான் கேட்பது தவறா?''

''தவறென்றும் இல்லை. ஆனால் நீங்கள் கேட்பது சாத்தியமான காரியமா என்றுதான் யோசிக்கிறேன்'' என்றான் சேகர்.

''அவசரப்படவில்லை. நீங்கள் யோசித்து பதில் கூறுங்கள்.''

''இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? பொருத்தமாக இருந்தால் யோசிக்கலாம். நமக்குள் பொருத்தமே இல்லையே!'' என்றான் சேகர்.

''மனப் பொருத்தம் இருந்தால் மட்டும் போதும்!'' என்று கூறினாள் விமலகுமாரி. அதற்குள் அங்கு அவளுடைய கார்டியன் ஸ்தானத்தில் இருந்த சண்முகம் வரவே சேகர் விமலகுமாரியிடம் விடை பெற்றுக்கொண்டான்.

விமலா சொன்னதை நினைக்கும் சேகருக்கு சிரிப்புத் தாங்க முடியவில்லை. அவள் அவனைவிட வயதில் மூத்தவள். அவளுக்கு அவன்மீது காதலாம்! இதென்ன மேல் நாடா? எதையும் மேலெழுந்த வாரியில் பார்த்துப் போவதற்கு? விமலாவைப்பற்றி அவன் மனதில் எந்த விதமான எண்ணமும் எழவேயில்லை. பிறகு எங்கே, அங்கு காதலுக்கு இடம்? தான் முன்னுக்கு வர அவள் உதவியாக இருந்தால் போதும் என்று அவன் நினைத்தான். ஆனால், பிரதியாக அவள் அவன் காதலை அல்லவா கேட்கிறாள்? நினைக்க நினைக்க அவனுக்கு வியப்பாக இருந்தது. ஒரு பக்கம் சிரிப்பு வேறு வந்தது! நடிகைக்குக் காதல் வேறா?

படம் முடியும் வரை விமலா கல்யாணப் பேச்சை எடுக்காதவாறு கவனித்துக் கொண்டான் சேகர். படம் முடிந்தவுடன் அவள் கண்களில் படாமல் இருக்க அவனுக்கா வழி தெரியாது?

''புதுமாதிரியான கதை'', ''பிரபல நடிகர்கள் நடிப்பது'',''அதிகமான பொருட்செலவில் தயாரிக்கப் பட்டது'' என்றெல்லாம் படத்தைப்பற்றி விளம்பரங்கள் பறந்தன.

சேகருக்குத் தன் கதையில் அதிக நம்பிக்கைதான். இருந்தாலும் ஜனங்கள் அதை நன்றாக ரசித்தால்தானே அவனுக்குப் புகழ். விமலாவும் தன் பாகத்தை நன்றாகத்தான் செய்திருந்தாள்.... ஆனால்........?

படம் வெளி வந்தது. விசிறிகளும், அதைப் பிரமாதமாகத்தான் எதிர்பார்த்தார்கள். ஒரே ஏமாற்றம். படம் படுதோல்வி!

''இந்தக் கிழவிக்கு யார் குமரி வேஷம் கொடுத்தார்கள்?''

''படம் விமல குமாரியினால்தானப்பா 'பெய்லியர்'!''

''கதை பரவாயில்லை!''

''பாட்டுகள் என்ன! கேட்கச் சகித்தால் தானே?'' — இப்படியாகப் பல விமர்சனங்கள்.

சேகர் தலையில் கை வைத்தவாறு உட்கார்ந்து கொண்டான். அவன் எதிர்பார்த்த புகழ்....அவனைவிட்டு எங்கோ போய்விட்டது. இனி இவன் தான் அதைத்தேடிக்கொண்டு ஓடவேண்டும்!

உம்! மனதில் என்னென்ன ஆசைக் கோட்டைகள்! எல்லாம் தூள் தூளாகி விட்டனவே, இந்த படத் தோல்வியினால்! விமலகுமாரியை இனி சந்திக்க அவனுக்குப் பைத்தியமா என்ன? கதை எழுதியதற்குப் பணம் மட்டும் ஒழுங்காகக் கிடைத்துவிட்டது. அதுவரைக்கும் திருப்திதான்.

இரண்டொரு தடவை விமலகுமாரி அவனுக்குச் சொல்லி அனுப்பினாள். அவன் 'போனால்தானே? அவளுக்குப் பயந்து தனது இருப்பிடத்தை, வேறு இடத்திற்கு மாற்றிக் கொண்டான். அவளுக்குக்கூட அவன் பயப்படவில்லை. ஆனால், அவள் காதலுக்குத்தான் அவன் பயப்பட்டான்!

*   *   *

படத்தினால் ஏற்பட்ட தோல்வியில் சேகர் மனம் உடைந்துபோனான். சாதாரணமாக அவன் எழுதும் சிறு கதைகள்கூட இப்போது எந்தப் பத்திரிகைகளிலும் வெளிவரவில்லை.எழுதினால் தானே வரும்! சுசீலா அவனை அறவே மறந்துபோய்விட்டாள். 'அவள் வார்த்தைகளுக்கு செவி சாய்த்திருக்கலாமே' என அவன் இப்போது எண்ணினான்.

சாப்பிடுவது; தூங்குவது இதைத் தவிர வேறெந்த வேலையும் அவனுக்கு இப்போது இல்லை. முயன்றால் வெற்றி கிடைக்காமலா போய்விடும்? இன்னொரு தடவை பட உலகை முற்றுகை இட்டுப் பார்க்கலாமே என அவன் நினைத்தான்........ஆனால் அதற்குக் குறுக்கே இருப்பவள் விமலகுமாரியல்லவா? அவளுக்கு பதில் சொல்லி விட்டல்லவா மேலே போக வேண்டும். இரண்டொரு அத்தியந்த நண்பர்களைத் தவிர வேறு யாருக்கும் அவன் இருப்பிடம் கூடத் தெரியாது.சே! என்ன சங்கடமான நிலை!! அவன் மனம் சுசீலாவைப்பற்றி நினைக்கும்போது மட்டும் சற்று வேதனை அடையும்! அவளுக்குக் கூடவா மன்னிக்கும் மனப்பான்மை யில்லை?

இருந்தது, அதனால்தான் அவள் சேகரைத் தேடிப்பிடித்து,அழைப்பு அனுப்பியிருந்தாள். சேகரின் கண்கள் வியப்பினால் விரிந்தன! அழைப்பு நாடகத்திற்கு. கொட்டை எழுத்துகளில் அச்சடிக்கப்பட்ட அந்த அழைப்பு, சுசீலா 'நாடக மன்றத்தாரி'ன், "துணிந்தால் துயரமில்லை" என்ற நாடகத்தின் ஆரம்ப விழாவிற்கு சேகரை வரச்சொல்லிக் கோரியது. சந்தேகமில்லை. அதை சுசீலா தான அனுப்பியிருந்தாள்! அவள் நாடகக் கம்பெனி ஸ்தாபித்து........நாடகமும் நடத்த ஆரமபிதது விட்டாளே? அவளுககு என்று யார் கதை எழுதிக் கொடுததிருக்கிறார்களோ? பெயரே புதிதாக இருககிறதே!

சேகர், அழைப்பை ஏற்று நாடகத்திற்குப் போககூடாதென்று தீர்மானித்தான. போனால் அவளுக்குப் பணிந்து விட்டதாகத்தானே அர்த்தம்? அவன் மனம் இரண்டுக்குமிடையே தடுமாறியது. 'போகவேண்டும்—போகக்கூடாது என்ற இரண்டுவகை அபிப்பிராயங்கள். கடைசியில போவதென்றுதான் தீர்மானித்தான.

நாடகத்து அன்று சேகர், தலையில் ஒரு துண்டு கட்டிக்கொண்டு போனான். பணம் கொடுத்து டிக்கெட் வாங்கினான். யாரும் கவனிக்காத ஒரு பக்கததில் போய் அமர்ந்து கொண்டான்.

ரூ. 5க்கு 15 ஜ்வெல் கைக் கடிகாரம்

ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனாவும், 15 ஜ்வெல் கைக் கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம்.

தபால் செலவு ரூ. 1—8—0.

National Swiss Watch Supplier
Begum Bagh, (G.M.) Meerut.

அனைவருக்கும் இலவசம்

நீங்கள் காம ரோகத்தினால் பிடிக்கப்பட்டிருந்தால் எங்களுக்கு உங்கள் உடல் நிலை பற்றிய பூரா விவரங்களையும் எழுதுங்கள். பல வைத்தியங்களில் பணத்தைச் செலவிட்டு மனம் உடைய வேண்டாம். எங்கள் ஜாபிதாவைப் படித்துப் பாருங்கள். சொற்பப் பிரதிகளே கைவசமுள்ளன. ஆதலால் இன்றே எழுதிக் கேளுங்கள்.

SANYASI PHARMACY
(G.M.) Shahdara, (டில்லி).

நாடகத்திற்கு ஏற்பாடுகள் ஏக தடபுடலாக இருந்தன. சேகர் வாயைத் திறந்து அபிப்பிராயம் சொல்லக் கூடாத நிலையில் இருந்தான்.

நாடகம் ஆரம்பமாகியது. சேகர் தன் கவனத்தை மேடைமீது செலுத்தினன். காட்சி ஜோடனைகள் எடுத்த எடுப்பிலே மிகவும் நன்ருக இருந்தன. நாடகத்தின் ஆரம்பம் சேகருக்குத் திகைப்பை அளித்தது. காரணம் அது அவன் கதை போலவே யிருந்ததுதான! நடக்க நடக்க அவனுக்கு வியப்பு அதிகமாகியது. முழுக்க, முழுக்க, அவன் எழுதியது தான். வசனங்கள்கூட அவனுடையதே! பெயர் தான் வேறு. எழுந்து கூச்சலிடலாமா என்று யோசித்தான. ஜனங்கள் ஏக அமர்க்களமாக ரஸித்துக் கொண்டிருக்கும்போது, இவன் கூச்சல் எங்கே கேட்கப் போகிறது? இன்னெரு அதிசயம் என்னவென்ருல், கதாநாயகியாக சுசீலாவும், அவள் தாயாக விமலகுமாரி நடித்ததுதான்.

சேகருக்கு இதையெல்லாம் பார்க்க மனம் குழம்பிவிடும் போலிருந்தது. நாடகத்தை ஜனங்கள் மிகவும ரசித்தார்கள். சினிமாவில் தோல்வி கணட அதே கதை நாடகத்தில் மட்டும் ஏன் வெற்றி காணுகிறது?

சேகர் நாடக முடிவில் எழுந்துபோய் விட நினைத்தபோதுதான், அவன் மூர்ச்சை போட்டு விழக்கூடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அவனை மேடைக்கு அழைத்துப்போக, நாடக அமைப்பாளரே வந்துவிட்டார். அவர் வேறு யாருமில்லை. படம் தயாரித்த முதலாளிதான்!

சேகர் மறுக்க முடியாமல் அவருடன் போனன். அவரைப் பார்த்தவுடன் சேகருக்கு ஓரளவு உண்மை விளங்கியது. சினிமாவில் இழந்த பணத்தை இநத விதத்தில சம்பாதிக்கிருர் எனறு நினைத்தான்! அவர் அனுமதியோடுதான் நாடகம் நடக்கிறது! இனி அவன் என்ன செய்யமுடியும்? அவன்தான் கதைக்குப் பணம் வாங்கிக் கொண்டானே! அதை எப்படியும் நடத்த, வாங்கியவருக்கு உரிமை உண்டல்லவா?

சேகரும்—பட முதலாளியும் மேடையை அடைந்ததும் திரை விழுந்தது. கடைசிக் காட்சி மட்டும் பாக்கி இருந்தது. முதலாளி பேசத் தொடங்கினர்.

"இந்த மகத்தான கதையை சிருஷ்டித்தவர் இவர்தான். இவர் பெயர் சேகர். சினிமாவில் தோல்வி கண்ட இதே கதையைத் தன்னுல் வெற்றியுடன் நடத்திக் காண்பிக்க முடியும் என்று திருமதி சுசீலா சொன்னதன் பேரில, நான் முழுமனதுடன் அனுமதி கொடுத்தேன். சொன்னது போல செய்து காட்டியதற்கு உங்கள் சார்பாக சுசீலாவுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும் இந்த நாடகத்தில் நடித்த பிரபல நடிகை விமலகுமாரிக்கும எனது நன்றி"—என்று முடித்தார்.

ஜனங்கள் ஆரவாரம் செய்தனர். சேகர் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து, உள்ளே போனன். கடைசி காட்சி நடந்தவுடன் நாடகம் முடிந்தது, மகத்தான வெற்றியோடு.

சேகர் மிகவும் சங்கடமான நிலையில் அங்கு நின்றுகொண்டிருந்தான். முதலாளியிடம சொல்லிக் கொண்டு போகலாம் என்ருல் அவரைக் காணேம். சொல்லாவிட்டால் போகிறது என்று தீர்மானித்து அவன் திரும்பியபோது, சுசீலாவும், விமல குமாரியும் நினறு கொண்டிருந்தார்கள்.

"வாருங்கள், வீட்டுக்குப் போகலாம்!" என்று சுசீலா அவனை அழைத்தாள்.

"என்னை மன்னித்து விடுங்கள் சேகர். நான் உங்களை பயமுறுத்தி விட்டேன்" என்று சிரித்துக் கொண்டே கூறினுள் விமலகுமாரி. அவள் கணவர் சண்முகம் அங்கு வந்தார். அவள் சுசீலாவின் அனுமதியோடு அவனிடம் அப்படி நடித்தாள்.

"பரவாயில்லை!" என்ருன் அவன்.

விமலா போய்விட்டாள், தன் கணவரோடு. காரில் ஏறி உட்கார்ந்தான் சேகர், சுசீலாவோடு. கார் புறப்பட்டது. இடபோது அவனுக்கு எல்லாம் புரிந்தது.

"உங்களுக்கு வேண்டிய புகழ் இப்போது யாரால் கிடைத்திருக்கிறது?" என்ருள் சுசீலா திடீரென்று.

"உன்னுல்தான்!"

"அதற்கு நீங்கள் பிரதி உபகாரம் என்ன செய்யப் போகிறீர்கள் எனக்கு?" என்ருள் சுசீ.

"உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு, வாழ்க்கை முழுவதும் கஷ்டப்படப் போகிறேன்" என்ருன் சேகர்.

இருவரின் சிரிப்பொலியும் சுற்றிலும் மிகவும் பலமாகக் கேட்டது.

வாழ்த்துகிறோம்

"பரதேசி" என்ற புனைபெயரைக் கொண்ட வி. ஜி. பார்த்தஸாரதி ஆகஸ்ட் மாதம் 28ம் தேதி, குமாரி சத்யபாமாவைத் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார் காரைக்குடியில்.

கிடங்குத் தெருவில் பிரபலமான ஸ்ரீ பாலசுப்ரமண்யம் அண்டு கம்பெனியின் முதலாளி கே. பி. ஷண்முகம் பிள்ளை தமது மகள் செல்வி. மஹாலக்ஷ்மி அம்மாளை, செல்வன் மயிலை பி. சம்பந்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். சென்ற மாதம் 2ம் தேதி சிறப்பாக நடந்த இத் திருமணத்தில் ராதா-ஜயலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

பிரபல எம். எஸ். பட்டணம் பொடி தயாரிப்புக் கம்பெனியான மோஹன் கம்பெனி முதலாளி ஏ.எஸ். குருஸ்வாமி நாடாரின் மைத்துனர் சிரஞ்சீவி சௌந்தர பாண்டியன், சௌ. ஆவுடைத்தங்கத்தை நாயகியாக அடைந்தார். இந்த விவாகம் சென்ற மாதம் 8ம் தேதி வெகு சிறப்பாக தேனீயில் நடந்தது.

சென்ற மாதம் 9ம் தேதி, மதுக்கரை புக் ஸ்டால் ஏஜண்ட் சிரஞ்சீவி பி. டி. கோபால்சாமி, சௌ. கன்னியம்மாளை, செட்டிபாளையத்தில் மனைவியாக ஏற்றுக் கொண்டார்.

அதே தினம், சென்னை சாரி அட்வர்டைஸிங்கின் அதிபர் ஜி. கே. சாரி, தமது மகன் இ. கே. கோபாலனின் உபநயனக்கல்யாணத்தைத் திருமலையில் விமரிசையாக நடத்தினர்.

கண்டவர் அனைவரும பிரமிக்கும்படி கோலாகலமாக ஒரு விவாகம் நடைபெற்றது கும்பகோணத்தை அடுத்த இஞ்சிக் கொல்லையில். சென்னை மயிலையிலுள்ள பிரபல 'ராதா ஸில்க் எம்போரி'யத்தின் முதலாளி ஆர். கே. ராதாகிருஷ்ண செட்டியாரின் மூத்த புத்திரர், சிரஞ்சீவி ஆர். கோதண்டராமன் பி. காமின் திருமணம்தான் அது. திருநாகேஸ்வரம் ஜி. கே. திருவேங்கிட செட்டியாரின் மகள் சௌ. பெருந்தேவிதான் மணமகள். விவாகத்தன்று மாலையில் எம். கே. தியாகராஜ பாகவதர் கோஷ்டியாரின் இன்னிசைக் கச்சேரியும், இரவில் சாயி-சுப்புலக்ஷ்மியின் பரதநாட்டியக் கச்சேரியும் நடைபெற்றன.

வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் மானேஜரான சிரஞ்சீவி ஏ. எஸ். மணி, எம்.ஏ.,பி.எல்., சௌ. ஜெயலக்ஷ்மியை சென்னை, சேத்துப்பட்டில் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

சினிமாப் பத்திரிகை எழுத்தாளர் சிரஞ்சீவி வி. கல்யாணகிருஷ்ணன், சௌ. கர்ப்பகத்தை சென்னை, மயிலையில் மணந்து கொண்டார்.

ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார் தம் மகள் சௌ. சுசீலாவை காரைக்குடி பாங்கர் - முத்துக் கருப்பன் செட்டியார் மகன் சிரஞ்சீவி சிதம்பரத்திற்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

சுதேசமித்திரன் பத்திரிகை ஆசிரியர் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸனின் புத்திரரும், மேற்படி பத்திரிகையின் ஜெனரல் மானேஜருமான ஸி. எஸ். நரசிம்மன் கிரஹஸ்தரானார். மணமகள் சௌ. பிரமீளா, மாடர்ன் ரேடியோ கம்பெனியின் முதலாளி டபிள்யு. ஆர். ராமரத்னத்தின் மகள். விவாகத்தன்று டி. என். ராஜரத்னத்தின் நாதஸ்வரக் கச்சேரியும், மறு நாள் கிரஹப்பிரவேசத்தில்



சிரஞ்சீவி ஆர். கோதண்டராமன், சௌ. பெருந்தேவி.

எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றன.

மேற்கண்ட முகூர்த்தங்கள் அனைத்தும் சென்ற மாதம் 9ம் தேதி நடைபெற்றன.

கும்பகோணம் ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸ்ரீ. எஸ். ஏ. ஐய்யாசாமி செட்டியார் செப்டம்பர் 9-ந் தேதியன்று திருவானைக்காவலில் தம் குமாரர் சி. எஸ். ஏ. ஷண்முகத்துக்கும், ஸ்ரீ. எஸ். சங்கிலி செட்டியார் குமாரத்தி சௌ. சுசீலாவிற்கும் சிறப்பாகத் திருமணம் நடத்தி வைத்தார். ஸ்ரீ. பி. டி. ராஜன் மணமக்களை வாழ்த்திப் பேசினார். திருமணத்திற்கும் பல ஜில்லாக்களிலிருந்தும் பிரபல வர்த்தகர்களும் தொழில் அதிபர்களும் நீதிபதிகளும் உந்தியோகஸ்தர்களும் பிரமுகர்களும் ஏராளமாக வந்திருந்து மணமக்களை மகிழ்வித்தனர். ஸ்ரீலஸ்ரீ தருமபுர ஆதின தம்பிரான் மணமக்களை வாழ்த்தி பிரசாதம் அனுப்பியிருந்தார்.



சிரஞ்சீவி ஷண்முகம், சௌபாக்கியவதி சுசீலா.

அன்று மாலையில் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களால் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. திருமணத்தின்போது நாதஸ்வர இசை விருந்தளித்த வித்வான்கள் வீருசாமி பிள்ளைக்கும், தண்டபாணி தேசிகருக்கும் பொற்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

மணமக்கள் அனைவருக்கும் 'குண்டூசி'யின் உளமார்ந்த கனிந்த ஆசிகள்.

சிரஞ்சீவி சிதம்பரம், சௌபாக்கியவதி சுசீலா.

அதிருஷ்டபலா

மைசூர், அஸ்வத்தா புரொடக்ஷன்ஸார் தங்களது முதல் தயாரிப்பான "அதிருஷ்டபலா" படத்தை கன்னட பாஷையில் தயாரிப்பதற்கான ஆரம்ப பூஜையை சென்ற மாதம் 10ம் தேதி டாக்டர். பி. ஜி. தாஸ் தலைமையில் நடத்தினார்கள். இப்படத்தின் தயாரிப்பாளர் ந. சித்தய்யா. இப்படத்தின் டைரெக்ஷனை, சி. எஸ். எம். நாயுடு என்பவர் மேற்கொண்டிருக்கிறாராம்.

சங்கமம்

[54-ம் பக்கத் தொடர்ச்சி]

தனித்த காலேஜ் வாழ்க்கை திவாகரனை இன்னும் நாசமாக்கியது. எனக்கும் அவனுக்கும் இடையே ஏற்பட்ட அகழியோ ஆழங்காண முடியாதபடி ஆகிவிட்டது. என்னை அவன் இப்பொழுது ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. அவனை அண்டி வயிறு வளர்க்கும் போக்கற்ற ஜடங்களாக நானும் யமுனாவும் இருந்து வந்தோம.

கோட்ஸே மாமாவுக்கு அளித்த வாக்குறுதிகளில் முதலாவது இப்படி உருப்பெறாமல் போயிற்று. மற்றொன்றையாவது நிறைவேற்ற வேண்டாமா? சில வருஷங்களுக்கு முன்பே யமுனா ஒப்பற்ற அழகுடன் கல்யாணத்துக்குத் தயாராகி விட்டாள். ஆனால், தேசாந்திரம் போன அண்ணா திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்றானமே; பெண்ணின் வயசைக் கணக்கிட்டு, அவள் மணப் பிராயத்தை அடைந்திருப்பாளென்று, அவன் ஒருகால் சமீபத்தில் வரக்கூடும். அவன் வந்த பிறகு இத் திருமணத்தை நடத்தலாம் என்று நாட்களைக் கடத்தி வந்தேன்.

ஆனால், நான் எதிர்பார்த்தவாறு அண்ணா திரும்பி வரவேயில்லை. திவாகரனோ திமுதிமுவென்று வளர்ந்துவிட்டான். பருவக் காற்று வேறு இவ்விஷயத்தில் அவனைத் திசை திருப்பிவிட்டு விடலாகாதே யென்று ஒருநாள் அவனிடம் கல்யாண விஷயத்தைப் பிரேரித்தேன்.

“என் கல்யாணத்தைப் பற்றி நீ ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை, அம்மா” என்று அவன் முகத்தில் அடித்தாற்போல் பதிலளித்தான்.

“நான் கவலைப்பட வேண்டியிருக்கிறது அப்பா; அதனால்தான் அதுபற்றிப் பேசினேன்” என்றேன் நான் அடக்கமாக.

“உனக்கு எத்தனை தடவை சொல்வது அம்மா; என் காரியங்களில் நீ தலையிடக் கூடாது என்று?” என அவன் கோபம் பொங்க உரைத்தான்.

“ஆனால் நான் யமுனாவைப் பற்றிக் கவலைப்பட வேண்டியிருக்கிறதே!”

கொள்ளேகாலம் பட்டுச் சேலை தயாரிப்பில் புதிய முறைகளை சிருஷ்டித்து, உங்கள் நவீனத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதில் புகழ்ப் பெற்றவர்கள்

ராதா ஸில்க் எம்போரியம்

14, சன்னதி தெருவு

மைலாப்பூர் :: மதராஸ்-4.

போன் : **84188**

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? எங்கேயாவது தக்க வரனைப் பார்த்து நிச்சயம் செய். கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன்."

"என்ன? அவளுக்கு வரன் பார்ப்பதா? அவள் உனக்காகவே வளர்ந்து வருகிறாள் என்பது தெரியாதா?"

திவாகரன் இதைக் கேட்டு கேலியாக நகைத்தான். "ஓஹோ! இது என்ன புதுத் திட்டம்?"

"என் திட்டம் எதுவும் இல்லை அப்பா; உன்னைப் பிள்ளையாகக் கொண்டவரின் விருப்பம் அது. அதை நிறைவேற்றி வைப்பதாக அவருக்கு நான் வாக்களித்திருக்கிறேன்."

"சும்மா அளக்காதே அம்மா. நீ எதற்காக இந்த முடிச்சைப் போடப் பார்க்கிறாய் என்பது எனக்குத் தெரியும்."

"அப்படியானால் நான் பொய் சொல்கிறேன் என்று நினைக்கிறாய்? உனக்கு என் வார்த்தையில் நம்பிக்கையில்லையென்றால், வேண்டுமானால் நம் வக்கீல் ஷிண்டேயைக் கேட்டுப் பார்."

"ஆமாம்; வேலிக்கு ஓணான் சாட்சி! எனக்கு யாரையும் கேட்க வேண்டாம் அம்மா. கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவன் நான். ஆகவே, அது என் இஷ்டத்தைப் பொருத்தது. எனக்கு இந்தப் பீடையைக் கட்டிக்கொள்ளப் பிரியமில்லை. போதுமா? பேச்சை நிறுத்து இனிமேல்."

"ஐயோ! அப்படியானால் உன் வளர்ப்புத் தந்தைக்கு நான் அளித்த வாக்குறுதி என்ன ஆவது?"

"யாரிடம் கதைக்கிறாய்? வாக்குறுதியாம் வாக்குறுதி! என்னை என்ன ஒன்றும் அறியாத முட்டாள் என்று நினைத்துக் கொண்டாயா? உன்னுடைய சூழ்ச்சியை நான் அறிந்து கொண்டு விட்டேன், அம்மா; இந்தப் போக்கற்ற பெண்ணை என் கழுத்தில் கட்டி, அவளுடைய அத்தை என்ற முறையில் நீயே என் சொத்துக்களுக்கு அதிகாரியாகிவிடப் பார்க்கிறாய்."

13415

"அட கடவுளே!" என்று அலறினேன் நான். திவாகரன் என்னை இவ்வளவு கேவலமாக மதிப்பிடுவான் என்று நான் கனவிலும் கருதவில்லை. வேறொருவளானால் 'சீ, நீயும் ஆச்சு; உன் சொத்தும் ஆச்சு' என்று வெளியே போயிருப்பாள். ஆனால் என்னைத்தான் கடமை கட்டிப் போட்டிருந்ததே! அதிலும் இந்தக் கல்யாண விஷயத்திலாவது திவாகரனை எப்படியும் இணங்கச் செய்துவிட வேண்டுமென்ற தீவிரமும் எனக்கு ஏற்பட்டது. ஆகவே, அத்தீவிரத்தின் வேகம் தள்ள, என்ன பேசுகிறோம் என்பதை உணராமல், "ஆமாம்; அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். உன் சொத்துக்களுக்கு அதிகாரியாக எனக்கு உரிமை உண்டு; ஏனென்றால் அதில் சரிசமமான பங்கு என் யமுனாவுக்கும் உண்டு; ஆகவே, எப்படியும் அவளை உன் மனைவியாக்கியே தீருவேன்" என்று கத்திவிட்டேன்.

ஐயோ! நான் ஏன் அப்படிப் பேசினேன். அதனால் நான் சற்றும் எதிர்பார்த்திராத இன்னொரு விபரீதமும் அல்லவா ஏற்பட்டுவிட்டது! ஆம்; என்னுடைய அந்தத் தீவிரமான பேச்சு, திவாகரனின் சந்தேகம் மூண்ட மனத்திற்கு ஒரு சூழ்ச்சியின் முன்னறிவிப்பாகப்பட்டுவிட்டது. எங்கே எங்களுடன் வசித்தால், யமுனாவை அவன் கெடுத்துவிட்டதாகக் கதை கட்டி, நான் அவளை அவன் தலையில் வைத்துக் கட்டி விடுவேனோ என்று பயந்து கொண்டு, அவன் தனியே வாசம் செய்யத் துணிந்துவிட்டான். தவறை உணர்ந்து நான் எத்தனை கெஞ்சியும் அவனைத் திருப்ப முடியவில்லை.

இரண்டொரு தெருக்களுக்கு அப்பாலிருந்த ஒரு வீட்டை அவன் தற்காலிகமாக வாடகைக்கு அமர்த்திக் கொண்டு வசிக்க ஆரம்பித்தான். புதிதாக ஒரு பங்களாவைக் கட்டுவதற்கு அவன் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்ததாகவும் எனக்குத் தெரியவந்தது.

நான் என்ன செய்ய முடியும்? என்னுடைய சொற்களும் செயலும் அவனுக்கு வேம்பாக, விஷமாகத் தோற்றும் நிலையில் சும்மா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பதே நலம் என்று பேசாமலிருந்து விட்டேன்.

(தொடரும்)

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 45, Armenian Street, Madras—1.

44 ஆண்டுகளாக
புகழ் பெற்ற

மேரிராம் பற்பொடி

சகலவித தந்த நோய்களையும்
அறவே ஒழிக்க வைத்திய
முறைப்படி தயாரிக்கப்படுகிறது

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ.
(REGD.)
214 & 215, மேலமாசி வீதி • மதுரை

டின், பாக்கெட் இருவித சைஸ்களில் கிடைக்கும்.

ஸ்டாக்கிஸ்டுகள் :

மு. ப. ராமச்சந்திரன் செட்டியார் & பெ. வி. மு. முத்துசாமி செட்டியார், பெரிய கடை வீதி, திருச்சி.

என். பி. சுப்பிரமணிய முதலியார், பெரிய கடை வீதி, மன்னார்குடி.

V. குப்புசாமி முதலியார், ஆண்டர்சன் பேட்டை, கோலார் தங்கவயல்.

தேவர் கதம்ப நிலையம், 316, மொகல் வீதி, இரங்கூன், பர்மா.

இலங்கை ஏஜண்டு :

M. C. A. ஹாதர் அன் கோ.,
20, டாம் தெரு : : கொழும்பு.

ஸ்டாக்கிஸ்டுகள் இல்லாத இடங்களுக்கு ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

GUNDOOSI Regd. No. M. 4924 October 1954
Registered as a News Paper in Ceylon.